ஓம்
சிவமயம்

அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்சோதி

திருச்சிற்றம்பலம்

என்ற

# சிற்சபையும் பொற்சபையும்





ஆசிரியர்

**திரு. பொன். கோவிந்தசுவாமி**
(ஓய்வுபெற்ற மலேசியா பள்ளி வித்யாதரிசி)



[விலை ரூ. 2-00

அன்பளிப்பு:—

கோவிலூர் ஆதீனம்,

நூல்நிலையம்.

கோவிலூர்

ஓம்
சிவமயம்

அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்சோதி

## திருச்சிற்றம்பலம்

என்ற

# சிற்சபையும் பொற்சபையும்

(அவனியின் அந்தரங்க அருளரசு)
சிதம்பர ரகசியம்



ஆக்கம்

**திரு. பொன். கோவிந்தசுவாமி**
(ஓய்வுபெற்ற மலேசியா பள்ளி வித்யாதரிசி)

ஆசிரியர்


சிவஞானபோதம் மறைபொருள் விளக்கம்
சின்முத்திரையின் மறைபொருள் தத்துவ விளக்கம்
வள்ளலாரும் வேதாந்தமும்

1977
அடக்கவிலைப் பதிப்பு



[விலை ரூ. 2-00

முதற்பதிப்பு: அக்டோபர், 1977

**திரு. பொன். கோவிந்தசுவாமி**

செயலாளர்

பிரம்மஞான கிளைச்சங்கம்

கடலூர்.

(பதிவு எண் 47/1883)

16-B. தெற்கு கவரைத்தெரு
மஞ்சக்குப்பம், கடலூர்-1
தென்னாற்காடு மாவட்டம்.

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2. போன்: 25416.

# The Occult Hierarchy
# &
# Spiritual Dynasty

**The Inner Government of the World**

(in the light of Theosophy)





By

**Pon. GOVINDASWAMY**

(Retired Inspector of Schools, Malaysia)

Author of

**The Esoteric meaning of Sivagnana Bodham**

**&**


**The Occult Truths of Dhakshnamurthi Chin Mudhra in the light of Theosophy.**

# பிரம்மஞான சங்கத் தலைவர்கள்



சித்புருஷி ஞானயோகினி

**H. P. பிளவட்ஸ்கி அம்மையார்**



சிவராஜயோகி

**பிஷப் C. W. லெட்பீட்டர்**



கர்மயோகினி

**அன்னிபெஸண்ட் அம்மையார்**

**முக்கண் படைத்த மும்மூர்த்திகள்**

ஓம்

## திருச்சிற்றம்பலம்

என்ற

## சிற்சபையும் பொற்சபையும்

# கடவுள் வாழ்த்து

எல்லாம் செயல்கூடும் என் ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே ஏத்து

### விநாயகர் துதி

முன்னவனே, யானைமுகத்தவனே, முத்திநலம்
சொன்னவனே. தூயமெய்ச் சுகத்தவனே, மன்னவனே,
சிற்பரனே, ஐங்கரனே, செஞ்சடையம் சேகரனே
தற்பரனே, நின்தாள் சரண்.

### முருகன் துதி

தேவரும், தவமுனிவரும், சித்தரும், சிவன், அரி, அயன் ஆகும்
மூவரும் பணி முதல்வ, நின் அடியில் என்முடியுற வைப்பாயேல்
ஏவரும் எனக்கு எதிரிலை, முத்திவீடு என்னுடையது கண்டாய்
தாவரும்பொழில் தணிகையம் கடவுளே! சரவணபவகோவே!!

### பரசிவ வணக்கம்

திருவிளங்க. சிவயோக சித்தியெலாம் விளங்க,
சிவஞான நிலைவிளங்க, சிவானுபவம் விளங்க
தெருவிளங்கு திருத்தில்லை திருச்சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்க, ஒளி சிறந்த திருவிளக்கே!
உருவிளங்க, உயிர்விளங்க, உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க, அருள் உதவுபெரும் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்க,
வயங்கும் மணிப்பொதுவிளங்க, வளர்ந்தசிவக் கொழுந்தே.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனும் கரத்துஅமர் அமுதே

அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே. (திரு அருட்பா)

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. (திருமந்திரம்)

## சக்தி வழிபாடு

பன்னும் பல்வேறு அண்டமெலாம் அவ்வண்டப் பரப்பினின்று
துன்னும் சராசரம் யாவையும் ஈன்று அதுசூழ்ந்தும் உன்னை
இன்னும் இளந்தையழியாத கன்னிகையென்பது என்னே
மன்னும் சுகானந்தவாழ்வே வடிவுடை மாணிக்கமே. (அருட்பா)

## ஸ்ரீகண்டபரமேஸ்வரர் துதி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன், அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். (சேக்கிழார்)

## குருநாதர் துதி

தந்தைதாய் ஆவானும் சார்கதியிங்கு ஆவானும்
அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானும் எந்தம் உயிர்
தான் ஆகுவானும், சரண் ஆகுவானும் அருள்
கோன் ஆகுவானும் குரு.

## சர்வ சமய தோத்திரம்

அணுத்தொறுங் கரந்தே அசைந்திடுமுயிரே
உயிர்தொறுங் கரந்தே சுடர்விடுஞ் ஜோதியே
அனைத்தையும் ஒன்ருய் அணைத்திடு முள்ளன்பே
நின்னுடன் தானும் ஒன்றென வுணருமவன்
அப்பெற்றி அனைத்திலும் தன்னை காண்பதறிவான்.

(திரு பொன். கோ.)

# நான்முகம்

சர்வசீவகோடிகளும் இறவா நிலையையும், அறிவையும், ஆனந்தத்தையும் நாடித் தேடிச் செல்கின்றன. காரணம், அவைகளின் இயற்கைத் தன்மை சத்து, சித்து, ஆனந்தமாகும். ஏனெனில், சீவர்கள் சத்து, சித்து, ஆனந்தமாகிய முக்குணங்களையும் தமது சொரூப இலக்கணமாகக் கொண்ட அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனின் அம்ஸங்களாகும். இறைவன் ஜோதிப் பிழம்பு என்றால் சீவர்கள் அதனினின்றும் தோன்றிய அக்னிப்பொறிகளாம். ஆதலால் இந்த சத்து, சித்து ஆனந்தம் ஆண்டவனிடம் அளவற்று அகண்டாகார பரிபூரணமாயும், சீவர்களிடம் அவை அளவிற்கு உட்பட்டு கண்டமாயும் அமைந்துள்ளன.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (குறள்)

என்ற இறை நியதிக்கு (Divine Law) இணங்கவும், தண்ணீர் தன்சமமட்டத்தை அடைய பாய்வது (Water finds its own level) போன்ற இயற்கை நியதியின் (Natural Law) படிக்கும், குறைவுடைய சீவர்கள் நிறைவுடை பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளை அடைய முயல்கின்றன.

அவ்வாறான பரிபூரண நிலையை அடைவதற்கான வழிகளைக் காட்டவந்ததே சமயங்கள், மதங்கள், மார்க்கங்களாகும். அவற்றுள் தலைசிறந்தது சநாதனதர்மமாகிய (The Eternal Divine Law) இந்து சமயமாகும். ஹிந்து என்றால் :—ஹ = சூரியன், இந்து = சந்திரன்; இவ்வுலக மானிடவர்க்கம் சூரிய லோக பிதுர்க்களாலும், சந்திரலோக பிதுர்க்களாலும் தோற்றுவிக்கப் பெற்று, அவர்களால் மக்களுக்கு கொடுக்கப் பட்ட சமயமாதலால் இதற்கு இந்துமதம் என்ற பெயர் வந்தது. மற்றும் இந்நாடு சூரியகுல, சந்திரகுல மன்னர்களால் ஆளப்பட்டு வந்த காரணத்தினால், இப்பாரத நாட்டிற்கு ஹிந்துஸ்தானம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

இந்த சநாதனதர்மமாகிய இந்து மதத்திற்கு வேதங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள், சித்தர் நூல்கள் முதலியன அடிப்படையாக அமைந்துள்ளன. மற்ற சமயங்கள் இதனின் கிளைகளாகும். வேதாகமங்கள் பரமாத்மா, சீவாத்மாக்களின் வரலாறுகள்; புராணங்கள் பிரபஞ்சத்தின் வரலாறுகள்; இதிகாசங்கள் தேசத்தின் வரலாறுகளாம். தோத்திர சாத்திரங்கள் அவற்றின் சாராம்சங்களாகும்.

இவ்வாறு வழிகாட்டிகளான சமயநூல்கள் பலதரப்பட்ட மக்களின் பல்வேறுபட்ட நிலைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன.

பக்குவர்களுக்கும் அதிகார புருஷர்களுக்கும் பரிபாஷைகளாகவும் குழூஉக்குறிகளாகவும், அபக்குவர்கட்கு இதிகாச புராணக்கதை களாகவும் சொல்லப்பெற்றுள்ளன. பரிபாஷைகள், குழூஉக் குறி கள் இவற்றின் அந்தரார்த்தங்களையும், மறைபொருட் தத்துவங் களையும் திவ்ய திருஷ்டிப்படைத்த மெய்ஞானிகளின் வாயிலாகக் கேட்டறிந்தாலல்லது அவற்றின் மெய்ப்பொருள்களைக்காண்பதரிது. அபக்குவர்கட்கு அவை வெறும் சொற்கள் மாத்திரமாக இருக்குமே தவிர அவற்றுள் பொதிந்துள்ள மறைபொருட்கள் விளங்கா.



சிவஞானபோதம் அருளிய திருச்சிற்றம்பல மெய்கண்டார்

12-ம் நூற்றாண்டில் அவதரித்த சிவஞானச் செல்வராகிய மெய்கண்டாருக்குப் பிறகு ஞானக்கண் படைத்த மெய்ஞ்ஞானிகள் யாரும் தோன்றிலர். ஆகவே சாத்திரங்களில் வரும் அநேக சொற் களின் மறைபொருள்கள் மறக்கப்பட்டு மறைந்துபோய், அவை வெறும் சொற்களாகவே நின்று விட்டன. ஆன்மீகத்திற் கல்லாது வெறும் சீவனார்த்தத்திற்காக தத்துவசாஸ்திர (Ph. D.) பட்டம்பெற

விரும்பி சாத்திரங்களை ஆராயும் புலவர்கள் சில சொற்களுக்கு உள்ளுணர்வின்றி, தங்கள் மனம்போன போக்கில் விளக்கங்கள் கூறி மக்கள் மனதை குழப்பிவிட்டனர். அவ்வாருன சொற்களில் ஒன்று தான் திருச்சிற்றப்பலம் என்ற சொல்லாகும்.

தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளை ஓதும்போது திருச்சிற்றம்பலம் என்று சொல்லிவிட்டு, பிறகுதான் ஓத ஆரம்பிக்கின்ருேம். ஓதி முடிந்தவுடன் திருச்சிற்றம்பலம் என்று சொல்லித் தான் முடிக்கின்ற மரபு இருக்கின்றது. ஏன் அவ்வாறு சொல்ல வேண்டும் என்று கேட்டால் அதற்கு சரியான பதில் கிடையாது. திருச்சிற்றம்பலம் என்ருல் இருதயத்திற்குள்ளிருக்கும் சிறு வெளி யென்று கவைக்குதவாத விளக்கங்கள் கூறக்கேட்டிருக்கின்றேன்.

“ சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவனடிக்கீழ் ” (மணிவாசகர்)


என்றபடி நாம் சமயசாத்திரங்களில் வரும் சொற்களுக்கு விஞ்ஞான ரீதியிலான விளக்கங்களை (Scientific Conception) அறியவேண்டும்; அல்லாது சும்மா சில பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டு அவற்றை கிளிப்பிள்ளைப்போல் ஒப்பிப்பதில் பயனில்லை. அவற்றை உள்ளுணர்வு அறிவு (Intuity Knowledge) கொண்டு அறியவேண்டும். அல்லது ஞானக்கண் கொண்டு அனுபவத்தில் கண்ட மெய்ஞ்ஞானி களின் நூல்களை படித்தாவது அறியவேண்டும். இதற்கு முன் ஜென்மாந்தர வாசனைவேண்டும். நுண்மாண் நுழை புலன் ஆற்றல் வேண்டும்; களிமண் மூளையில் தத்துவசாத்திரங்கள் ஏருதென்று பிளவட்ஸ்கி அம்மையார் கூறுகின்ருர்.

19-ம் நூற்ருண்டில் உலகம் உய்ய அவதரித்த திருவருட் பிரகாச வள்ளல் பெருமானும், மகரிஷிகளால் அமைக்கப்பெற்றதும், அவர் களிடம் ஞான தீட்சைப்பெற்றும், இறைஞானம் கைவரப் பெற்று முக்கண்படைத்த பிரம்மஞான சங்கத்தின் தலைவர்களும் இந்த திருச்சிற்றம்பலம் என்ருல் என்ன என்பது பற்றி கூறிய விளக்கத்தை தமிழில் கூற வந்ததே இந்நூலாகும். மேலும் இதிகாச புராணங் களிலும், மற்றைய சமய சாத்திரங்களிலும் இதைப்பற்றி கூறி யிருப்பவைகளை தொகுத்துக் கூறவந்ததே இந்நூலாகுமே அல்லாது எனது சொந்த கருத்தல்ல என்பதையும் கூறிக்கொள்கின்றேன். ஆன்மீகத்தில் ஆர்வமுள்ள சன்மார்க்க அன்பர்கள் படித்துப்பயன் அடைவார்கள் என்ற நம்பிக்கையுடன் எனது 77-ம் ஆண்டு நிறைவு நினைவு மலராக இந்நூலை வெளியிடுகின்றேன்.

எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள்)

16-B, தெற்குகவரைத்தெரு,
மஞ்சகுப்பம், கடலூர்-607001.
15 - 10 - 1977.

திரு. பொன். கோவிந்தசுவாமி
வள்ளலார் அடிமை.



ஆசிரியர்

**திரு. பொன். கோவிந்தசுவாமி**

தலைவர்

சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

கடலூர்.

(பதிவு எண் 28/76)

# திருச்சிற்றம்பலம்
## என்ற
## சிற்சபையும் பொற்சபையும்

## தோற்றுவாய்

இப்பிரபஞ்சத்திலுள்ள சித்தும் (அறிவு). அசித்தும் (சடம்) ஆகிய சராசரப் பெருட்கள் அனைத்தும் தோன்றி, நின்று, மறைவதைக் காண்கின்ருேம். சூரியாதி கிரகங்கள் அந்தரத்தில் நின்று பம்பரம் போன்று தன்னைத்தானே சுழன்றுகொண்டும், மற்றக் கிரகங்களையும் சுற்றிக்கொண்டும் வருவதையும் காண்கின்ருேம். அவ்வாறே வான வெளியிலுள்ள எண்ணிறந்த சூரியன்களும், கிரகங்களும் ஒரு நியதி (Law)யின் கீழ் இயங்கிக்கொண்டு வருவதையும் அறிகின்ருேம். இம்மகத்தான காரியங்கள் பேராற்றல் பெற்ற ஏதோ ஒரு சக்தியால் இயக்கப்பெற்று நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதையும் ஊகித்தறிகின்ருேம்.

இப்பேராற்றலும் பேரறிவும் பெற்ற சக்தியைத்தான் "கடவுள்" என்று எல்லா சமயமக்களும் போற்றிப் புகழ்ந்து பாடியாடித் துதித்துப்பரவி வணங்கி வழிபட்டு வருகின்றனர். கடவுள் எங்கும் நிறைந்தவர் (Omnipresent), எல்லாம் அறிபவர் (Omniscient) எல்லாம் வல்லவர் (Omnipotent) என்றும், அருவம், அருவுருவம், உருவம் ஆகிய தடத்த சொரூபமும், சத்து, சித்து, ஆனந்தம் என்ற இயற்கை சொரூபமும் உடையவர் என்றும் நிர்விகாரி என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன.

கடவுள் இப்பிரபஞ்சத்தை எவ்வாறு தோற்றுவித்தார், எவ்வாறு நிலைபெறச்செய்கின்ருர். எவ்வாறு ஒடுக்குவிக்கின்ருர் என்ற கேள்விகள் எழுகின்றன. இதுபற்றி சாத்திரங்களில் பலவாறு கூறப்பெற்றுள்ளன. இறைவன் நிர்விகாரியாதலால் தமது முத்தொழிலையும் குலாலனைப்போல் அல்லாமல், சிலந்தியைப்போல் செய்கின்ருர் என்று கூறுகின்றன. சிலந்தி தனது உடலினின்றே நூலை உற்பத்தி செய்து, தன்வலையை கட்டுவதும், பின் அவ்வலையின் நூலைத்தனக்குள்ளே இழுத்துக் கொள்வது போன்றும், இறைவன் தன்னுடைய அபின்ன சத்தியாகிய மாயையினின்றும் இப்பிரபஞ்சத்தை தோற்றுவித்து, பின் தன்னுள்ளேயே அதை ஒடுக்கிக் கொள்கின்ருன் என்றும்; மாயையின் முக்கூறுகளாகிய சுத்தமாயை, சுத்தாசுத்த

மாயை, அசுத்தமாயை இம்மூன்றும் இரைவனுக்கு எதிர் நிரையாக தூல, சூக்கும, காரண சரீரங்களாக அமைந்துள்ளன என்றும், இந்த சுத்தாசுத்த மாயாதத்துவங்கள் ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த தனு, கரண, புவன, போகங்கள் உளவென்றும் சாத்திரங்கள் கூறுகின்றன.

இறைவன் இப்பிரபஞ்சத்தை எவ்வாறு இயக்கிக் கொண்டிருக்கின்ருன் என்பதை சாத்திரங்கள் பல உபமான, உபமேயங்களால் விளக்கியுள்ளன. சூரியன் முன் பூக்கள் மலர்வதும், கூம்புதலும், வாடிவதங்கி உதிர்தலும்போல பிரபஞ்சம் இறைவன் சந்நிதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மெய்கண்டார் தமது சிவஞான போதம் என்ற நூலின் ஐந்தாவது சூத்திரத்தில் கீழ் வருமாறு அருளியுள்ளார் :—

விளம்பிய உள்ளத்து மெய், வாய், கண், மூக்கு (செவி)
அளந்தறிந்தறியா ஆங்கவைப்போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தங்கண்ட பசாசத்தவையே.

அதாவது காந்தத்தின் முன் இருப்பு அசைவதுபோலும், ஆன்மா (மனம்) முன்னிலையில் தனு கரணங்கள் தொழிற்படுவது போன்றும், சிவனின் சிற்சத்தி சந்நிதியில் அவன் சங்கற்ப மாத்திரையான் இப்பிரபஞ்சம் இயங்கிக் கொண்டிருக்கின்றது ; சிவன் நிர்விகாரி என்று அருளியுள்ளார். விரிவை எனது "சிவஞான போதம் மறை பொருள் விளக்கம்" என்ற நூலில் காண்கவும்.

இப்பிரபஞ்சம் இறைவனின் சங்கற்ப மாத்திரையான் தோன்றிற்று. அது அவனது சந்நிதியில் இயங்கிக்கொண்டிருக்கிறது என இரு கூறுகளாகக் கூறப்பட்டிருப்பதை கவனத்தில் கொள்ளவும். இவற்றை இரண்டு உதாரணங்களால் விளக்கலாம். ஏகாக்ரசித்த பயிற்சியால் மனேசக்தி (will power) கைவரப்பெற்ற ஒருவன் ஒரு பொருளை மேசையின்மேல் வைத்து அது நகர்ந்து செல்லவேண்டுமென்று சங்கல்பித்தால், யாரும் அதை தொடாமலே அது நகர்ந்து செல்லும். அவன் ஒரு கூட்டத்தின், முன்னிலையில் நின்று இதோ ஒரு பாம்பு வருகிறது என்று சொன்னல் எல்லோரும் உண்மையில் பாம்பு வருவாகக் கண்டு பயந்து இங்குமங்கும் ஓடுவார்கள். இவைகள் ஹிப்னுட்டிஸம், மெஸ்மெரிஸம் என்ற கண்கட்டு வித்தையால் ஏற்படும் நிகழ்ச்சிகள்.

ஒரு மந்திரவாதி தான் உபாசித்த ஒரு தேவதையைக் கொண்டு தான் நினைக்கும் காரியங்களை செய்து முடிப்பான். இது மந்திரவாதியின் ஏவலால் தேவதைகள் செய்யும் காரியம் அதாவது தான் செய்யாமல் மந்திரவாதி ஒரு தேவதையை அதிட்டித்து நின்று செய்யும் நிகழ்ச்சிகளாம். இதை பில்லி, சூனியம் என்பர்.

இந்த இரண்டு உபாமானங்களையும் ஒன்று சேர்த்து ஒரே உபமானத்தால் இறைவன் பஞ்சகிருத்தியங்களை எவ்வாறு செய்கின்றார் என்பதை பின்னால் நூலில் கூறுதும்.

இவ்வாறு சர்வ வல்லமை படைத்த சர்வேஸ்வரன் தன் சங்கற்ப மாத்திரையான் படைத்தலாதி பஞ்சகிருத்தியங்களை செய்கின்றான். அவனது ஆணையை மேற்கொண்டு தேவர்களும் மூவர்களும், மகரிஷிகளும் அவற்றை கொண்டு செலுத்துகின்றனர். அதாவது இறைவன் அவர்களை அதிட்டித்து நின்று பஞ்சகிருத்தியங்களை செய்விக்கின்றான். தேவர்கள் சீவர்களின் உடல் வளர்ச்சியையும, மகரிஷிகள் உயிர் வளர்ச்சியையும் கண்காணித்து வருகின்றனர்.

இறைவன் ஆணைகளை மேற்கொண்டு பஞ்சகிருத்தியங்களை செய்து வரும் மகரிஷிகளின் திருக்கூட்டத்திற்கே திருச்சிற்றம்பலம் அதாவது தெய்வீகஞானப் பேரவை (Occult Hierarchy) என்ற பெயராகும். இதுவே அவனியின் அந்தரங்க அருளரசு (The Inner Government of the World) ஆகும்.

இறைவன் எப்படி தன் சங்கல்ப மாத்திரையான் பஞ்சகிருத்தியங்களை நடத்துகின்றார்; எப்படி தேவர்களும் மகரிஷிகளும் அவனது ஆணையை மேற்கொண்டு ஐந்தொழிலை கொண்டு செலுத்துகின்றனர், என்பதை விளக்க வந்ததே இந்நூலாகும். இதற்கு என்னால் ஏற்கனவே வெளியிடப்பெற்ற தக்ஷிணாமூர்த்தியின் சின் முத்திரை தத்துவத்தின் மறைபொருள் விளக்கம் என்ற நூல் மிக்க அரண் செய்வதாகும்.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. — குறள்.

இன்றுவருமோ ! நாளைக்கே வருமோ ! அல்லதுமற்று
என்று வருமோ ? அறியேன் என்கோவே !! துன்றுமல
வெம்மாயையற்று, வெளிக்குள் வெளிகடந்து
சும்மாயிருக்கும் சுகம். — வள்ளலார்.

## பிரபஞ்ச வெற்றி

அருட்ஜோதியானேன் என்று அறையப்பாமுரசு
அருளாட்சி பெற்றேனென்று அறையப்பாமுரசு
மருட்சார்புதீர்ந்தேன் என்று அறையப்பாமுரசு
மரணம் தவிர்ந்தேன் என்று அறையப்பாமுரசு.
— வள்ளலார்.

௨

# தக்ஷிணமூர்த்தியும் குமாரக் கடவுளும்



கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.

— பரஞ்ஜோதி முனிவர்.

" நன்ருக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றுஆலின் கீழிருந்து அங்கு அறமுரைத்தான் காணேடி "

— மணிவாசகர்.

# நூல்

## திருச்சிற்றம்பலம்

என்ற

## சிற்சபையும் பொற்சபையும்

இறைவன் இப்பிரபஞ்சத்தை எவ்வாறு சிருட்டித்து இயக்கிக் கொண்டிருக்கின்ருன் என்பதை மேலே சுருக்கமாகப் பார்த்தோம். இப்போது அதை சற்று விரிவாக ஆராய்வோம். இறைவன் பிரபஞ்சத்தை தன் சங்கல்ப மாத்திரையான் சிருட்டித்து அதை தேவர்களையும் மகரிஷிகளையும் அதிட்டித்து நின்று இயக்கிக் கொண்டிருக்கிருர் என்று தனித்தனி இரண்டு உபமானங்களால் மேலே விளக்கினேம். அந்த இரண்டு உபமானங்களையும் ஒன்று சேர்த்து ஒரே உபமானத்தால் இங்கே விளக்குதும்.

ஒரு கட்டிடக்கலை நிபுணன் (Architect) ஒரு கட்டிடத்தை கட்டுவதற்குமுன், முதலில் அதன் அமைப்பு விபரங்களை தன் மனதில் கற்பனை செய்து பார்த்துக் கொள்கின்ருன். பின் அந்த கற்பனை கட்டிட அமைப்பை ஒரு தாளில் படமாக (Plan, Sketch) வரைந்து, அக்கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கச்சாப்பொருட்கள், தளவாடங்கள் முதலிய விபரங்களையும், அவற்றிற்கான செலவு திட்டங்களையும் (Estimate) போட்டு, அக்கட்டிடம் கட்டும் பொறுப்பை ஒரு பொறி இயல் வல்லுனரிடம் (Engineer) ஒப்படைத்து, அக்கட்டிட வேலை நடக்கும்போது அதை கண்காணித்துக் கொள்கின்ருர்.

அப்பொறிஇயல் நிபுணன் தன்கீழ் தச்சன், கொத்தன், கருமான், சித்தாள், மேற்பார்வையாள் முதலான சிப்பந்திகளை வைத்துக் கொண்டு, கட்டிடக்கலை நிபுணன் கொடுத்த படத்தின்படி அவன் ஆணையை மேற்கொண்டு அக்கட்டடத்தை கட்டி முடிக்கின்ருன். அதைக் கட்டி முடிப்பதுமட்டும் அல்லாமல், அது பழுது படும்போது அதன் மராமத்து முதலானவைகளையும் செய்து அதை பராமரித்து கண்காணித்து வருகின்ருன். கட்டிடக்கலை நிபுணன் நேரடியாக கட்டிடவேலையில் ஈடுபடுவதில்லை. பொறிஇயல் வல்லுனன் கட்டிடக்கலை நிபுணன் ஆணையை மேற்கொண்டு எல்லாவற்றையும் செய்து முடிக்கின்ருன்.

### ஈஸ்வர சங்கல்பம்

அதுபோல் இறைவனும் இப்பிரபஞ்சம் கற்பம் முதல் பிரளயம் வரை எப்படி தோன்றி, நின்று, மறைய வேண்டும் என்பதை ஆதியோடந்தம் விரிவாகவும், நுட்பமாகவும் முதல்மாதிரியாக (Archetype) தன் பிரஞ்ஞையில் சங்கல்பித்துக் கொள்கின்ருன். இதை

பிரபஞ்சம் தோன்றுவதற்குமுன் உள்ளதான (Divine Ideation) அகள நிலை என்பர். விரிவை என்னுல் வெளியிடப் பெற்ற "தக்ஷிணு மூர்த்தி சின்முத்திரையின் மறைபொருள் தத்துவ விளக்கம்" என்ற நூலில் காண்கவும்.

பின்னர் ஸர்வேஸ்வரன் "ஏகோ அஹம் பஹிஷ்யாம்" அதாவது ஏகனுகிய நான் பலவாக ஆவேனுகவும் என்று சங்கல்பிக்கின்ருன். அப்போது அவன் பிரஞ்ஞையில் சங்கல்பித்துக் கொண்ட மேலே சொல்லிய முன்மாதிரியான (Arche-type) கற்பனு காட்சி தோன்று கின்றது. இது இரண்டாவது நிலையான நிஷ்கள (அவ்யக்த) நிலை யாகும்.

பின்னர் ஸர்வேஸ்வரன் "ததைக்ஷத பஹுஸ்ஷ்யாம் ப்ரஜாயேய" அதாவது ஒன்ருகிய நான் பலவாய் தோன்றுவேனுக என்று சங்கல் பித்த மாத்திரையானே அவனினின்றும் ஒரு சத்தி (ஒளி) எழும்பி சித்தும் (Spirit) அசித்து (Matter) மாகத் தோன்றி அவற்றின் கலப் பால் இந்த சேதனுசேதனப் பிரபஞ்சம் தோன்றலாயிற்று. இதை சகள (வயக்த) நிலை என்பர். இதுவே அநாதி சிருஷ்டியாகும். விரிவை எனது "சிவஞானபோதம் மறைபொருள் விளக்கம்" என்ற நூலில் காண்க.

இந்த அநாதி சிருஷ்டியில் நால்வகை பிறப்பு, எழுவகைத் தோற்றம் எண்பத்துநான்கு லட்சயோனி பேதங்களுடன் பூத வர்க்கம், தாதுவர்க்கம், தாவர வர்க்கம், விலங்கு வர்க்கம், மானிட வர்க்கம், ரிஷிவர்க்கம், தேவர் வர்க்கம், கடவுள் வர்க்கம் முதலான பல்வேறு வர்க்கங்கள் படைக்கப் பெற்றன. இவைகள் எல்லாம் ஏகமாகிய பரம்பொருளினின்றே தோற்றுவிக்கப்பெற்றன. இது விஷயம் திருவருட் பிரகாச வள்ளலார் அருளிய மகாதேவமாலை என்ற பதிகத்தில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளது.

ஸர்வேஸ்வரனுடைய சங்கல்பம் என்னவென்ருல்

தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான் (திருவருட்பயன்)

என்றபடி எல்லாச் சீவகோடிகளும் தன்னைப்போல் பரிபூரணர்களாக ஆகவேண்டும் என்பதுதான் அவரது சங்கற்பமாகும். இதைத் தான் பரிணமம் அல்லது விகாசமுறை (Evolution) என்ற வளர்ச்சி மலர்ச்சி திட்டமாகும். இந்த பரிபூரணஞானுனுபவ நிலையை அடை வதற்காகவே இறைவன் உயிர்களுக்கு இந்த தனு, கரண, புவன, போகப்பிரபஞ்சத்தைக் கொடுத்து அவைகளை இந்த சம்சாரசாகரம் என்ற பள்ளியில் போக்கு வரவு புரிய விடுத்திருக்கின்ருர். இதற் காகவே அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அரு ளாகிய பஞ்ச கிருத்தியங்களை செய்துகொண்டிருக்கின்ருர். இதை தாயுமானுர்

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண்டிருந்த எமைவெளியில்விட்டு அல்லலாம்
காப்பிட்டு அதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்க விளையமுதமூட்டிப்
பெரிய புவனத்திடை போக்குவரவுறுகின்ற
பெரிய விளையாட்டமைத் திட்டு
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்டு
இடருற வுறுக்கி இடர்தீர்த்து
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொள்மின் என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே.

என்று அழகுற அருளியுள்ளார்.

இதுவரை ஸர்வேஸ்வரன் எவ்வாறு தம் சங்கல்பத்தினால் இப் பிரபஞ்சத்தை படைத்தார் என்பதைப் பார்த்தோம். இனி அவர் எவ்வாறு தேவர்களையும், மகரிஷிகளையும் இதர கடவுளர்களையும் அதிட்டித்து நின்று இந்த பஞ்ச கிருத்தியங்களை செய்விக்கின்றார் என்பதைப் பார்ப்போம்.

## ஆன்ம வளர்ச்சி

பசுக் (உயிர்)களுக்கு அணு என்ற ஒரு பெயரும் உண்டு. ஒன்றே சடமாகக்காணும் போது அணு என்றும், சித்தாகக்காணும்போது ஆன்மா வென்றும் வழங்கப்படுகின்றது. ஆதலால் ஒவ்வொரு அணுவும் ஒரு ஆன்மாவாகும். நாமும் ஒரு காலத்தில் அணுவாக இருந்திருக்கின்றோம், இதைப்பற்றி வள்ளலார் கூறுவதாவது,—

“ஆகாசம் அனாதி: அதுபோல் அதற்குக்காரணமான பரமாகாச சொரூபராகிய கடவுள் அனாதி. ஆகாயத்தில் அணுக்கள் நீக்கமற நிரம்பியிருக்கின்றன. அந்த அணுக்களுக்கு ஆன்மா என்றே பெயர் அதுவே சிற்றணுப்பசுவாம்.”

எனவே ஆன்மாக்கள் பூத (Elemental Kingdom) வர்க்கத்திலிருந்து தாது (Mineral Kingdom) வர்க்கத்திற்கும், தாதுவர்க்கத்திலிருந்து தாவர (Vegetable Kingdom) வர்க்கத்திற்கும், தாவரவர்க்கத்திலிருந்து விலங்கு (Animal Kingdom) வர்க்கத்திற்கும், விலங்கு வர்க்கத்திலிருந்து மானிட (Human Kingdom) வர்க்கத்திற்கும், மானிடவர்க்கத்திலிருந்து ஜீவன்முக்தர் (Super Human Kingdom) வர்க்கத்திற்கும், ஜீவன்முக்தர் வர்க்கத்திலிருந்து தேவர் (Devas

Kingdom) வர்க்கத்திற்கும், தேவவர்க்கத்திலிருந்து கடவுளர் (Divine Kingdom) வர்க்கத்திற்கும் பரிணும நியதிப் (Law of Evolution) படி பரிணமித்து வளர்ந்துகொண்டே போகிறது ; அதாவது இச்சை அறிவு, செயலோடு கூடிய ஆன்மாக்களின் பிரஞ்ஞை (உணர்வு consciousness) விரிவடைந்துகொண்டே (Expansion of consciousness) போகிறது. இந்த ஆன்ம வளர்ச்சிக்கு எல்லேயில்லே.

எப்படி சர்வகலாசாலே படிப்பு முடித்த ஒருவனுக்கு மேற்கொண்டும் கல்வி, சட்டம், வைத்தியம், பொறிஇயல், மின் இயல், முதலான பட்டப்படிப்புக்கள் இருக்கின்றனவோ அதுபோல் மோக்ஷமடைந்த சீவன் முக்தர்களுக்கு மேற்கொண்டும் வளர்ச்சிக்கான ஏழுவிதமான உயர்பதவிகளே அடையும் மார்க்கங்கள் உள்ளன. அவையாவன ;–

1. சர்வக்ஞ, சர்வவல்லப, சர்வேந்திரியாமியாகி, இதர கிரகங்களுக்கு அவதார புருஷர்களாகப்போதல்.
2. நமது அறிவிற் கெட்டா ஞானநிலேயடைந்து அனுக்கிரக சிருட்டியில் புகுதல்
3 இறைவனின் பரிக்கிரக சக்தி அதாவது வைப்பு சக்தியில் கலந்து அவரின் பஞ்சகிருத்தியங்கட்கு உபகரணமாகுதல்.
4. திருச்சிற்றம்பலத்தின் திருக்கூட்டத்தில்சேர்ந்து, இவ்வுலகில் தங்கி, அதன் அந்தரங்க அருளர சாட்சியில் பதவி ஏற்று இறைவன் சங்கல்பத்தை அறிந்து உலகில் அவனது ஆணேயை மேற்கொண்டு செயல்படுத்துதல்.
5. மற்ற உலகங்களுக்கு சென்று அங்கு நடைபெறும் விகாச முறைக்கு பரணும நியதிக்கு) உதவி புரிதல்.
6. தேவவர்க்க விகாசத்தில் (Devas Evolution) சேருதல்.
7. சிவகணங்களாக பரமேஸ்வரனுடைய படையில் சேருதல்.

இவ்வாறு விகாச முறையில் பரிணமித்துக்கொண்டு போகையில் மேல்படியில் உள்ளவர்கள் கீழ்ப்படியில் உள்ளவர்களே கைதூக்கி விடவேண்டும் என்பது இறைநியதி (Divine Law) யாகும். ஆதலால் நாம் மேல்நிலேக்குப் போகவேண்டுமேயானல் அதற்கு ஒரு சாதனம் நாம் நமக்கு கீழ்நிலேயில் இருக்கும் சீவர்களே கைதூக்கிவிட வேண்டியது நமது இன்றியமையாதக் கடமையாகும்.

## திருச்சிற்றம்பலம்

மேற்படி ஏழுவிதமான பதவிப் பிரிவுகளில் சில சீவன்முக்தர்கள் உலகார்த்தமாக தமக்குக் கீழ்படிகளிலுள்ள ஆன்மாக்களே மேல்நிலேக்கு கைதூக்கிவிடவும், இறைவனின் பரிணும நியதி (Evalution)க்கான ஆணேயை மேற்கொண்டு நடத்தவும் இவ்வுலகின் அந்தரங் அருளரசாட்சியில் (The Inner Government of the World) பதவி யேற்றுப் பணிசெய்ய திருச்சிற்றம்பலத் திருக்கூட்டத்தில் சேர்ந்தனர். அவர்களே மகரிஷிகளாவர்.

இப்போது திருச்சிற்றம்பலம் என்ற பதத்திற்கு என்னபொருள் என்பதை நாம் அறிதல்வேண்டும். சில சித்தாந்த வித்தகர்கள் சொல்வது போன்று சிற்றம்பலம் என்றால் சிறு+அம்பலம் அதாவது இருதயத்திலுள்ள சிறு வெளி என்ற பொருள் அல்ல. பின் அப் பதத்திற்கு என்ன பொருள் என்பதை திருவருட்பிரகாச வள்ள லாரின் அருள் வாக்கைக்கொண்டே அறிவோமாக. அம்பலம் என்பதற்கு சபை, வெளி என இருபொருள்கள் உள. ஆனால் இங்கு சபை என்றே பொருள் கொள்ளல்வேண்டும்.

மதுரையிலுள்ள திருஞானசம்பந்தமூர்த்தி மடத்திலிருந்த திருச் சிற்றம்பல ஞானியார் என்பவருக்கு வள்ளல்பெருமான் எழுதிய "இலக்கண வியனடை வழக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை" என்ற திருக்குறிப்பில் வள்ளல் பெருமான் வழங்கி யருளிய திருச் சிற்றம்பலம் என்பதின் பொருள் கீழ்க்கண்டவாறு விளக்கப் பெற்றுள்ளது

## பத்திரிகை

உணர்ந்தோராணியில் வகைய வின்ன வென்றவற்றிற் பின் மொழி மதிக்கு முன்மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழியடைசார் முன்மொழிஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு

பொய்யற் றெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ் செய்த ககன நிரெழிலென்றும், வான்வழங்கு பண்ணிகாரமென்றும், நாகச்சுட்டுமீனென்றும் வேறு குறிப்பதொன்று.

## விளக்கம்

பதிஞானத்தை உணர்ந்தோர் பரஞானத்தின் இயல்புக் கூறு கள் இன்னவை யென்றவற்றில் திருவிற்கும் சித்துக்கும் முன்னர்வரும் மொழியால் அம்பலம் ஆகும் திருச்சிற்றம்பலம் ஆகி தேவாரமாம் தமிழ்மறைக்கு முதலாகவும் ஈறாகவும் விளங்குவதுமாகி திருவும் சித்தும் சாரும் அம்பலம் எனவும் ஆகும் திருச்சிற்றம்பலத்திற்கு முன் விளங்கிய ஞானியாராகிய திருச்சிற்றம்பல ஞானிகட்டு

மெய்யம்பொடு தலைவளைத்து வணங்கச் செய்தவை திரு சித்து அம்பலம் என்று ஆம் திருச்சிற்றம்பலம் அன்றியும் திரு, சித்து, அம்பரம் ஆம் திரு சிதம்பரம் என்றும் வேறு வகையாகக் குறிப்பதும் ஒன்று.

சிதம்பரம் இராமலிங்கம்.

---

குறிப்பு :—இந்த விளக்கம் வடலூர் துறவி கந்தசாமி அவர்கள் நடத்தும் "அருட்சுடர்" என்ற பத்திரிக்கையில் சுடர்-13, கதிர்-2ல் பேராசிரியர் பா. ரா. கந்தசாமி M. A. B. O. L. அவர்களால் கொடுக்கப் பெற்றதாகும்.

"அம்பலம்" என்ற பதம் ஒரு சிலேடைச் சொல்லாகும். இதற்கு சபை, வெளி என இருபொருள்கள் உள. அவ்வாறே "அம்பரம்" என்ற பதமும் ஒரு சிலேடைச் சொல்லாகும். பொதுவாக அம்பரம் என்ருல் வான், அல்லது திசை என்ற பொருள். சில சமயங்களில் "ல" கரத்திற்கு "ர", கரமும், "ர" கரத்திற்கு "ல" கரமும் போலியாக வரும். உதாரணமாக மதில் - மதிர், சாம்பர் - சாம்பல், உலாவுதல் - உராவுதல் போலாம். அப்படி போலியாக வரும்போது "அம்பரம்" என்ருல் "அம்பலம்" என்ருகி சபை என்ற பொருளைத் தரும். ஆதலால் சிதம்பரம் என்ற சொல்லிற்கு சித் + அம்பர (ல) ம் ஞானசபை என்ற பொருளைக்கொடுத்து நிற்கும். தில்லைச் சிதம்பரம் என்ற விடத்து தில்லையிலுள்ள ஞானசபை என்ற பொருள் பட நின்றது.

இனி திருச்சிற்றம்பலம் என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று பார்ப்போம். திரு+சித்+அம்பலம்:—திரு=தெய்வத்தன்மை பொருந்திய; சித்(து)=ஞானம்; அம்பலம்=சபை. அதாவது தெய்வீக ஞானப்பேரவை (Occult Hierarchy & Spiritual Dynasty) என்றபொருளாம். அம்பலம், சபை, அவை, அரங்கம், சங்கம், கழகம் என்ற சொற்கள் எல்லாம் ஒரே பொருளைக்குறித்து நின்றன; அவை கூட்டம் என்ற பொருளைக் குறிக்கின்றன.

இத்திருச்சிற்றம்பலம் என்ற தெய்வீக ஞானப்பேரவை என்ருல் என்ன ?, அது எப்போது தோன்றிற்று ?, எங்கே இருக்கின்றது ? அதன் நோக்கங்களும், அலுவல்களும் என்ன ? அதன் அங்கத்தினர் கள் யார்? அதன் தலைவர் யார்? என்பனவைகளைப்பற்றி இனி ஆராய்வோம்.

இறைவன் உயிர்கள் நிமித்தம் பஞ்சகிருத்தியங்களை தன் சங்கல்ப மாத்திரையான் செய்கின்ருன் என்றும், அவை அவன் சந்நிதானத்தில் நடைபெறுகின்றன வென்றும் மேலே பார்த்தோம் ஏனெனில், அவன் நிர்விகாரியாதலால் தன் கரணங்களைக்கொண்டு செய்வதில்லை. ஓர் அரசன் தன் நாட்டை அவனே நேரில் ஆள்வதில்லை. அவன் கீழுள்ள மந்திரிப் பிரதானிகளும், மற்றப் பரிவாரங்களும், ஏவலாளர்களும் அரசியல் நிர்ணய சட்டப்படி அவன் இடும் கட்டளையை மேற்கொண்டு நாட்டு நிர்வாகத்தை நடத்துகின்றனர். அதுபோல இறைவனது சங்கற்பத்தின்படி அவன் கீழுள்ள எண்ணற்ற கடவுளர்களும், கணங்களும், தேவர்களும், மகரிஷிகளும் அவனது ஆணைகளை ஏற்று பஞ்சகிருத்தியங்களை நடத்துகின்றனர். சீவன் முக்தர்கள் முதல் கடவுளர்கள் ஈருக உள்ள இறைவனது பரிவாரங்கட்கே திருச்சிற்றம்பலம் என்ற பெயர் ஆகும்.

இதில் "அண்டத்திலுள்ளது பிண்டத்திலும்" (As above, so below) என்ற இறைநியதி (Divine Law)ப்படி ஹிரண்ய கர்ப்பம்

எனப்படும் நமது அண்டத்திலுள்ள திருச்சிற்றம்பலத்திற்கு கனக சபை, பொற்சபை அல்லது பொன்னம்பலம் என்றும், நமது உலகி லுள்ள திருச்சிற்றம்பலத்திற்கு ரஜிதசபை அல்லது வெள்ளியம்பலம் என்றும் சிற்சபை. சிதம்பரம் என்றும் பெயர்களாம். "சிற்சபையும் பொற்சபையும் எனதெனலாச்சே" என்கின்ரூர் வள்ளல்பெருமான். இத்திருச்சிற்றம்பலம் பிரபஞ்சம் தோன்றினபோதே அனுதியே ஏற்பட்டதொன்ரும்.

"மனுதிகட்கு அரிய மதாதீத வெளியாம்
அனுதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
கற்பம் பலபல கழியினும் அழிவுரு
அற்புதம் தரும்சபை அருட்பெருஞ்ஜோதி"

என்று அருளியுள்ளார் அருட்பிரகாச வள்ளலார்.

இந்த திருச்சிற்றம்பலத்தின் இருப்பை – சிதம்பர இரகசியத்தை முதன்முதல் வெளியிட்டவர் 19-ம் நூற்ருண்டு இறுதியில் நமது தமிழகத்தில் அவதரித்த திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளாவர். அவர் தாம் அருளிய திருவருட்பா வின் உயிர்நாடியாகிய அருட்பெருஞ்ஜோதி அகவலில் 29-வது வரியி லிருந்து 110-வது வரி வரையில் இந்த சிற்சபையைப்பற்றி இந்துமத பாங்கினில் இலைமறைப் பழமென இயற்றியுள்ளார் (பின் 2-ம் இணைப் பைப் பார்க்கவும்). அவருக்குப்பின் அவரால் ஏற்படுத்தப்பெற்ற பிரம்மஞான சங்கத்தலைவர்கள் – முக்கண் படைத்த சித்புருஷி ஞானயோகினி பிளவட்ஸ்கி அம்மையார், சிவராஜயோகி பிஷப் லெட் பீட்டர், கர்மயோகினி அன்னிபெஸண்ட் அம்மையார் ஆகிய மும்மூர்த்திகள் — மேல்நாட்டு பாங்கினில் விஞ்ஞான முறையில் விரிவாக விளக்கியுள்ளார்கள். நமது இதிகாசப் புராணங்களிலும் இதைப்பற்றிய விளக்கங்கள் இருக்கின்றன. இவற்றின் ஆதாரங் களைக்கொண்டே இந்நூல் எழுதப்பெற்றது.

இந்த திருச்சிற்றம்பலம் என்ற தெய்வீக ஞானப்பேரவை எல்லா சமயத்தவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற ஒன்ருகும். புத்த சமயத்தில் (1) புத்தம் சரணம் கச்சாமி (2) சங்கம் சரணம் கச்சாமி (3) தம்மம் சரணம் கச்சாமி என்ற தோத்திரங்களில் இடையிலுள்ள "நான் சங்கத்தில் சரணமடைகின்றேன்" என்ற துதி இந்த திருச் சிற்றம்பலத்தையே குறிப்பதாகும். புத்தர் காலத்தில் இந்தக்கருத்து வலுப்பெற்றிருந்தது.

கிறிஸ்தவ சமயத்திலும் (Assembly of the wise men of the East) அதாவது கீழ்நாட்டு ஞானிகள் திருச்சபை என்று சொல்லப் பெற்றுள்ளது. இஸ்லாமிய சமயத்திலுள்ள "ஹிகூமத்–ஏ இலாஹி" "கௌஸ்" "குதூப்" என்ற பதங்கள் இந்த திருச்சிற்றம்பலத்தை குறிக்கும் சொற்கள் எனக் கூறப்படுகிறது.

## அண்டத்தில் பொற்சபை

அண்டத்திலுள்ள திருச்சிற்றம்பலமாகிய கனகசபை (பொன்னம் பலம்)க்கு தலைவர் ஸ்ரீகண்டபரமேஸ்வரரின் அவதரமாகிய மகா மௌனகுரு தக்ஷிணாமூர்த்தியாகும். இவர் கல்லாலின் கீழிருந்து அன்று சனகாதிமுனிவர்கள் நால்வருக்கும் அறம் உரைத்தார் என்றும், சனத்குமாரருக்கு சின்முத்திரை மூலம் சிவஞானத்தை (Theosophy) போதித்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இதன் விரிவை என்னால் வெளியிடப்பெற்ற "தக்ஷிணாமூர்த்தி சின் முத்திரையின் மறைபொருள் தத்துவ விளக்கம்" என்ற நூலில் காண்கவும். கல்லால விருக்ஷம் என்பது ஞானவிருக்ஷம் (Tree of Divine Wisdom and Occult Hierarchy). இதன்வேர் மேல் நோக்கி தக்ஷிணாமூர்த்தியில் ஊன்றியும், கிளைகள் கீழ்நோக்கி நமது உலகில் பரந்தும் இருக்கின்றன.

இந்த பொன்னம்பலத்தில்-கனகசபையில் பிரம்மனாதி கடவுளர் களும்; சூரிய பகவானாதி நவக்கிரகங்களும் (Planetary Logoi); தக்ஷனாதி நவப்பிரஜாபதிகளும்; மரீசி; வசிஷ்டர், ஆங்கீரசர், அத்திரி, புலஸ்தியர், பலகர், கிருது முகலான மண்டல சப்தரிக்ஷி களும்; சிவகணங்களும்; அட்டதிக்கு பாலர்களும்; எண்ணற்ற தேவர்களும் (Devas & Angels) அங்கம் வகித்து பரமேஸ்வரரின் சங்கற்ப சிற்சத்தி ஆணைகளை மேற்கொண்டு அண்டத்தை ஆண்டு வருகின்றனர். இவர்களை யெல்லாம் அதிட்டித்து நின்றே இறைவன் பஞ்சகிருத்தியங்களை நடத்திவருகின்றார்.


## பிண்டத்தில் சிற்சபை

இதுவரை திருச்சிற்றம்பலத்தின் கனகசபை அல்லது பொன்னம் பலத்தைப்பற்றி பார்த்தோம். இனி நமது உலகம் சம்பந்தப்பட்ட ரஜிதசபை அல்லது வெள்ளியம்பலம் என்ற சிற்சபையைப்பற்றிப் பார்ப்போம். நமது உலகம் என்றபோது அது பூலோகம், புவர் லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனோலோகம், தபோலோகம் சத்தியலோகம் ஆகிய சப்த லோகங்களையும் அடக்கியுள்ளது. சிற் சபைக்குத்தலைவர் குமாரக்கடவுளாகும். இவரை முருகன், குமரன், கந்தன், ஆறுமுகன், காங்கேயன், சுப்ரமணியன் எனவும் அழைப்பர்.

சனத்குமாரரே குமாரக்கடவுள் (சுப்ரமணியர்) ஆகும். சுமார் 65 லட்சம் வருடங்களுக்குமுன் ஸ்ரீகண்டபரமேஸ்வரர் தக்ஷிணாமூர்த்தம் என்ற மௌனகுருகோலங்கொண்டு மேற்சொல்லியவாறு கல்லாலின் புடை அமர்ந்து சனத்குமாரருக்கு சின்முத்திரைக்குறியால் சிவ ஞானத்தைப் போதித்து, 9-வது நிர்வாணதீட்சையும் செய்வித்து சுப்ரமணியர் என்ற தீட்சாநாமத்துடன் சுக்கிரகிரகத்திலிருந்து நமது உலகிற்கு அதன் சிற்சபையின் (Occult Hierarchy) தலைவராக

வும், உலகின் அந்தரங்க அரசாட்சிக்கு (The Inner Government of the World) அரசராகவும் அனுப்பிவைக்கப் பெற்ருர். இதுபற்றி வேதங்களில் சனத்குமார: சம்ஹிதையில் "சநத்குமார: சுப்ர மணிய:", "சனத்குமார; சுப்ரமணிய:", "சநத்குமார: சுப்ர மணிய:" என்று மூன்று தரம் சொல்லப் பெற்றுள்ளது.

ஒரு கல்பத்தில் மூன்று குமாரக் கடவுளர்கள் உண்டென்றும், இப்போதிருக்கும் சனத்குமாரராகிய குமாரக் கடவுள் மூன்ருமவர் என்றும் பிரம்ம ஞான சங்க நூல்கள் கூறுகின்றன. இதன் உண்மை புராண இதிகாசங்களால் ஊர்ஜிதப்படுகிறது. எப்படியெனின் சுப்ரமணியருடைய அவதாரத்தைப் பற்றி இராமாயணத்திலும்,



பாரதத்திலும், கந்தபுராணத்திலும் கூறப் பெற்றுள்ளன. இம்மூன்றிலும் சுப்ரமணியருடைய அவதாரம் மூன்று விதமாகக் கூறப்பெற்றுள்ளன. சங்கத்தின் கூற்றும் கந்தபுராணத்தின் கூற்றும் குமாரக் கடவுளின் அவதாரம் ஒத்திருக்கின்றது. கந்தபுராணத்தில் குமரனுடைய தோற்றம் கீழ்க்கண்டவாறு சொல்லப் பெற்றிருக்கின்றது.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பது ஓர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய,

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினுல் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரணவத்தின்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந் தருளினுனே.

— கந்தபுராணம்

பிரம்மஞான சங்க நூல்களின் கூற்றை பின் 4-ம் இணைப்பில் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளின் ஒற்றுமையைக் கூர்ந்து கவனிக்கவும்.

இவர் ஸ்ரீகண்டபரமேஸ்வரரின் பிரதிநிதியாக அவரின் ஆஞ்ஞைப்படி சுமார் 65 லட்சம் ஆண்டுகளுக்குமுன் தம் திருக்கரத்தில் ஏந்திய ஒரு செங்கோலுடன் சுக்கிர கிரகத்திலிருந்து இமயமலைப் பிராந்தியத்தில் வந்திறங்கினுர். அக்காலத்தில் இமயமலைப் பிராந்தியம் ஒரு சமுத்திரமாக இருந்தது. இமயமலையின் சிகரங்கள் தீவுகளாகக் காணப்பட்டன. அத்தீவுகளின் ஒன்றிலுள்ள சரவணப் பொய்கையில் வந்திறங்கினுர். அத்தீவிற்கு ஷம்பாலா என்றும் சித்தாஸ்ரமம் என்றும், கலாபகிராமம் என்றும் புராணங்களில் வழங்கப்படுகின்றன. இப்போது இந்த இடம் இமயமலையின் வடபாரிசத்திலுள்ள கோபி பாலைவனத்தில் ஒரு சோலையாக (Oasis) காட்சியளிக்கின்றது.

அவரது சரீரம் மானைக்காட்டி மானைப்பிடிப்பது போன்று சுத்தமாயா தத்துவத்தைக் கொண்டு தமது கிரியாசத்தியினுல் ஆக்கிக்கொள்ளப் பெற்ற கோடி சூரியப்பிரகாசம் போன்ற தேஜோமயமான மானிடசட்டையாகும். அழகே வடிவெடுத்தாலென்ன, பதினுறு வயதுடைய யௌவன குமாரன்போன்ற அழகுடையவராம். அதனுல் அவர் முருகன் என்றும், குமரன் என்றும் அழைக்கப்படுகின்ருர். கருணைகூர்ந்த முகமும் பெருந்தகைமை வாய்ந்த இராஜகம்பீர தோற்றமாம். அவருடைய பிரஞ்ஞை (உணர்வு.) (Consciousness) சப்த உலகங்களிலும் வியாபித்து எங்கு என்ன நடந்தாலும் அறிந்தாங்கு அறியும் ஆற்றலுடையவர் என்றும் பிரம்மஞான சங்கநூல்கள் கூறுகின்றன.

குமாரக்கடவுளுடைய திருக்கரத்தில் ஏந்திநிற்கும் செங்கோல் ஸர்வேஸ்வரனின் சிற்சத்தியை பிரதிபாலிக்கும் ஓர் அபூர்வமான (இதுபோது மறைந்துபோன) ஓரிசல்கம் (Orichalcum) என்ற உலோகத்தினுலான கோல் என்றும், அது எப்போதும் தனல் போன்று சொலித்துக்கொண்டேயிருக்குமென்றும், அதன் மூலமாகவே ஈஸ்வரன் தனது சக்தியை உலகிற்கு செலுத்திக்கொண்டிருக்கின்ருர் என்றும் பிரம்மஞான சங்கநூல்கள் கூறுகின்றன. இந்த செங்கோலை சைவசமயத்தில் **வேல்** என அழைப்பர்.

இந்த வேலின் தோற்றத்திற்கு ஒரு புராணக்கதையுண்டு. வைவஸ்வன் என்று அழைக்கப்படும் சூரிய பகவானுக்கு தேவதச்சரான விஸ்வகர்மாவின் புதல்வி "சமிஞ்ஞை" மனைவியென்றும், அவள் தன் கணவருடைய தேஜஸை தன்னால் தாங்க முடியவில்லையென்று தன் தகப்பனாரிடம் முறையிட, விஸ்வகர்மா வைவஸ்வனைப் பிடித்து சாணையில் வைத்து எட்டு துண்டுகளாகத் துண்டித்தான் என்றும், அதில் கீழே விழுந்த ஒரு துண்டுதான் மார்த்தாண்டன் என்று அழைக்கப்படும் நமது சூரியன் என்றும், விஸ்வகர்மா வைவஸ்வன் என்ற சூரிய பகவானை சாணையில் வைத்து தீட்டின போது சிதறிவிழுந்த சிறிய துண்டுகளினால் விஷ்ணுவின் சக்கரம், சுப்ரமணியரின் வேல், இந்திரனின் வச்சிராயுதம் முதலிய தெய்வீக ஆயுதங்கள் செய்யப் பெற்றனவென்று புராணங்கள் கூறுகின்றன. வைவஸ்வருடைய குமாரர்தான் இப்போதைய வைவஸ்வத மனுவாகும். இதில் அநேக மறைபொருள் தத்துவங்கள் அடங்கியுள்ளன.

சுப்ரமணியருக்கு வள்ளி இச்சாசத்தியாகவும், தெய்வ யானை கிரியா சத்தியாகவும், வேல் ஞானசத்தியாகவும் விளங்குகின்றன. ஆதலால் வேலுடன் கூடிய சுப்ரமணியரைத் தொழுவார்களே யன்றி வேலில்லாத சுப்ரமணியரைத் தனித்து தொழமாட்டார்கள். ஆனால் சுப்ரமணியர் இல்லாமல் வேலைமட்டும் தனியாக வைத்து வணங்குவர். இந்த செங்கோலை வைத்துக்கொண்டுதான் குமாரக் கடவுள் தமது உலகை ஆட்சி செய்துகொண்டு வருகின்றார். வேலின் மாண்பு, மகத்துவம் சொல்லொணாதது.

சனத்குமாரர் சுக்கிரகிரகத்திலிருந்து இவ்வுலகில் வந்திறங்கிய போது அவருடன் சனகர், சனந்தனர், சனாதனர் ஆகிய மூன்று குமாரர்களும், நம்மால் நினைக்கவொணா உன்னத ஞானானுபவம் பெற்று பலநிலைகளிலுள்ள முப்பது பிரம்ம ரிஷிகளும் அவருக்கு உதவியாக இவ்வுலகத்திற்கு வந்தனர் என்றும் அவர்கள் எல்லோரும் இமயமலைப் பிராந்தியத்தின் வடபாரிசத்தில் குமாரக் கடவுளின் அருகில் ஆச்சிரமங் கொண்டிருக்கின்றனர்கள் என்றும் பிரம்ம ஞான சங்க நூல்கள் கூறுகின்றன.

இவ்வுலகின் அந்தரங் அருளரசாட்சியை குமாரக் கடவுள் மேற்கொண்டபோது அவரது பஞ்சகிருத்தியங்களுக்கு துணையாக இருந்து அவரது ஆணைகளை ஏற்று அரசாட்சியை கொண்டுசெலுத்துபவர்கள் மேலே சொல்லிய அவரது சீடர்களாகிய மூன்று குமாரர்களும், கணநாதர்களும், தேவர்களும், மகரிஷிகளும், முனிபுங்கவர்களும், சீவன் முக்தர்களுமாவர். தேவகணங்களுக்குத் தலைவர்கள் வீரவாகு முதலான நவவீரர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களின் கூட்டத்திற்கு குபேரன், வருணன், அக்னிதேவன், மாருதி, இந்திரனும் தலைவர்களாகும். மகரிஷிகளின் திருக்கூட்டத்திற்கு சப்தரிஷிகள் தலைவர்களாம்.

" அகத்தியன், புலத்தியன், அங்கீரசன், கௌதமன்
வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன் என்று
இசைந்த இவர்தாம் ஏழிருடிகளே "

என்பது பிங்கலந்தை. தேவர்கள் உடல் வளர்ச்சியையும் (Evolution of Form) மகரிஷிகள் உயிர் வளர்ச்சியையும் (Evolution of Life) கண்காணித்து வருகின்றனர்.

வாழையடி வாழையென வரும் இம்மகரிஷிகளாதி திருக்கூட்டத்திற்கே திருச்சிற்றம்பலம், சிற்சபை, சிதம்பரம், ரஜிதசபை, வெள்ளியம்பலம் (Occult Hierarchy and Spiritual Dynasty) என்ற பெயர்களாம். இவர்கள் ஐந்தொழில் ஆற்றலும் அட்டமாசித்திகளும் பெற்றவர்களாகும் இவர்களே இவ்வுலகின் அந்தரங்க அருளரசாட்சியை (The Inner Government of the World) கொண்டு செலுத்துபவர்கள். நக்கீரர் தாம் அருளிய திருமுருகாற்றுப்படையில் அறுமுகப்பெருமானின் பன்னிரு திருக்கரங்களின் அலுவல்களைப் பற்றி கூறிக்கொண்டு வரும் முறையில் எடுத்த எடுப்பில் முதன்முதல் "ஒரு திருக்கரம் முனிபுங்கவர்களை தாங்கிக்கொண்டிருக்கின்றது" என்று அருளியுள்ளார். இவர்களின் மகத்துவம் நம்மனோர்க்கு தெரியவராது. உடலில் சாம்பலைப் பூசிக்கொண்டு தெருவில் பாட்டுப் பாடிக்கொண்டு பிச்சையெடுக்கும் கூட்டத்தைத்தான் நாம் திருக்கூட்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். மகரிஷிகளின் மாண்பு சொல்லற்கரியது

துறந்தார் பெருமைதுணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று. (குறள்)

என்கின்றார் திருவள்ளுவர்.

இம்மகரிஷிகள் இமயமலைப் பிராந்தியத்திலும், இன்னும் உலகில் பல்வேறு பகுதிகளிலுள்ள மலைகளிலும், வனங்களிலும் ஆச்சிரமங்கள் நிருவி நிலைகொண்டிருக்கின்றனர். இத்திருச்சிற்றம்பலத்தின் திருக்கூட்டத்தினர்கள்தான் மக்களை ஆன்மீகத்தில் வழிகாட்டி அழைத்துச் செல்ல பல்வேறு தேசங்களில் பல்வேறு காலங்களில் மக்களிடைத் தோன்றி காலதேச வர்த்தமானங்கட் கிணங்கவும், அந்நாட்டு மக்களின் பரிபக்குவ நிலைகளுக்கேற்பவும் பல்வேறு சமயங்களையும், மதங்களையும், மார்க்கங்களையும், சமய நூல்களையும் வகுத்துச் சென்றனர். அதனாலன்றோ நாம் எல்லா சமயங்களின் அடிப்படை தத்துவத்தில் ஓர் ஒற்றுமையைக் காண்கின்றோம். வேதாகம புராண இதிகாச, தோத்திர சாத்திரங்கட்கெல்லாம் இத்திருச்சிற்றம்பலமே ஆதாரமாகும்.

வேதாகமங்களின் விளைவுகட்கெல்லாம்
ஆதரமாம் சபை அருட்பெருஞ்ஜோதி
எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி
கற்பனை முழுவதுங் கடந்து ஒளிதரும் ஓர்
அற்புதச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி. (அகவல்)

எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம்பலத்தே
இருந்ததென எனக்கருளி இசைவித்த இறையே.

(அருள்விளக்கமாலை)

என்று திருவருட்பிரகாச வள்ளலார் அருளியுள்ளார். அதனு லன்றே நாம் திருமுறைகளை ஓதும்போது திருச்சிற்றம்பலம் என ஆரம்பித்து, திருச்சிற்றம்பலம் என முடிக்கின்றோம். இதை வள்ள லாரே மேலே கூறிய "இலக்கண வியனடை வழக்கப்பாடுறுத்துவிக் கும் பத்திரிகை"யில் சுட்டிக்காட்டியருளியுள்ளார். ஆனுல் இதன் உண்மைகளை நாம் மறந்துவிட்டோம்.

எப்படி ஒருதாய் தன் பிள்ளைகள் குழந்தைப் பருவமாக இருக் கும்போது அதன் கைகளைப் பிடித்து நடப்பித்தும், பின் நடை வண்டியைக் கொடுத்து நடப்பிக்க வைத்தும், பிள்ளை பருவத்தில் ஆட்டங்களில் விளையாடவிட்டு, பின்நின்று கவனிப்பதும், கௌமார தசை அடைந்தபோது பல்வேறு போட்டி விளையாட்டுகளில் விட்டு பலமுறச் செய்கின்ருளோ அதேபோல் இத் திருச்சிற்றம்பலத்தின் மகரிஷிகள் மன்பதை குழந்தைப் பருவமாக இருந்தபோது அவர் களே மக்களிடை அரசர்களாகவும், அமைச்சர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும், குருக்கள்மார்களாகவும், ஆச்சாரியர்களாகவும் அவதரித்து மக்களை வழிகாட்டி நடப்பித்தனர். மன்பதை முதிர்ச்சி நிலை அடைந்தபோது அவர்கள் பின்னணியில் இருந்துகொண்டு மக்களை அவர்களது சொந்த சுதந்தர முயற்சியால் முன்னேக்கி செல்லும்படி செய்து கண்காணித்து வருகின்றனர். மக்கள் அற நெறியினின்றும் தவறி மறநெறியில் செல்லும்போது அவர்கள் மக்க ளிடைத்தோன்றி அதர்மத்தை நிக்ரகித்து தர்மத்தை நிலைநாட்டி, ஆன்மஞானேபதேசங்களைப் புகட்டிச் செல்கின்றனர்.

இத் திருச்சிற்றம்பலம் என்ற தெய்விக ஞானப் பேரவையில் அங்கம் வகிக்க ஞானதீட்சைகளும், நிர்வாண தீட்சைகளும் பெற்ற ஜீவன்முக்தர்களாக இருக்கவேண்டும். ஞான தீட்சையில் ஐந்து படிகளும், நிர்வாண தீட்சையில் ஐந்து படிகளும் உள. நிர்வாண தீட்சை பெற்றவர்களே அவனியின் அந்தரங் அருளரசாட்சியில் தங்கள் தீட்சா நிலைகளுக்குத் தக்க பதவிகளை வகிக்க தகுதியுடைய வர்களாவர். பத்து தீட்சைகளும் பதவிகளும் வருமாறு:—

1. முதல் ஞானதீட்சை பெற்றவர் — பரிவிராசகன்
2. 2வது ,, ,, — குடீசகன்
3. 3வது ,, ,, — பஹூதகன்
4. 4வது ,, ,, — ஹம்ஸன்
5. 5வது ,, ,, — பரமஹம்ஸன். (இவர்களே ஜீவன்முக்தர்கள் ரிஷிகள், முனிவர்கள்)

| | | |
|---|---|---|
| 6. | 6வது நிர்வாண தீட்சை | — மகரிஷிகள், மா முனிவர்கள், ராஜரிஷிகள். |
| 7. | 7வது ,, , | — பிரம்ம ரிஷிகள் - மனு, வியாசர் அகத்தியர் முதலானோர். |
| 8. | 8வது ,, ,, | — புத்தர், மூன்று குமரர்கள் (சனகர், சனந்தனர், சனாதனர்) |
| 9. | 9வது ,, ,, | — சநத்குமாரர் (குமாரக் கடவுள்) |
| 10. | 10வது ,, ,, | — நந்தியம்பெருமான் (The silent watcher) |

நான்கு தீட்சை வரை பெற்றவர்கள் சகலரில் சாமுசித்தர் வகுப்பையும், 5வது 6வது தீட்சை பெற்றவர்கள் பிரளயாகலர் வகுப்பையும், 7வது 8வது தீட்சை பெற்றவர்கள் விஞ்ஞான கலர் வகுப்பையும், 9வது 10வது நிர்வாண தீட்சை பெற்றவர்கள் கடவுளர் வகுப்பையும் சேர்ந்தவர்கள் ஆவர். குமாரக் கடவுள் கௌமார சிருஷ்டியையும், நந்தியம் பெருமான் அநுக்கிரக சிருஷ்டியையும் சேர்ந்தவர்கள். இது ஒரு தேவ ரகசியம் (Divine Mystery) என்பர். நிர்வாண தீட்சை பெற்றவர்களே அட்டமாசித்திகளும், ஐந்தொழில் ஆற்றலும் படைத்தவர்கள்.

மகரிஷிகள் மக்களின் மத்தியில் இருந்தால் மக்களின் துர் எண்ண அலைகளின் சூழ்நிலையும் (Evil thought forms environment) நாட்டின் மாசுபட்ட சுற்றுப்புரமும் (Polluted environs) அவர்களது ஆன்மீக சைதன்யத்தை பாதிக்குமாதலால் அவர்கள் பொதுவாக ஜனசஞ்சாரமற்ற வனங்களிலும் மலைகளிலும் தங்கள் ஆச்சிரமங்களை அமைத்துக்கொண்டு வதிந்து வருகின்றனர். நைமிசாரண்யம், தாருகாவனம், வேதாரண்யம், தில்லைவனம் முதலிய வனங்களிலும் பொதிகை, விந்தயம், இமயம் முதலிய மலைகளிலும் இருந்துகொண்டு சத்விசாரம் செய்து கொண்டு வந்ததாக புராணங்கள் கூறுகின்றன. அவர்கள் எப்போதும் இயற்கை நியதியோடு இயைந்தே வாழ்பவர்கள் ; தங்களது சங்கல்ப எண்ண அலைகளால் (Thought Waves) உலகை உய்விக்கின்றனர்.

## சிதம்பர ரகசியம்

ஆதியில் இந்த திருச்சிற்றம்பலம் என்ற சிற்சபை தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் இருந்தது. பண்டைக் காலத்தில் இத்தலத்திற்கு தில்லைவனம் என்றே பெயர். தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்த காரணத்தினால் இதற்கு தில்லைவனம் என்ற காரணப்பெயர்

உண்டாயிற்று. இத்தில்லைவனத்தில் சிதம்பரம் அதாவது சிற்சபை (Occult Hierarchy Centre) ஸ்தாபனமான பிறகு இதற்கு அதே பெயராகிய சிதம்பரம் என்ற நாமம் வழங்கலாயிற்று உதாரணமாக சிதம்பரத்தையடுத்த "திருவேட்களம்" என்ற ஊரில் அண்ணாமலை பல்கலைக் கழகம் (Annamalai University) ஏற்பட்ட பிறகு திருவேட்களம் என்ற பெயர் மறைந்து அதற்கு அண்ணாமலை நகர் என்ற பெயர் வழங்கலாயிற்று அதுபோல் தில்லைவனத்தில் சிதம்பரம் (ஞானசபை) ஸ்தாபிதமான பிறகு அதற்கு அதே பெயர் வழங்கலாயிற்று. சிதம்பரத்திற்கு தில்லைத் திருச்சிற்றம்பலம் என்ற பெயரும் உண்டு.

தில்லை திருச்சிற்றம்பலத்தில் தில்லை மூவாயிரவர் அந்தணர்களும், பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலான மகரிஷிகளும் அங்கத்தினர்களாக இருந்தனர். தில்லை மூவாயிரவர்களுக்கு தீட்சதர்கள் என்ற நாமம் உண்டு அவர்கள் எல்லோரும் ஞானதீட்சைப் பெற்ற ஜீவன் முத்தர்கள் இவர்கள் எல்லாம் ஐந்தொழில் ஆற்றல் பெற்று ஸர்வேஸ்வரனுடைய பஞ்சகிருத்தியங்களை கொண்டுசெலுத்துகின்ரூர்கள் என்பதை உணர்த்துவதற்காகவே சிதம்பரத்தில் நடராஜர் விக்கிரகம் ஒன்று ஸ்தாபிக்கப் பெற்றது. இந்த உருவம் இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறிக்கும் ஓர் கற்பனைச் சிலையாகும். இதனை

"தோற்றம் துடியதனில், தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — முற்றுமா
ஊன்று மலர் பாதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர் பாதத்தே நாடு" (மனவாசகங்கடந்தார்)

என்ற செய்யுளால் அறியப்படும்.

நடராஜரின் ஒரு திருக்கரத்தில் ஏந்திய ஒலிதரும் உடுக்கை சிருஷ்டியையும், உயர்த்திய கரம் திதியையும், ஒரு கரத்தில் ஏந்திய அக்னி சங்காரத்தையும், திருவடியை சுட்டும் கரம் அருளலையும், முயலவன் மேல் ஊன்றிய பாதம் திரோதானத்தையும் குறித்து நிற்கின்றன. (விரிவை பின் இணைப்பு 3-ல் காண்கவும். இங்குள்ள திருக்கோயிலில் ஆகாய தத்துவத்தைக் குறிக்கும் ஸ்படிகலிங்கமும் ஸ்தாபனம் செய்யப்பெற்றுள்ளது. இவையெல்லாம் இறைவனின் அருவும், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று நிலைகளையும் குறிப்பதாகும். ஞானசபை அருவம், லிங்கம் அருவுருவம், நடராஜர் உருவம்.

கலியுகத்தின் காலப்போக்கில் தர்மம் குன்றி அதர்மம் மேலிடவே இந்த சிதம்பரம் (சிற்சபை Occult Centre) தில்லையைவிட்டு இமய மலையிலுள்ள மைத்திரேய மகரிஷியின் ஆச்சிரமத்திற்கு மாற்றப் பெற்று, இதுபோது அது அங்கு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது.

தில்லையைவிட்டு சிதம்பரம் போய்விட்டாலும் இன்றும் அங்குள்ள கோயிலில் ஈஸ்வர சைதன்யம் விசிரிம்பித்துக்கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

இனி இந்தத் திருச்சிற்றம்பலத்தின் அந்தரங்க அருளரசு உலகில் எவ்வாறு நடைபெற்று வருகின்றனவென்பதைப் பார்ப்போம். முதலில் அண்டத்திலுள்ள திருச்சிற்றம்பலத்தின் கனகசபையும் அதன் அரசும் செயல்படும் திறனைப் பார்ப்போம்.

## அண்டத்தின் அரசு

ஒரு முப்பட்டைக் (Prism) கண்ணாடி மூலம் கதிரவனின் வெண்ணிறக்கதிர் (Ray) ஒன்றை செலுத்தினால் அக்கதிர் மறுபக்கம் வரும்போது ஏழுவிதமான வர்ணங்களாக (VIBGYOR) பிரிந்து வெளிவருவதை நாம் காண்கின்றோம். அதுபோன்று சிவனினின்று எழும் ஆதிசக்தி (Fohat) பிரம்மா, விஷ்ணு உருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் வழியாக வரும்போது அது சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, மாயாசத்தி, குண்டலினி சத்தி என்ற ஏழு சக்திகளாகப் பிரிந்து, சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய சப்த கிரகங்கள் (Seven planetary Logai) மூலமாக அண்டத்தில் பாய்கின்றன. அப்படிப் பாயும்போது ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு விதமான தன்மை, குணம், சக்தி ஏற்படுகின்றது. அத்தகைய குணத்தோடு கூடிய கிரகங்களை காரகன் என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன. இந்த சப்தகிரகங்களினின்றும் பாயும் ஏழு சக்திகளும் சப்தரிஷிகளால் தாங்கப்பெற்று அவர்கள் மூலம் அண்ட சராசரங்கள் யாவற்றையும் வியாபிக்கின்றன. ஆதலால் அண்டத்திலுள்ள எல்லா தாவர சங்கம பொருட்கள் ஒவ்வொன்றும் இந்த ஏழு சக்திகள் ஒவ்வொன்றின்கீழ் அடங்கும். இதை ரிஷிகோத்திரம் அல்லது இன்ன லக்னாதிபதி என்பர். பிரம்ம ஞான சங்கநூல்களில் இவை சப்த கதிர்கள் (Seven Rays) எனக் கூறப்படுகின்றது.

இந்த ஏழு கதிர்களையும் பொதுவாக சிவகோத்திரம், விஷ்ணு (சக்தி) கோத்திரம், பிரம்ம கோத்திரம் என்று முப்பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். பிரம்மகோத்திரம் ஐந்து பிரிவுகளையுடையது. இந்த ஏழு சக்திகளும் சப்தரிஷிகள் மூலம் வருவதால் அவற்றை அந்தந்த ரிஷிகளின் பெயரில் ஏற்றி ரிஷிகோத்திரங்கள் என்பர். அண்டத்திலுள்ள எல்லா தாவர சங்கம பொருட்கள் ஒவ்வொன்றும் ஒரு சக்தியின்கீழ் வருகின்றதென்று மேலே பார்த்தோம். சிவனுக்குரிய பொருட்கள் யாது, விஷ்ணுவுக்குரிய பொருட்கள் யாது, பிரம்மாவுக்குரிய பொருட்கள் யாதுவென்று சாத்திரங்களில் கூறப்பெற்றுள்ளன. சிவனுக்குரிய தாதுப்பொருட்கள் மாணிக்கம், வைரம்; தாவரப் பொருட்கள் ஆலமரம், வில்வமரம், வேலமரம் முதலியன; விலங்கு

கள் எருது, நாய், காகம் முதலியன ; மானிடர்கள் சைவசமயத்தினர். அப்படியே விஷ்ணுவுக்குரிய தாதுப்பொருள்கள் மரகதம் முதலியன ; தாவரப் பொருட்கள் அரசமரம், அசோகமரம், துளசி முதலியன ; விலங்கு பன்றி, குரங்கு, கருடன் முதலியன ; மானிடர்கள் வைஷ்ணவ சமயத்தவர்கள். அவ்வாறே பிரம்மாவிற்கு முறையே கருங்கல், தாழை, புகையிலை, அன்னபட்சி முதலியனவாம்.

மேலே சொல்லிய ஏழு சக்திகளும் பொதுவாக இச்சாசத்தி (Will power and strength), ஞானசத்தி (Love and wisdom) கிரியா சத்தி (Five Divinely Activities) யாக தொழிற்படுகின்றன. பஞ்ச பூதங்களின் உற்பத்தியும் அவற்றின் பஞ்சீகரணமும் கிரியாசக்தி யால் நிகழ்வதால் இவற்றை பிரம்மசிருஷ்டி என்றும் ; அப்படி பஞ்சீ கரணம் செய்யப்பெற்ற பூதங்களை அன்பினால் (Attraction and cohision) ஒன்று சேர்த்து தனு, கரண, புவனங்களை உண்டாக்கி அவற் றைக் காப்பதால் இவற்றை விஷ்ணு சிருஷ்டி என்றும் ; உருத்திரன் (சிவன்) இவ்வுருவங்களில் உள்ளிட்டு அவற்றை உயிர்ப்பிப்பதால் இதை சிவனின் புருடதத்துவ சிருஷ்டி எனவும் வழங்கப்படுகின்றது. உருத்திரனின் அழித்தல் தொழில் என்பது பழையதை அழித்து, தூரிசு நீக்கி, புனருத்தாரணம் செய்தலாம். இறைவனின் இம்முத்தொழில் கட்கும் தேவர்கள் உடன்நின்று உதவுகின்றனர். இவ்வாறு இறைவன் கடவுளர்களையும், தேவர்களையும், மகரிஷிகளையும் அதிட் டித்து நின்று அண்டத்தில் பஞ்சகிருத்தியங்களை நடத்துகின்றார்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் இம் மும்மூர்த்திகளும் அண்டத்தில் எவ்வாறு அவதரிக்கின்றார்கள் என்று பார்ப்போம். விண்ணுலகத் தோரையும் மண்ணுலகத்தோரையும் இம்சை செய்து துன்புறுத்திக் கொண்டுவந்த அசுரர்களின் திரிபுரங்களையும் (மூன்று நகரங்களையும்) சிவன் தமது நெற்றிக்கண் தீப்பொறியால் சுட்டெரித்தார். சிவன் மக்கள் உதரத்தில் பிறந்து அவதரிப்பதில்லை; தமது கிரியா சக்தி யால் உண்டாக்கிக்கொள்ளப் பெற்ற சரீரம் மூலம் அவதரிக்கின்றார். மக்களை வருத்திவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களையும் சிவஞானக் கண்ணினால் சுட்டெரிக்க வேண்டுமென்ற தத்துவார்த்தத்தை இச் சிவபுராணக் கதை உள்ளடக்கி யிருக் கின்றது.

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியன் என்றெண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்கு பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே.

அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே.

— திருமந்திரம்.

ஸ்ரீமன் நாராயணனுடைய தசாவதாரங்கள் — முதலில் நீர்வாழ் மச்சாவதாரம் (மீன்), இண்டாவது நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய கூர்மாவதாரம் (ஆமை), மூன்ருவது நிலத்தில் வாழ் வராகவதாரம் (பன்றி), நான்காவது பாதி உடல் விலங்காகவும் பாதி உடல் மனிதனுகவும் கூடிய நரசிம்மாவதாரம் (சிங்கம்), ஐந்தாவது குறுகிய உடலோடு கூடிய மானிடனுகிய வாமனுவதாரம் (குள்ளமான மனிதன்), பின் முழுவளர்ச்சிப் பெற்ற இராமர், பரசுராமர், பலராமர் கிருஷ்ணன், கல்கி ஆகிய ஐந்தவதாரங்கள் — இந்தப் பத்து அவதாரங்களும் உயிர்களின் உடல், உணர்வு (Consciousness) (Archetype) (Life and Form) பரிணும வளர்ச்சி விகாசமுறை தத்துவங்களை உள்ளடக்கியுள்ள பாகவதப் புராணக் கதைகளாம் இந்த விகாச முறையே (Evolution) இறைவனின் சங்கல்ப (Divine Ideation and Divine Plan) திட்டமாகும்.

பூதங்களை உற்பத்தி செய்ததோடு பிரம்மாவின் தொழில் முடிந்து விட்டதால் அவருக்கு அவதாரம் செய்யவேண்டிய அவசியமில்லாமற்போயிற்று. அதனுலேதான் பிரம்மாவிற்கு நாட்டில் ஆலயங்கள் கிடையாது.

இனி பிண்டமாகிய இவ்வுலகில் திருச்சிற்றம்பலத்தின் சிற்சபையும் அதன் அந்தரங்க அருளரசாட்சியும் எவ்வாறு நடைபெறுகின்றனவென்பதைப் பார்ப்போம்.

## பிண்டத்தின் அருளரசு

உலகில் அரசனை விஷ்ணு அம்ஸம் என்றும், அவனே இறைவனின் பிரதிநிதியென்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. திருவள்ளுவரின் திருக்குறளிலுள்ள பொருட்பாலில் "இறைமாட்சி" என்ற அதிகாரத்திற்கு பரிமேலழகர் கூறும் விளக்கத்திலும் அவ்வாறே கூறப் பெற்றுள்ளது. வள்ளுவரும் தமது குறளில்

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்" குறள்

எனக் கூறியுள்ளார். "திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று ஆழ்வார்களும் அருளியுள்ளார்கள். ஓர் அரசன் தன் நாட்டை ஆள்வதற்கான நெறிமுறைகளை அரசியல் சாசனத்தில் வகுக்கப் பெற்றுள்ளன. அதன்படியே அரசன்தன் நாட்டை ஆட்சி செய்கிருன், உலகில் ஒரு அரசனின் ஆட்சி இறைவனின் அந்தரங்க அருளரசாட்சியை பிரதிபலிக்கின்றது.

ஓர் அரசன் தன்நாட்டு நிர்வாகத்தை I நிர்வாக, வருவாய்த் துறை (Revenue & Administrative Department), II சமய, கல்வி, கலாச்சாரத்துறை (Religion, Education & Cultural Department)

III பொதுப்பணித்துறை (Public Works Department)என்ற முப்பெரும் துறைகளாக வகுத்துக்கொண்டு, அவ்வவத் துறைகளின் நிபுணர் களைக் கொண்டு நாட்டை ஆள்கின்றான். பொதுப்பணித்துறையில் (1) கட்டிடம் (Buildings), (2) நெடுஞ்சாலை (High Ways), (3) விவசாயம் (Agriculture), (4) பாசனம் (Irrigation) (5) வைத்தியம், சுகாதாரம் (Medical & Health) ஆகிய ஐந்து இலாக்காக்கள் அடங்கும். இவற்றை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

உலகில் திருச்சிற்றம்பலத்தின் சிற்சபைக்கு குமாரக் கடவுள் தலைவர் என்று மேலே பார்த்தோம். அவரே உலகின் அந்தரங்க அருளரசாட்சிக்கு அரசருமாவார். அவர் இறைவனின் சங்கல்ப ஆணைகளை மேற்கொண்டு அருளரசாட்சியை நடத்துகின்றார்.

சிவனுக்கு பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்தங்கள் இருப்பதுபோன்று நமது குமாரக் கடவுளாகிய சனத்குமாரருக்கும் சனகர், சனந்தனர், சனாதனர் என்ற மூன்று குமாரர்களும் மும்மூர்த் தங்களாக அமர்ந்துள்ளனர். அண்டத்தில் சிவன் அவதரித்து தமது நெற்றிக்கண்ணால் முப்புரங்களை எரித்ததுபோல் பிண்டமாகிய இவ்வுலகத்தில் குமாரக்கடவுள் அவதரித்து மக்களை துன்புறுத்தி வந்த சூரபத்மன், சிங்கமுகன், கஜமுகன் என்ற மூன்று அசுரர்களை யும் எதிர்த்துப் போரிட்டு தமது திருக்கை வேலாயுதத்தினால் அவர்களை சம்ஹரித்து மக்களைக் காப்பாற்றினார் என்று கந்தபுராணம் கூறுகின்றது. இப்புராணத்திலும் மக்களை பிடித்து வருத்தும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் ஞானத்தால் வெல்லவேண்டுமென்ற தத்துவத்தை தன்னுள் அடக்கி நின் றுள்ளது.

மற்றும் இவ்வுலகின் அந்தரங்க அருளரசாட்சியில் இச்சாசக்தி (Will Power) யுடன் கூடிய அழித்தல் தொழிலை செய்யும் உருத்திர னுடைய பிரதிநிதியாக "மனு" வும், ஞானசக்தி (Love and Wisdom) யுடன் கூடிய காக்கும் தொழிலை செய்யும் விஷ்ணுவின் பிரதிநிதியாக "வியாசரும்", கிரியாசக்தி (Divine Activitles) யுடன் கூடிய படைத் தல் தொழிலை செய்யும் பிரம்மாவின் பிரதிநிதியாக "அகத்தியரும்" பதவிகள் வகித்து ஐந்தொழிலை நடத்தி வருகின்றனர். மனு, வியாசர், அகத்தியர் என்பன பதவிகளின் பெயர்களே தவிர நபர் களின் நாமம் அன்று. இந்த நபர்களுக்கு சொந்த நாமங்களும் உண்டு. இம்மூவரும் அந்தரங்க அருளரசாட்சியில் மேலே சொல்லிய மூன்று இலாக்காக்களில் முறையே ஒவ்வொருவரும் ஒரு துறைக்குத் தலைவர்களாக அமர்ந்து அந்தந்தத் துறையின் பொறுப்புக்களை யேற்று அத்துறைக்கான அலுவல்களை கவனித்து வருகின்றனர். அவர்களுக்குத் துணையாக மற்ற மகரிஷிகளும், தேவர்களும் உடனிருந்து உதவி காரியங்களை நடத்திக்கொடுக்கின்றனர்,

## மனுவின் அலுவல்கள்

முதலில் மனுவின் அலுவல்களைப் பற்றிப் பார்ப்போம். மனு உருத்திரனுடைய பிரதிநிதியென்று மேலே பார்த்தோம். "மன்" என்றால் நினைத்தல்; மன் என்ற தாதுவிலிருந்து மானவன், மனுஷ்யன், மனிதன் என்ற சொற்கள் பிறந்தன. நினைக்கும் ஆற்றல் உடையவனே மனிதன். அந்த "மன்" என்ற தாதுவிலிருந்தே ஆதி பிதாவின் பெயராகிய மனு வந்தது என்றும், மனுவே குடிகளின் ஆதி பிதாவென்றும் இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இப்பிரபஞ்சத்தின் உய்விற்காக இறைவனால் நியமிக்கப் பெற்ற பதினான்கு மனுக்களின் பெயர்களும் இதிகாச புராணங்களில் கூறப் பெற்றுள்ளன. அவர்களாவன :—

| பகலில் ஆதிக்கம் செலுத்தும் மூல மனு | இரவில் ஆதிக்கம் செலுத்தும் பீஜ மனு |
| --- | --- |
| 1. சுவாயம்பு மனு | 2. சுவரோக்ஷிஸ மனு |
| 3. உத்தம மனு | 4. தாமச மனு |
| 5. சாக்ஸுஷமனு | 6. ரைவத மனு |
| 7. வைவஸ்வதமனு | 8. சூரிய ஸாவர்ணி மனு |
| 9. தக்ஷ ஸாவர்ணி மனு | 10. பிரம ஸாவர்ணி மனு |
| 11. தர்ம ஸாவர்ணி மனு | 12. ருத்ர ஸாவர்ணி மனு |
| 13. தேவ ஸாவர்ணி மனு | 14. இந்திர ஸாவர்ணி மனு |

இங்கு பகல் இரவு என்பது பிரம்மாவின் ஒரு நாளாகும். ஒவ்வொரு மனுவின் ஆட்சி காலம் மன்வந்தரம் எனப்படும். மன்வந்தரம் என்றால் இரண்டு மனுக்களுக்கு இடையிலுள்ள காலம் என்பதாகும். அவர்களுடைய காலம் வருமாறு :—

| | | | |
| --- | --- | --- | --- |
| கலியுகம் | = | 432000 | வருடங்கள் |
| துவாபரயுகம் | = | 864000 | ,, |
| திரேதாயுகம் | = | 1296000 | ,, |
| கிரேதாயுகம் | = | 1728000 | ,, |
| ஒரு சதுர்யுகம் | = | 4320000 | வருடங்கள் மகாயுகமாகும். |

71 சதுர் யுகங்கள் கொண்டது ஒரு மன்வந்தரம். 14 மன்வந்தரங்கள் கொண்டது பிரம்மாவிற்கு பகல்: இதே அளவு கொண்டது இரவு. அந்திசந்திக்கு 6+6=12 சதுர் யுகங்கள். ஆக பிரம்மாவின் ஒரு நாளுக்கு 2000 சதுர்யுகங்கள் அதாவது 8640000000 மானிட வருடங்கள்; ஒரு வருடத்திற்கு 3110400000000 மானிட வருடங்கள்; பிரம்மாவின் ஆயுள் நூறுக்கு 311040000000000 மானிட வருடங்கள். இதை பிரம்மஞான சங்கநூலில் 7 ஊழி காலம் (Seven Eternities) என்று சொல்லப்படுகிறது. பிரம்மாவின் இரவும் பகலும் சேர்ந்த ஒருநாள்

பிரம்மஞான சங்கநூலில் ஒரு மண்டலம் (Round) என சொல்லப்படுகிறது. ஏழு மண்டல சுற்றில் (7 Rounds) இப்பூமியில் நடக்கும் விகாச முறை (Evolution) முடிவடைந்துவிடும் என்றும் சொல்கின்றன.

நாம் இப்போது வைவஸ்வதமன்வந்தரத்தில் 27 சதுர் யுகங்கள் முடிந்து, 28வது சதுர்யுகத்தில் கலியுகம் 5077-ம் ஆண்டில் இருக்கின்றோம். பிரம்மாவிற்கு பத்மகல்பம் என்ற 50 வயது முடிந்து, ஸ்வேதவராக கல்பம் என்ற 51வது வயது நடக்கின்றது.

இந்த 14 மனுக்களும் பிரம்மதேவரின் பகலாகிய ஆயிரம் சதுர் யுகம் கொண்ட கற்பம் எனப்படும் காலத்தில் ஆட்சி செலுத்தி முடிவில் நான்காவது மேல் உலகமாகிய மகர் லோகத்தில் சேர்ந்து முத்திப் பெறுவார்கள் என்றும், இந்த கற்பம் முடிவில் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய திரிலோகங்களும் பிரளயத்தில் அழிந்துபோகும் என்றும் இதிகாச புராணங்கள் கூறுகின்றன.

மேற்படி 14 மனுக்களில் மூல மனுக்களாகிய 7 மனுக்களும் தத்தம் மன்வந்தரத்தில் குடிகளைப் படைப்பதும், அரச வம்ஸங்களை உண்டுபண்ணி அதன்மூலம் குடிகளைப் பரிபாலிப்பதும், அவர்கள் நற்கதிபெறும் பொருட்டு தருமத்தை (மனுஸ்மிருதி) விதிப்பதும் மனுக்களுக்கு இறைவன் இட்ட கட்டளையாகும். வெவ்வேறு மனுவின் காலத்தில் வெவ்வேறு இந்திரனும், தேவர் குழுவினரும், மகரிஷிகளும் மனுவுக்கு உதவியாக இருப்பார்கள்.

கிருஸ்தவ சமயத்தில் சொல்லப்பட்ட ஆதிமனிதன் ''ஆதாம்'' போல், மக்கள் வர்க்கத்திற்கு மனு மூலகாரணர் என்றும், அவர் உருத்திரனுடைய பிரதிநிதியென்றும் மேலே பார்த்தோம். இனி அந்தரங்க அருளரசாட்சியில் மனுவின் அலுவல்கள் என்னவென்று பார்ப்போம்.

உலகிலுள்ள மக்களை நோக்கும்போது அவர்கள் பலதிறப்பட்ட உடல் அமைப்பையும், நிறத்தையும் உடையவர்களாக இருப்பதைக் காண்கின்றோம். இதை ஆப்ரிக்க நாட்டு மக்களையும், சைன, ஜப்பான் நாட்டு மக்களையும், ஐரோப்பிய நாட்டு மக்களையும் பார்க்கும்போது பட்டவர்த்தனமாக தெரிய வருகிறது. அப்ரிக்கர்கள் கருமை நிறமாகவும், சீனர்கள் மஞ்சள் நிறமாகவும், ஐரோப்பியர்கள் வெள்ளை நிறமாகவும் இருப்பது மட்டும் அல்லாமல் அவர்களது உடல், தலை, முகம் அமைப்பிலும் வித்தியாசத்தைக் காண்கின்றோம். ஆப்ரிக்க நாட்டு மக்களை நீக்ரோயர் வர்க்கம் (Race) என்றும், சீன ஜப்பான் நாட்டு மக்களை மங்கோலியர் வர்க்கம் (Race) என்றும், ஐரோப்பிய நாட்டு மக்களை ஆரியர் வர்க்கம் (Race) என்றும் வகுக்கப் பெற்றுள்ளது.

ஒரு கல்பத்தில் ஏழுவிதான மக்கள் வர்க்கங்கள் ஒன்றின்பின் ஒன்ருக தோன்றி மறையும். ஒவ்வொரு மூலவர்க்கத்திலும் (Root Race) ஏழு உட்பிரிவுகள் (உபவர்க்கங்கள் Sub-Races) உள்ளன. இவ்வாருன இந்த ஏழேழு நாற்பத்தொன்பது வர்க்கங்களிலும் பரிணும நியதிப்படி (Law of Evolution) மக்கள் பிறந்து, இறந்து, பிறந்து சென்றே கடைசியில் பரிபூரண ஞானனுபவ நிலையைப்பெற்று முத்தியடைகின்றனவென்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு வர்க்கத்திலும் ஒவ்வொரு விதமான ஞானனுபவத்தை அடைகின்றது. இதைத்தான் வள்ளுவரும் தமது குறளில் எழுமை எழு (49) பிறப்பு என்று கூறியுள்ளார். இவைகளைப் பற்றி பிரம்மஞான சங்க நூல்களில் விரிவாக விளக்கப் பெற்றிருக்கின்றன.

மேற்படி ஏழு மூலவர்க்கங்கள் ஒவ்வொன்றும் தோன்றுதற்குரிய நிலப்பரப்புக்கள் உலகில் ஏழு கண்டங்களாக ஏற்பட்டுள்ளன. இந்த ஏழு கண்டங்களையும் சப்ததுவீபங்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. அவையாவன :—(1) கிரௌஞ்சிதுவீபம் (2) குசதுவீபம், (3) சால்மாலிதுவீபம், (4) பிலக்ஷதுவீபம், (5) ஜப்புதுவீபம், (6) சகதுவீபம், (7) புஷ்கரதுவீபம் என்பவைகளாம். ஒவ்வொரு துவீபத்திலும் சாதாரணமாக ஒரு மூலவர்க்க மக்கள் தோன்றுகின்றனர். அந்த முலவர்க்கத்தின் குறிப்பிட்ட குணம் விருத்தியடைவதற்கேற்ற சூழ்நிலைகளை அந்த துவீபம் பெற்றிருக்கும்,

கிரௌஞ்சி, குசம் ஆகிய முதல் இரண்டு துவீபங்களும் வட துருவத்தைச் சுற்றியிருந்தன. அதுபோது நமது உலகம் நெருப்புக் குழம்பாக (Nebula) தளதளப்பான நிலையில் இருந்தது. பூமி இறுகி கெட்டியாகவில்லை. அப்போதிருந்த சாராசரப் பொருட்கள் எல்லாம் ஆகாய தத்துவத்தாலாய சூக்கும உடல் உடையனவாக, ஓரிடத்தில் நிலைத்திராமல் அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்தனவென்றும், இந்திரன் அவைகளின் சிறகுகளை வெட்டி வீழ்த்தி ஓரிடத்தில் நிலைத்திருக்க செய்தானென்றும் புராணங்கள் கூறுகின்றன. காலாந்தரத்தில் அந்த இரண்டு துவிபங்களும் கடலில் அமிழ்ந்து அழிந்துபோக அவற்றிலிருந்த இரண்டு வர்க்க மக்களும் அழிந்து, அடுத்து வந்த மூன்ருவது வர்க்கத்தில் ஜென்மம் எடுக்கலாயின. அவ்விரண்டு வர்க்கத்தின் மனுக்களாகிய சுவாயம்பு மனுவும், சுவரோக்ஷிஸ மனுவும் மேல் பதவிக்குப் போய்விட்டனர். இவைகள் எல்லாம் லக்ஷக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளாம்.

இரண்டாவதான குசதுவீபத்தை கடல் கொண்டபோது இப்போதுள்ள இந்துமகாசமுத்திரம் பஸிபிக் மகாசமுத்திரப் பகுதியில் சுமார் பத்து லக்ஷம் வருடங்களுக்கு முன்பு ஒரு பெரிய நிலப்பரப்பு தோன்றி பின் மறைந்துபோயின. இந்த மூன்ருவது நிலப்பரப்பை தற்கால விஞ்ஞானிகள் லெமூரியா கண்டம் என்று பெயர் கொடுத்

துள்ளனர். இதையே மூன்றாவது கண்டமாகிய சால்மாலிதுவீபம் என்று புராணங்கள் கூறுகின்றன. இதன் நிலப்பரப்பு இப்போதுள்ள விந்திய மலைக்கு தெற்கேயிருந்து தென் துருவம் வரையில் பரவியிருந்தது. அதுபோது விந்திய மலைக்கு வடக்கே சமுத்திரமாக இருந்து இமயமலையின் சிகரங்கள் எல்லாம் சிறுசிறு தீவுகளாக காட்சியளித்தன. இத்தீவுகளின் ஒன்றில்தான் சுமார் 65 லக்ஷம் வருடங்களுக்குமுன் மேற்சொல்லியவாறு குமாரக் கடவுள் சுக்கிர கிரகத்திலிருந்து நமது உலகில் வந்து தங்கியது.


இந்த சால்மாலிதுவீபம்தான் நமது தமிழகம் ஆகும். இது விந்திய மலைக்குத் தெற்கேயும் தென் துருவத்திற்கு வடக்கேயும் 7000 மைல் தூரம் வரையில் இருந்ததாக பண்டை சங்கநூல்களும் புராணங்களும் கூறுகின்றன. இந்தக் கண்டத்தில் தோன்றிய மூன்றாவது மூலவர்க்கத்தில்தான் முதன்முதல் மானிடவர்க்கம் தோன்றிற்று. இந்த மூலவர்க்கத்தின் ஏழு உபவர்க்களின் மத்திய உபவர்க்கத்தில்தான் தமிழர் இனம் வேர்கொண்டிருக்கின்றது. மூன்றாவது மூலவர்க்கத்தின் முதல் பகுதி மக்கள் ஆண்பெண் என்ற பிரிவு இன்றி ஒன்றாக (Asexual) முட்டை வடிவம் போன்றும், நடுப்பகுதியில் பாதி ஆண் பாதி பெண்ணுமாக சேர்ந்து அர்த்த நாரீஸ்வரர் (Bisexual) வடிவிலும், கடைப்பகுதியில் ஆண், பெண் இரண்டாகப் பிரிந்து தனித்தனியான உற்பத்தி உண்டாயிற்றென்றும்; அப்போதிருந்த மக்களுக்கு நெற்றியிலும் ஒரு கண்ணுடன் மூன்று கண்கள் இருந்தனவென்றும், காலாந்தரத்தில் அந்நெற்றிக் கண் நெற்றிக்குள் அமிழ்ந்துபோய் இதுபோது அது புருவமத்திடை ஆக்ஞா சக்கரமாக (Pineal Gland) விளங்குகின்றதென்றும் ஞானக் கண் படைத்தோர் கூறுகின்றனர். மேலும் இந்த மூன்றாவது மூல வர்க்கத்தின் மத்தியில்தான் குமாரக் கடவுள் சுக்கிர கிரகத்திலிருந்து நமது உலகில் வந்து அவதரித்தார் என்றும் கூறுகின்றனர். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக தமிழர்கள் பண்பாட்டில் ஆண்களும் பெண்களும் நெற்றியில் பொட்டு வைப்பதும், இறைவனை அர்த்த நாரீஸ்வரர் வடிவில் வழிபடுவதும், குமாரக் கடவுளை தமிழர்கள் குல தெய்வமாகக் கொண்டாடுவதுமான பல பண்டைய பழக்க வழக்கங்கள் சான்றுகளாக அமைந்துள்ளன.

இன்னோரன்ன சான்றுகளிலிருந்து தமிழ்நாடு, தமிழர் இனம், தமிழ்மொழி கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முந்தி முதன் முதலில் தோன்றிய பழங்குடி மக்கள் நாடென்பது புலனாகின்றது. தமிழர்களின் சமயம், மொழி, பண்பாடு முதலியன ஒருதனிச் சிறப்பு வாய்ந்த அம்ஸங்களாகும்.

## அகத்தியர் வருகை

வடதுருவத்திலிருந்த குசத்துவீபம் கடல்கொண்டு, தென்துருவத்தில் நமது தமிழ்நாடாகிய சால்மாலிதுவீபம் தோன்றினபோது

தான் பரமேஸ்வரர் அகத்திய மகரிஷியை கைலாயத்திலிருந்து தமிழகத்திற்கு அதன் பாதுகாவலராக அனுப்பி வைத்தார் என்றும், அகத்தியர் தமிழ்நாட்டிற்கு வரும்போது குமாரக் கடவுளிடமிருந்து தமிழ்மொழி கற்றுவந்தார் என்றும், அவர் தமிழகம் வந்து பொதிய மலையில் ஆச்சிரமம் அமைத்து அங்கு குடிகொண்டாரென்றும், அப்போது தமிழ் வர்க்கத்தின் மனு உத்தமமனுவென்றும் இதிகாச புராணங்கள் கூறுகின்றன.




தமிழகத்தின் தென்பகுதியிலிருந்த பெரும்பான்மையான நிலப் பரப்பை கடல்கொள்ள, இப்போது அட்லாண்டிக் சமுத்திரம் இருக்கும் இடத்தில் ஒரு பெரிய நிலப்பரப்பு தோன்றிற்று என்றும், அதில் உன்னத நாகரீகமும் செல்வமும் படைத்த மக்கள் வாழ்ந்தனர் என்றும் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது. அந்த நிலப்பரப்பிற்கு அட்லாண்டிஸ் கண்டம் என்றும்

பெயர் கொடுத்திருக்கின்றனர், அந்த கண்டத்தின் மக்கள் நான்காவது மூலவர்க்கத்தைச் சேர்ந்த மஞ்சள் நிற மங்கோலியர் களும், சிகப்பு இந்தியர் (Red Indians) களும் ஆவர்.

இந்த நான்காவது கண்டமாகிய நிலப்பரப்பை "பிளக்ஷ துவீபம்" என்றும், அதில்தான் இராவணனும் இராட்சசர்கள் வாழ்ந்தார்கள் என்றும், அந்த நான்காவது மூலவர்க்க மக்களின் மனு "சாக்ஸுஷமனு" என்றும், அவர் இன்னும் இமயமலைப் பிராந் தியத்திலுள்ள ஆச்சிரமத்தில் இருப்பதாகவும்; இந்த பிலக்ஷ துவீபம் சுமார் 7-8 லக்ஷ வருஷங்களுக்குமுன் தோன்றி, சுமார் லக்ஷ வருஷங்களுக்கு முன்னிருந்து அழிந்துகொண்டே வந்து பத் தாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு தான் அது முற்றும் மறைந்து போயிற்று என்றும் பிரம்மஞான சங்க நூல்கள் கூறுகின்றன. இதி காசங்களிலும் இதைப் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன.

மேற்சொல்லிய நான்காவது கண்டமாகிய பிளக்ஷதுவீபத்தை கடல் கொண்டபோது இப்போதுள்ள நிலப்பரப்பாகிய ஆசிய ஐரோப்பாக் கண்டங்கள் தோன்றலாயின. இந்த ஐந்தாவது புதிய கண்டத்தைதான் "ஜம்புதுவீபம்" என்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இந்த நிலப்பரப்பு தோன்றியபோதுதான் இமயமலைத் தொடர்களும் தோன்றலாயின. விந்தியமலைக்கு தெற்கே மிஞ்சி யிருந்த தமிழகம் அதன் வடக்கே தோன்றிய புதிய நிலப்பரப்போடு இணைந்தது. தென் இந்தியாவிலிருந்த தமிழர்களும் இமயமலைப் பிராந்தியம் வரை குடியேறி வாழ்ந்து வரலாயினர்.

இந்த ஐந்தாவது கண்டமாகிய ஜம்புதுவீபத்தின் மத்திய ஆசிய பீடபூமியில்தான் ஐந்தாவது மூலவர்க்க மக்களாகிய ஆரியர் இனம் தோன்றலாயிற்று அங்கு தோன்றிய ஆரியர்களின் ஒரு பகுதி இமயமலையைக் கடந்து தெற்கேயுள்ள இந்தியாவை நோக்கி வந்து குடியேறலானார்கள். இவர்கள்தான் ஆதி அந்தனர்கள் என்பர். மற்றொரு பகுதியினர் மேற்குநோக்கி சென்று ஐரோப்பாவில் குடி யேறினார்கள். இவர்கள்தான் கிரேக்கர், ஜர்மானியர், ஆங்கிலேயர் முதலானோர்கள். இந்த ஐந்தாவது மூலவர்க்கத்தில் இதுவரை ஐந்து உபவர்க்கங்கள் தோன்றியிருக்கின்றன. ஆறாவது உப வர்க்கம் தற்சமய நியூசிலாந்து, காலிபோர்னியா முதலிய இடங் களில் தோன்ற ஆரம்பித்திருக்கின்றார்கள் என்று பிரம்மஞான சங்க நூல்கள் கூறுகின்றன. இந்த ஐந்தாவது ஆரிய வர்க்கத்தின் மூல மனு 'வைவஸ்வதமனு" ஆவார். ஆதலால் இக்காலத்தை வை வஸ்வதமன்வந்தரம் என்று புராணங்கள் கூறுகின்றன. வை வஸ்வதமனு இமயமலையின் வடபாரிசத்திலுள்ள ஆச்சிரமத்தில் வதிந்து வருகின்றார். இவர் வைவஸ்வன் என்ற சூரியபகவானுடைய குமாரர் என்று மேலே பார்த்தோம்.

இனி தோன்ற இருப்பன ஆருவது ஏழாவது கண்டங்களாகிய சகதுவீபம், புஷ்கரதுவீபங்களாகும். இவைகள் தோன்றுவதற்கு இலக்ஷக் கணக்கான வருடங்கள் ஆகும். சகதுவீபம் தோன்றுவதற்கான அறிகுறிகள் இப்போது காணப்படுகின்றன, பூகம்ப உற்பாதங்களால் சில தீவுகள் கடலுக்குள் அமிழ்ந்துபோவதையும், சில தீவுகள் கடல் மட்டத்திற்குமேல் தோன்றுவதுமான செய்திகளை அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கலாம். இந்த ஆருவது ஏழாவது கண்டங்கள் வடக்கு நோக்கி சென்று வடதுருவத்தில் முடியுமென்று பிரம்மஞான சங்கநூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு கண்டங்களும் மானிடவர்க்கங்களும் தோன்றி மறைவதற்கும் மனுக்களுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். ஈஸ்வர சங்கற்ப ஆக்ஞைப்படி இவ்வுலகில் பஞ்ச கிருத்தியங்களை கொண்டு செலுத்துபவர்கள் அட்டமாசித்திகளும் ஐந்தொழில் ஆற்றலும் படைத்து திருச்சிற்றம்பலத்தின் அந்தரங்க அருளாட்சியில் பதவி வகிக்கும் மனுவாதி மகரிஷிகள் என்று மேலே பார்த்தோம். அழித்தல் கடவுளாகிய இச்சாசத்தி (Will Power) யுடன் கூடிய உருத்திரன் பிரதிநிதியாக மனு அந்தரங்க ஆட்சியில் நிர்வாகப் பதவிப் பொறுப்பை வகிக்கின்ருர். அழித்தல் என்பது பழையனவற்றிலுள்ள குற்றங்களைக் களைந்து உயிர்களின் வளர்ச்சிக்கேற்ப உடலை புனருத்தாரணம் செய்தலாம்.

மக்களுக்கு ஓர் அறிவு முதல் ஏழு அறிவு வரையிலான அறிவும் ஏழுவகையான குணங்களும் (Attributes) முத்தி அடைவதற்குமுன் முற்றுப் பெறல்வேண்டும். இந்த ஏழு குணங்களும் ஒவ்வொரு மானிட மூலவர்க்கத்தில் ஒரு குணமாக ஏழு மூலவர்க்கங்களிலும் உயிர்கள் பிறந்து, இறந்து, பிறந்து செல்லும்போது முற்றுப் பெறுகின்றன. உயிர்களின் அறிவு குண வளர்ச்சிக்கேற்ப அவற்றின் உடல் அமைப்பிலும் மாறுதலும் வளர்ச்சியும் (Evolution of Life and Form) சேர்ந்தே இருக்கவேண்டும். இதை குழந்தைப் பருவம் முதல் வயோதிகப் பருவம் வரையிலான மனிதனின் அறிவு வளர்ச்சிக்கேற்ப உடல் அமைப்பிலும் - முக்கியமாக மூளை, முள்ளந்தண்டு மண்டல வளர்ச்சியில் மாறுதல் அடைந்துகொண்டு போவதை நாம் கண்கூடாகக் காண்கின்ருேம். அவ்வாறே மக்களின் அறிவு குண வளர்ச்சிக்கேற்ப உடல் உருவ அமைப்புக்களிலும் மானிட வர்க்கம் ஏழிலும் வர்க்கங்கள்தோறும் மாறுதல் அடைந்து விருத்தியாகிக் கொண்டு போகின்றன. இதன் விரிவான விளக்கங்களை பிரம்மஞான சங்க நூல்களில் காண்க.

மக்களின் இந்த உடல், உள்ளம், குணம் மாற்றங்கட்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப அவர்கள் வாழும் நிலங்களிலும் தட்பவெட்ப மாறுதல்கள் இருக்கவேண்டியது அவசியம் ஆகின்றது, அதிசீதள

மண்டலம், அதிஉஷ்ணமண்டலம், சமசீதோஷ்ண மண்டலம் இவற்றில் வாழும் மக்களின் உடல், உருவம், உறுப்புக்களின் அமைப்பு, அறிவு, ஆற்றல் இவற்றில் வித்தியாசங்களைக் காண்கின்றோம். ஆதலால் மக்களின் இந்த ஏழு அறிவு, குணங்களின் வளர்ச்சிகளுக்கேற்ப ஏழுவகை மானிட வர்க்கங்களும், அவற்றிற்கேற்ற ஏழு வகைத்தான நிலப்பரப்புக்களும் (கண்டங்கள்–துவீபங்கள்) தோற்றுவிக்கப்படுகின்றன.

இந்த ஏழுவிதமான மானிடவர்க்க உற்பத்திற்கும், ஏழு கண்டங்களின் தோற்றத்திற்கும் மனுவே காரணமாவர். இவைகள் எல்லாம் அவருடைய ஆட்சியின்கீழ் நடைபெறுகின்றன. நிலப்பரப்புக்கள் தோன்றுவதற்கும் மறைவதற்கும் காரணமான பூகம்பங்கள், எரிமலைகள், புயல்காற்று, மழைவெள்ளம் முதலிய உற்பாதங்கள் மனுவின் சங்கற்பத்தால் நடைபெறுகின்றன. மானிடவர்க்கங்களுக்கு ஏற்ற நிலப்பரப்புக்களும் அவராலேயே தோற்றுவிக்கப்படுகின்றன; அழிக்கப்படுகின்றன. இது அவருடைய நிர்வாகத் துறையின் அலுவல்களாகும்.

நினைத்தல் என்ற பொருள்படும் "மன்" என்ற பகுதியிடமாக மனிதன், மனு என்ற காரணப் பெயர்கள் உண்டாயினவென்றும், மனுவே மக்களின் ஆதி பிதாவென்றும் மேலே பார்த்தோம். ஒவ்வொரு மூலவர்க்கமும் தோன்றும்போது அம்மூல வர்க்கத்தின் மனுவே மக்களிடை அவதரித்து, அதில் மணந்து, தம்போன்ற வடிவுடைய பிரஜோற்பத்தியை செய்விக்கின்றார். அந்த வர்க்கத்தில் அரசனாகவும், குலத்தலைவனாகவும் அவதரித்து தம்மக்களைத் திரட்டி படையெடுத்துச் சென்று, மற்ற நாட்டை வென்று அதில் தம்மக்களை குடியேறவும் செய்கின்றார். இவ்வாறான நிகழ்ச்சிகளை நாம் தேச சரித்திரங்களில் காணலாகும்.

இதனால் மானிடவர்க்கத் தோற்றத்திற்கும், அந்த வர்க்கம் இதர நாடுகளுக்குப் பரவிச் சென்று அங்கு குடியேறுவதற்கும் மனுவே காரண கர்த்தா என்பது புலனாகும். மற்றும் அவரே மக்களிடை குருக்களாகவும், ஆச்சாரியர்களாகவும், குருவாகவும் அவதரித்து தம்மக்கள் வாழ்வாங்கு வாழ அறநெறிகளையும் (மனுஸ்மிருதி) வகுத்துக்கொடுக்கின்றார். உலகில் நடைபெறும் யுத்தங்களும், அவற்றின் முடிவுகளும் மனுவின் சங்கற்பப்படிதான் நடைபெறுகின்றன.

இவைகள் எல்லாம் ஈஸ்வர சங்கற்பத்தின்படி நடந்தேறுகின்றன. அவற்றை மனு அந்தரங்க அரசாட்சியில் இறைவனின் பிரதிநிதியாகவும் கருவியாகவுமிருந்து அவற்றைக் கொண்டு செலுத்துகின்றார். அவருக்குத் தெரியாமல் உலகில் ஒன்றும் நடைபெறாது. எல்லா ஈஸ்வர சங்கற்பங்களும், ஆக்ஞைகளும் இறைவனிடமிருந்து குமாரக் கடவுள் மூலம் அந்தரங்க ஆட்சிக்கு வருகின்றன. உருத்திரனின் பிரதிநிதியாகிய மனுவினுடைய நிர்வாகத் துறையில் இவைகள் எல்லாம் நடைபெறுகின்றன.

இப்போதுள்ள வைவஸ்வதமனுவின் சீடராகிய மாருமகரிஷி அடுத்துவரும் ஆருவது மானிட மூலவர்க்கத்தின் மனுவாக பதவி ஏற்பார். இவரை பிரம்மஞான சங்கநூல்களில் மோரிய மகரிஷி (Master M.) என்று குறிக்கப் பெற்றுள்ளது. புராணங்களிலும் இவரைப் பற்றி கூறப்பெற்றுள்ளன. இவர்தான் பிரம்மஞான சங்க ஸ்தாபனத்திற்கு மூலகாரணகர்த்தாக்களில் ஒருவராவர். இவரைப்பற்றிய வரலாற்றை பின் இணைப்பு 1-ல் பார்க்கவும்.

## வியாசரின் அலுவல்கள்

இதுவரை இவ்வுலகின் அந்தரங்க அருளரசாட்சியில் உருத்திரனின் பிரதிநிதியாகிய மனுவின் அலுவல்களைப் பற்றிப் பார்த்தோம். இனி அந்த அருளரசாட்சியில் விஷ்ணுவின் பிரதிநிதியாகிய வியாசருடைய அலுவல்களைப் பற்றிப் பார்ப்போம்.

வியாசர் என்பது உலகின் அந்தரங்க அருளரசாட்சியில் ஒரு பதவியின் பெயராகுமென்று மேலே பார்த்தோம். வியாசர் என்ருல் கட்டுரையாளர் Essay Writer) எனப் பொருள் ஆகும். இவர் ஞானசக்தியுடன் (Wisdom and Love) கூடிய விஷ்ணுவின் அம்ஸமாய் அந்தரங்க அரசில் அவருடைய பிரதிநிதியாக இருந்து உலக மக்களுக்கு ஞானத்தைப் போதிக்கின்ருர். மனு மக்களின் உடல் வளர்ச்சியை கொண்டு செலுத்துவதுபோல், வியாசர் அம்மக்களின் உயிர் (அறிவு) வளர்ச்சியைக் கொண்டு செலுத்துகின்ருர்.

நாராயணனுடைய ஞானசக்தி அவதாரமாய் ஒவ்வொரு மன்வந்தரத்திலும் துவாபர - கலியுக சந்தியில் ஒவ்வோர் வியாசர் அவதரித்து அடுத்து வரும் யுகத்தின் மக்களுடைய வளர்ச்சிக்கேற்ப வேதாகம சாத்திரங்களை வகுத்துத் தொகுத்துக் கொடுக்கின்ருர். அதனாலேதான் அவருக்கு வேதவியாசர் என்ற பெயர் வழங்கி வருகின்றது. வேதாகம சாத்திரங்களை தொகுத்துக் கொடுப்பதுமன்றி, மக்களிடை அவதரித்து அவர்களுக்கு ஞானோபதேசங்களையும் போதித்தருள்கின்ருர். வேதங்கள் அனந்தம்.

இதுவரை இருபத்தெட்டு வியாசர்கள் தோன்றியுள்ளனர். சுவாயம்பு வியாசர் முதல் பராசர் வரை 28 வியாசர்களின் பெயர்கள் புராணங்களில் கொடுக்கப் பெற்றுள்ளன. ஆதலால் வேதாகம புராண இதிகாசங்களின் கருத்துக்கள் யுகத்துக்கு யுகம் மாறி வளர்ந்து பெருகிக்கொண்டு போகின்றன. இருபத்தொன்பதாவது (29வது) வியாசராக தோன்றியவர் பராசர் மகரிஷியின் குமாரரும் சுகப்பிரம்ம ரிஷியின் பிதாவுமான கிருஷ்ண துவைபாயன வியாசராவர். இவர் சுமார் 2500 வருடங்களுக்குமுன் மேல் பதவிக்குப்போய்விட்டபடியால், இதுபோது 30வது வியாசர் பதவியில் இருப்பவர் அவரின் சீடராகிய மைத்திரேய மகரிஷியாகும். இவரைப்பற்றிய குறிப்புக்கள் பாகவதம், விஷ்ணுபுராணம், பாரதம் முதலான இதிகாசப் புராணங்களில் காணப்படுகின்றன.

மைத்திரேய மகரிஷிக்குப்பின் 31-வது வியாசர் பதவிக்கு வருபவர் அவருடைய சீடராகிய தேவாபி மகரிஷியாகும் இவரைப் பற்றியக் குறிப்புக்களும் மேற்படி இதிகாச புராணங்களில் காணப்படுகின்றன. இந்த தேவாபி மகரிஷியும் பிரம்மஞான சங்கம் தோன்றுவதற்கு மூலகாரணஸ்தர்களில் ஒருவராவர். இவரை "குத்ஹூமி" மகரிஷி யென்றும், Master K. H. என்றும் பிரம்மஞான சங்கநூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. வரப்போகும் மனுவாகிய மாருமகரிஷியின் பெயரும், வரப்போகும் வியாசராகிய தேவாபி மகரிஷியின் பெயரும் சேர்ந்தே இதிகாசப் புராணங்களில் வருகின்றன. இந்த தேவாபி மகரிஷியின் வரலாற்றுக் குறிப்புக்களை பின் இணைப்பில் பார்க்கவும்.

அவனியின் அந்தரங்க அருளரசாட்சியில் வியாசர் பதவிக்கு வருபவர் முதன் முதலில் மக்களிடை மக்களாக அவதரித்து அம் மக்களின் மன பக்குவ நிலைக்குத் தக்கவாறு ஞானோபதேசங்களைப் போதிப்பர். அவர்கள் போதிக்கும் அறநெறிகளே பிற்காலத்தில் சமயங்களாக உருவெடுக்கின்றன. பின்பு அவசியம் நேரிட்ட போதெல்லாம் தம் சீடர்களை அதிட்டித்து நின்று போதிப்பர். அவர்கள் அவதரிப்பது பூரண அவதாரம், அம்ச அவதாரம், ஏகதேச அவதாரம், ஆவேச அவதாரம் என பலவகைப்படும். இராமரும், கிருஷ்ணரும் பூரண அவதாரங்கள்; பரசுராமர் அம்ஸ அவதாரம்; கிருஸ்துவின் அவதாரம் ஆவேச அவதாரமாம். ஆவேச அவதாரத்தில் தயார் செய்யப்பெற்ற சீடர்களின் சரீரத்தில் தற்காலிகமாக புகுந்து உபதேசித்தல் அதாவது சீடன் தன் சரீரத்தை விட்டு தற்காலிகமாக விலகி நிற்க, குருவானவர் அந்த சரீரத்தில் புகுந்து தொழிற்படுதலாம். சங்கராச்சாரியார், திருமூலர் போன்று பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டு கூடு பாய்தல்) போன்ற அவதாரங் களும், மாயாவிரூப அவதாரங்களும் இவ்வாறு அவதாரங்கள் பல வகைப்படும். இவற்றை ஞானக்கண்கொண்டு பார்த்தாலொழிய ஊனக்கண்ணுக்கு புலனாகா.

மனுவும் வியாசரும் அந்தரங்க அருளரசாட்சியில் ஏக காலத்தில் பதவி வகித்தாலும் மனுக்கள் ஒரு மூல மானிடவர்க்கத்திற்கு ஒரு மனுவீதம் இருப்பார்கள். ஆனால் வியாசர்களோ யுகாயுகம் தோன்றி உலக மக்கள் அனைவருக்கும் ஞானாசாரியராக இருந்து அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களின் பரிபக்குவ நிலைக்குத்தக்கதான வெவ் வேறான சமயஞானத்தைப் போதிப்பார். இதுபோது உலகில் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மூலவர்க்கங்களின் மக்களும் இருந்துவருகின்றனர் என்பதை கவனத்தில் கொள்ளவும். ஆதலால் வியாசர் எல்லாமக்களுக்கும் ஞானாசாரியராவர். மனு மக்களின் உடல் வளர்ச்சியையும், வியாசர் அவர்களது உயிர் (அறிவு) வளர்ச்சியை யும் கண்காணித்து வருகின்றனர் என்பதை மேலே பார்த்தோம். பொதுவாக முன்னவர் அரசராகவும், பின்னவர் ஆசிரியராகவும், ஆச்சாரியராகவும் அவதரிப்பர்.

இதற்கு முன்னிருந்த 29-வது கிருஷ்ண துவை பாயனவியாசர் சுமார் கி. மு. 60000 ஆண்டுகளுக்கு முன் வியாசர் பதவிப் பொறுப்பை ஏற்றதும் இந்தியாவில் மக்களிடை அவதரித்து, வேதங்களை ரிக், யசுர், சாம, அதர்வணம் என்று நான்காக வகுத்தும், இதிகாச புராணங்களை வகுத்தும், சூரிய பகவான் உபாசனையை மய்யமாகக் கொண்ட சநாதனதர்மமாகிய இந்து சமயத்தை பரதகண்டத்தில் ஸ்தாபித்தார். சநாதனதர்மம் என்ருல் அநாதி நித்தியநியதி (The Eternal Divine Law) என்று பொருள். இந்து சமயம் ஒரு பெரிய ஞான விருக்ஷத்தின் அடிமரம் என்ருல் மற்ற சமயங்கள் அதன் கிளைகளாக அமைந்துள்ளன.

"ஹிந்து" என்ற பதம் ஹ+இந்து என்ற இரு பதங்களாலானது. "ஹ" என்ருல் சூரியன், "இந்து" என்ருல் சந்திரன். முதன்முதல் மக்கள் இனம் தோன்றுதற்கு சூரிய லோகபிதுர்க்களும் (Solar Pitirs), சந்திரலோக பிதுர்க்களும் (Lunar Pitirs) மாதிரி சாயா சரீரங்களை (Proto-type Astral Body) கொடுத்து உதவியதாலும், பரத கண்டத்தை சூரியவம்ஸ இக்ஷுவாகுகுல மன்னர்களும், சந்திர வம்ஸ யதுகுல மன்னர்களும் ஆண்டு வந்ததால் இந்த சநாதன தர்ம சமயத்திற்கு இந்துமதம் என்றும், நமது பாரத நாட்டிற்கு இந்துஸ்தான் என்றும் பெயர் வழங்கலாயிற்று.

வேதாகம சாத்திரங்கள் ஞானகாண்டம், கர்மகாண்டம் என இருபெரும் பிரிவுகளாக வகுக்கப் பெற்றுள்ளது. ஞானகாண்டம் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஸ்ம், வேதாந்தம் என்ற ஆறு அங்கங்களையும், கலாந்தம், யோகாந்தம், நாதாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற ஆறு உபாங்கங்களையும் உடையது. இவற்றை ஷட்தரிசனம் என்றும் ஷடாந்தம் என்றும் வழங்கப்படுகின்றன. வேதாகமங்களின் ஞான காண்டப் பகுதி வியாசருடைய பார்வையின்கீழ் இருக்கின்றது. பிரஸ்தானத்திரியம் என்று வழங்கப்படும் உபநிடதங்கள், கீதை, பிரம சூத்திரம் ஆகிய மூன்று வேதாந்த சாத்திரங்கள் இந்த கிருஷ்ணதுவைபாயன வியாசரால் அருளிச் செய்யப் பெற்றவை. மற்றும் பதஞ்சலியோக சூத்திரத்திற்கு வியாக்கியான கர்த்தாவும் வியாசராவர்.

வியாசர் பின்பு சுமார் கி. மு. 40000 ஆண்டுகட்கு முன்பு "ஹெர்மிஸ்" என்ற நாமத்துடன் எகிப்து நாட்டில் அவதரித்து இறைவனை விஞ்ஞான முறையிலான ஜோதி (Light) வடிவில் வணங்கும் "ஓஸிரிஸ்" என்ற சமயத்தை தோற்றுவித்து அதை எகிப்து முதலிய நாடுகளில் பரவும்படி செய்தார். இச்சமயத்திற்கு அடிப்படையாக "மாண்டார்நூல்" (Book of the dead) என்ற சாத்திர நூலை அருளிச் செய்தார்.

பின் கி. மு. 30000-ம் ஆண்டில் "ஜாரதூஷ்ட்ரா" என்ற நாமத்துடன் பாரசீக நாட்டில் தம் சீடராகிய அந்நாட்டு இளவரசரின்

சரீரத்தின்மூலம் அவதரித்து, இறைவனை அக்னி (Fire) வடிவில் வணங்கும் சோராஷ்ட்ர சமயத்தை ஸ்தாபித்தார்.

பின்பு சுமார் கி. மு. 7000 ஆண்டுகட்குமுன் ஆர்ஃபியஸ் என்ற நாமத்துடன் கிரேக் நாட்டில் அவதரித்து இறைவனை நாதம் (Sound) வடிவில் சங்கீதம் (Music) மூலம் வழிபடும் "ஆர்ஃபிக்" என்ற சமயத்தை ஸ்தாபித்தார்.

கடைசியாக சுமார் 2500 ஆண்டுகட்குமுன் வடஇந்தியாவில் சித்தார்த்த கௌதமர் என்ற நாமத்துடன் அவதரித்து மக்களின் துக்கத்திற்கான காரணங்களையும் அவற்றை நிவர்த்திப்பதற்கான அறநெறி (Dharma) முறைகளையும் வகுத்துக்கொடுத்துவிட்டு எட்டாவது நிர்வாண தீட்சைப் பெற்று அந்தரங்க அருளரசில் மேல் பதவியான புத்தர் பதவிக்குப் போய்விட்டார். அவர் காட்டிய அறநெறி மார்க்கங்களே அவருக்குப்பின் புத்தசமயம் என வழங்கலாயிற்று.

கிருஷ்ண துவைபாயனவியாசர் புத்தர் பதவிக்குச் சென்ற பின்னர், அவரால் சித்தார்த்த கௌதமர் மூலம் பரப்பப்பெற்ற புத்த சமயக் கொள்கைகளில் கடவுளைப் பற்றியோ, ஆத்மாவைப் பற்றியோ, பக்தியைப் பற்றியோ கூறப்படவில்லையாதலால், பதி, பசு, பாசம், பக்தி இவற்றை அடிப்படையாகக் கொண்ட சநாதன தர்மமாகிய இந்து சமயத்தை புத்த சமயம் பாதித்து விபரீதபோக்கை உண்டாக்கத் தொடங்கியதால், அப்போக்கை தடுத்து நிறுத்த அந்தரங்க அருளரசாட்சியில் புத்தர் பதவிக்கு சமமான பதவியில் இருக்கும் மூன்று குமாரர்களில் (சனகர், சனந்தனர், சனாதனர்) ஒருவர் ஆதி சங்கராச்சாரியராக அவதரித்து. ஆகம விதிப்படி மந்திர, தந்திர, யந்திரங்களால் இந்தியாவின் பல பாகங்களில் சில ஆன்மீகக் கேந்திரங்களை (Occult Centres)யும், சிவாலயங்களையும் ஸ்தாபனம் செய்தார். இந்த ஆதி சங்கராச்சாரியார் உபனிடதம் முதலிய வேதாந்த நூல்களின் வியாக்கியான கர்த்தாவாகிய சங்கராச்சாரியார் அல்ல என்பதை இங்கு குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ண துவைபாயன வியாசர் மேல் பதவியாகிய புத்தர் பதவிக்குப் போய்விட்ட பிறகு, அவருடைய ஸ்தானத்தில் அவரின் சீடராகிய மைத்திரேய மகரிஷி 30வது வியாசர் பதவிக்கு வந்திருக்கின்றார். ஆதலால் இப்போதுள்ள வியாசர் மைத்திரேய மகரிஷியாகும்.

மைத்திரேயமகரிஷி வியாசர் பதவியை ஏற்றதும் பிருந்தாவனத்தில் கிருஷ்ணனாக அவதரித்து பக்தி மார்க்கத்தை (Krishna Cult) நிலை நாட்டினார். துவாபரயுகத்தின் இறுதியில் அவதரித்த பார்த்தசாரதி கிருஷ்ணன் வேறு, இந்த பிருந்தாவன குழந்தை (கண்ணன்) வேறு. காலப்போக்கில் இரண்டு கிருஷ்ணர்களையும் இதிகாசத்தில் ஒன்றாக்கப்பட்டிருக்கிறது.

பின் மைத்திரேய வியாசர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தீனத்தில் தமது சீடர் ஜேசுவின் (Jesus) சரீரத்தில் ஆவேசித்து கிரைஸ்ட் (Christ) என்ற நாமத்துடன் அன்பை வலியுறுத்தும் கிருஸ்துவ சமயத்தை ஸ்தாபித்தார். இந்த சீடர் ஜேசுதான் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் இராமானுஜராக அவதரித்து விசிஷ்டாத்வைதத்தை நிலைநாட்டினார். இதுபோது ஜீஸஸ் மேல் நாட்டில் கிருஸ்தவ சமயத்தை கண்காணித்து வருகின்றார்.

பின்பு கி. பி. 1150-ம் ஆண்டில் வியாசர் தமது சீடர் ஒருவரை அரபு நாட்டிற்கு அனுப்பி அங்கு மகம்மது நபி என்ற நாமத்துடன் அந்நாட்டு மக்களின் நிலைக்கேற்ற இஸ்லாமிய சமயத்தை நிருவும் படி செய்தார்.

பின் கி. பி. 1470-ம் ஆண்டில் தமது சீடர் ஒருவரை பஞ்சாபில் "குரு நானக்" ஆக அவதரிக்கச் செய்து இந்து சமயத்தையும் இஸ்லாமிய சமயத்தையும் சமரசம் செய்வதற்கான சீக்கிய சமயத்தை ஸ்தாபிக்கும்படி செய்தார்.

மற்றும் வியாசர் திருச்சிற்றம்பலத்திலிருந்து தமது சீடர்களை பல் வேறு காலங்களில் பல்வேறு நாட்டிற்கு அனுப்பி ஆங்காங்கே கால தேச வர்த்தமானங்கட் கிணங்க இறை ஞானத்தை (Theosophy) பரப் பும்படி ஏற்பாடு செய்திருக்கின்றார். இவ்வாறு கன்ஃபூசியஸ், லௌட்ஸி, ட்ஸங்காப்பா முதலானவர்களை சீன, ஜப்பான் நாட்டிற் கும், பித்தோகோரஸ், பிளாட்டோ, ப்ரூனோ, அரிஸ்டாடோல், சோக்கராட்டிஸ் முதலானவர்களை கிரீஸ், இட்டாலி முதலிய மேல் நாட்டிற்கும், ராஸிக்ரூஷ்யன் முதலானவர்களை அமெரிக்க நாட்டிற் கும், நாகார்ஜுனர், ஆரியசங்கா, மத்வாச்சாரியார் முதலானவர் களை இந்தியாவிற்கும் அனுப்பி இறைஞானத்தின் மறைபொருட்களை (Divine Mystic Philosophy) பரப்பியுள்ளார்.

## அகத்தியரின் அலுவல்கள்

இதுவரை அவனியின் அந்தரங்க அருளரசாட்சியில் உருத் திரனின் பிரதிநிதியாகிய மனுவின் அலுவல்களைப் பற்றியும், விஷ்ணு வின் பிரதிநிதியாகிய வியாசரின் அலுவல்களைப் பற்றியும் பார்த் தோம். இனி அந்த அந்தரங்க அருளரசில் பிரம்மாவின் பிரதி நிதியாகிய அகத்தியரின் அலுவல்களைப் பற்றிப் பார்ப்போம்.

கிரியாசத்தி (Divine Activities)யுடன் கூடிய பிரம்மாவின் பிரதி நிதியாக அகத்திய மகரிஷி அருளரசில் உலகில் நடைபெறும் கலாச் சாரத்திற்கும் யக்ஞமாதிகிரியைகளுக்கும் பொறுப்பாளியராக இருக் கின்றார். சப்தரிஷிகளுக்குள் இவர் முதன்மையானவர். நவக் கிரகங்களில் சனி பகவானுக்கு மட்டும் ஈஸ்வரன் என்ற பட்டப்பெயர் உண்டு. ஆதலால் அவர் சனீஸ்வரர் என்று வழங்கப்படுகின்றார்.

அதுபோல் சப்தரிஷிகளில் அகத்தியருக்கு மட்டும் ஈஸ்வரர் என்ற பட்டம் உண்டு. ஆதலால் அவர் அகத்தீஸ்வரர் என்று அழைக்கப் பெறுகின்ருர். தமிழ் நாடு தோன்றியபோது இவர் அதன் பாது காவலராக பரமேஸ்வரரால் தமிழகத்திற்கு அனுப்பிவைக்கப் பெற்ருர் என்பதை மேலே பார்த்தோம். அகத்தியர் பிரம்மாவின் மானச புத்திரர்.

அவனியின் அந்தரங்க அருளரசாட்சியில் வியாசர்வேதாகமங் களின் ஞானகாண்டத்திற்கு பொறுப்பாய் இருப்பதுபோன்று, அகத்தியர் வேதாகமங்களின் கருமகாண்டப்பகுதியாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தசு, கற்பம், நிருத்தம் ஆகிய ஆறு அங்கங்களேயும், வானசாத்திரம், சோதிடம், ஆயுர்வேதம், கணிதம், சிற்பம், ரசவாத மாதி கலாச்சாரப்பகுதிகளாகிய ஆறு உபாங்கங்களேயும் பொறுப் பேற்று நடத்துகின்ருர். சொல்லப்போனுல் வியாசர் வேதங்கட்கும், அகத்தியர் அகமங்கட்கும் பொறுப்பாளியாக இருக்கின்ருர்கள்.


தமிழகம் தனி நாடாக இருந்தபோது அதன் பாதுகாவலராக இருந்த அகத்தியர், தமிழ் நாட்டின் தென்பகுதி அழிந்து வடபகுதி ஆரிய நாட்டுடன் இணேந்த பிறகு இறைவனின் இந்தியப் பிரதிநிதி யாக (Regent of India) அமர்ந்து சநாதன தர்மமாகிய இந்து சமயத்தை கண்காணித்து வருகின்ருர். ஆரிய நாடு தோன்றிய போது அகத்தியர் பொதியமலேயிலிருந்து இமயம் வரை யாத்திரை செய்து ஆங்காங்கே ஆச்சிரமங்களே அமைத்துக் கொண்டு ஆகமத் தின் அடிப்படையில் அமைந்த தமிழர்களின் சமய கலாச்சாரங்களே யும், வேதத்தின் அடிப்படையில் அமைந்த ஆரியர்களின் சமய கலாச்சாரங்களேயும் சமரசப்படுத்தி வைத்தார். சோதிடம், கலே. விஞ்ஞானம், பக்தி (சரியை), கிரியாசடங்குகள் (கிரியை) ஆகிய ஐந்து துறைகள் அகத்திய மகரிஷியின் பொறுப்பில் இருக்கின்றன. ஒவ்வொரு துறைக்கும் ஒரு ரிஷி தலேமை வகிக்கின்ருர்.

மன்பதைக்கு மனு சிரசு (இச்சை, அறிவு) போன்றும், வியாசர் இருதயம் (ஞானம், அன்பு) போன்றும், அகத்தியர் ஐந்து விரல் களுடன் கூடிய கை (கிரியை, செயல்) போன்றும் விளங்குகின்றனர்.

மனுக்கள் உலக மக்களின் உடல் உருவ வளர்ச்சியையும், வியாசர் மக்களின் உயிர் ஞான வளர்ச்சியையும், அகத்தியர் மக்களின் கலே, கலாச்சார அறிவு வளர்ச்சியையும் கவனித்து வரு வதுடன் மக்களின் பாவ புண்ணியங்களே சித்ரா குப்தர்களுடன் (Lipikas) கணிக்கின்ருர்.

அகத்தியர் தமிழகத்தின் பாதுகாவலராக வந்தபோது அவர் குமாரக் கடவுளிடம் தமிழ்மொழியை கற்று வந்தார் என்று மேலே பார்த்தோம். தமிழ் மொழிக்கு முதன்முதல் "அகத்தியம்" என்ற இலக்கண நூலே அருளியவரும் அகத்தியரே யாவர். பிறகு, ஆரியர் தோன்றிய பின் அவர்கள் மொழியாகிய சமஸ்கிருதத்திற்கு

இலக்கணம் செய்தவர் பானினி என்பதை இங்குக் குறிப்பிடத் தக்கது. அகத்தியர் தமிழ் இலக்கணம் இலக்கியமட்டுமல்லாமல் சோதிடம், வைத்தியம், ஞானம் முதலிய நூல்களுக்கும் ஆசிரியரா வார். அந்நூல்கள் இன்றும் தமிழகத்தில் வழக்கத்திலிருக்கின்றன. அகத்தியருடைய வரலாற்றில் அநேக அரிய அற்புத நிகழ்ச்சிகள் அடங்கியிருக்கின்றன.



திருவள்ளுவர்




சுமார் 2000 ஆண்டுகட்குமுன் அகத்தியர் பாண்டிய மன்னன் வேண்டுகோட்கிணங்க சென்னை மைலாப்பூரில் திருவள்ளுவராக அவதரித்து, மதுரைசென்று அங்கு தமிழ் சங்கத்தின் தலைவராக அமர்ந்து, பாண்டிய மன்னனின் அந்தரங்க அரசியல் ஆலோசக ராகப் பணிபுரிந்து வந்தார். பாண்டிய மன்னன் விருப்பத்தின்படி உலகம் போற்றும் எந்நாட்டவருக்கும் எக்காலத்தும் ஏற்புடைத் தான அறம், பொருள் இன்பத்தைக்கூறும் முப்பால் திருக்குறள்

என்ற அரிய தர்மசாத்திர நூல் ஒன்றை அருளிச் செய்தார். அத்துடன் மக்கட்கு பயன்படக் கூடிய வைத்தியம், சோதிடம், ஞான நூல்களையும் அருளிச் செய்துள்ளார். அவைகளும் இன்றும் தமிழ் நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகின்றன. பாண்டிய நாடு க்ஷீண தசையடையவே திருவள்ளுவர் மீண்டும் மைலாப்பூர் திரும்பி நெடு நாட்கள் மக்களுக்கு ஞானோபதேசங்களையும் அறநெறிகளையும் போதித்து இறுதியில் அங்கேயே சமாதியடைந்தார். திருவள்ளுவரின் உண்மையான தோற்றத்தை பிளவட்ஸ்கி அம்மையார் தமது யோக சக்தியால் ஓர் இந்திய யோகி என்ற தலைப்பின்கீழ் அவர் உருவத்தை பொறித்துள்ளார். இந்த படம் இன்றும் அடையாற்றில் இருக்கின்றது.

மேலும் அகத்தியர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் வடலூர் என்ற திவ்யம்பதியில் திருவருட் பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் என்ற திருநாமத்துடன் அவதரித்து, சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்ற ஒரு ஸ்தாபனத்தை நிருவி அதன் மூலம் மக்களுக்கு இறை ஞானத்தை (Divine Wisdom) போதித்து, திருவருட்பா திருமுறை என்ற ஓர் அரிய தத்துவ ஞான நூலையும் அருளிச்செய்துள்ளார். அதில் வைத்தியப் பகுதியுடன் பல்வேறு நிலைகளிலுள்ள மக்களின் தரத்திற்கேற்ப கர்ம காண்டம், ஞான காண்ட பொருட்களெல்லாம் அடங்கியுள்ளன. அவருக்கு எல்லா மொழிகளும் தெரியுமென்றாலும், அவருடைய பாடல்களில் பல வட மொழியே சிறப்பளிப்பதானாலும் தமிழ்மொழி, தமிழ்நாடு இவற்றின் தொன்மைக்கும் மாண்புக்கும் ஒரு தனி சிறப்பு அத்தியாயம் ஒதிக்கியுள்ளார். பிரம்ம ஞான சங்க தலைமை அலுவலகத்தை தமிழகத்திற்கு (அடையாற்றுக்கு) மாற்றப் பட்டதே இதற்கு ஒரு சான்றாகும். வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க இயக்கத்தின் அடிப்படை நோக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும் (1) ஆன்மநேய ஒருமைப்பாடு (2) சத் விசாரணை (3) ஜீவ காருண்யம் (4) பரோபகாரம் ஆகிய நான்கும் நான்கு தூண்களாக அமைந்துள்ளன.

வள்ளலார் பொதுவாக இந்தியர்களுக்கு, சிறப்பாக தமிழர்களுக்கு ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையை அடிப்படையாக வைத்து சமரச சுத்த சன்மார்க்கத்தை நிருவியதோடல்லாமல் விஞ்ஞான உலோகாயுத மனப்போக்கையுடைய மேல் நாட்டவருக்கும் அவர்களுக்குத் தக்கதாக சர்வதேச சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பிரம்ம ஞான சங்கம் (Theosophical Society) என்ற ஒரு ஸ்தாபனத்தையும் தமது திருச்சிற்றம்பல சகோதர சீடர்களைக் கொண்டு ஆரம்பித்துக் கொடுத்துள்ளார். இந்த இரண்டு இயக்கங்களின் நோக்கங்களும், கொள்கைகளும், தத்துவங்களும் ஒன்றேயாகும். இதன் விரிவை ஆசிரியரால் வெளிவரயிருக்கும் "இராமலிங்க சுவாமிகளும் பிரம்மஞான சங்கமும்" என்ற நூலில் காண்கவும்.

அகத்தியர், வள்ளுவர், வள்ளலார் இம்மூவருடைய வரலாற்றுக் களையும், உபதேசங்களையும், தத்துவங்களையும் அகச்சான்றுகளுடன் ஒப்புநோக்கி சீர்தூக்கி ஆராய்ந்தால் இம்மூவரும் ஒருவரேயென்பது தெற்றெனப்புலனுகும். அதுமட்டுமல்ல பிரம்மஞான சங்கத்தில் "மகாசோகன்" என்பவரைப் பற்றி ஜீனராஜதாசர் எழுதியிருக்கும் அத்தனைத்தன்மைகளும் வள்ளலாருக்கும் பொருந்தும்.



மகாசோகன் மேலே சொல்லப்பெற்ற அந்தரங்க அருளரசில் மூன்ருவது துறைக்கு தலைவர் என்று கூறப்படுகிறது. மகாசோகன் என்பது புத்தசமயபரிபாஷை; பெரிய பிரபு (Great Lord) என்று அர்த்தம்; மகாரிஷி என்றும் சொல்லலாம். அதனுல் மகாசோகன்

தான் வள்ளலாரோ ; வள்ளலார் தான் மகாசோகனே என்ற ஐயம் தோன்றுகின்றது. இருவரும் பிரம்மஞான சங்கத்தில் சம்பந்தப் பட்டவர்கள் என்பது பிரம்மஞான சங்க நூல்களிலிருந்து பட்டவர்த் தனமாகத் தெரியவருகிறது.

## சிற்சபை அங்கத்தினர்கள்

இந்த திருச்சிற்றம்பலம் என்ற தெய்வீக ஞானப் பேரவையில் அங்கம் வகிக்க வேண்டு மென்றால் குறைந்தது ஐந்தாவது ஞான தீட்சைப்பெற்ற சீவன் முக்தர்களாக இருக்கவேண்டும். அதன் அருளரசாட்சியில் பதவி வகிக்கவேண்டுமானால் குறைந்தது 7-வது நிர்வாண தீட்சை பெறல் வேண்டும். 9-வது, 10-வது நிர்வாண தீட்சை பெற்றவர்களே கடவுளராவர். ஒன்றுமுதல் நான்கு வரை யிலான ஞானதீட்சை பெற்றவர்கள் இச்சிற்சபையில் சேர்க்கை அங்கத்தினர் (Associate Probationary Members)களாக இருப்பர்.

திருச்சிற்றம்பலத்தில் அங்கம் வகிக்கும் எல்லோரும் உரன் எனும் தோட்டியான் ஓர் ஐந்தும் காத்து, பொறிவாயில் ஐந்தவித்து, காமக்குரோதாதி தீய குணங்களை அறவே விட்டவர்களாய், ஆன்மாவை பந்தித்திருக்கும் பத்துத்தளைகளினின்றும் விடுபட்டவர் களாயும், தன்னலமற்ற தியாக புத்தியும் கருணை உள்ளமும் (Compassionate) படைத்தவர்களாயும், பரோபகார சிந்தனையும் சமநோக்கும் உடைய தொண்டர்களாயும் இருக்கவேண்டும்.

ஆன்மாக்களை பந்தித்திருக்கும் பத்துத்தளைகளாவன :—

1. மயக்கம் அல்லது விபரீதம்.
2. ஐயம் அதாவது சந்தேகம்.
3. உலகாச்சார சமயாச்சார சங்கற்ப விகற்பங்கள்.
4. காமம்.
5. குரோதம்.
6. தூலதேகப்பற்றும் இகலோக போக இச்சையும்.
7. சூக்குமதேகப்பற்றும் பரலோக போக இச்சையும்.
8. ஆணவம்.
9. அழற்சி அல்லது எரிச்சல் (Irritation).
10. அவித்தை அல்லது அஞ்ஞானம்.

இதன் விரிவை ஆசிரியரால் வெளிவரயிருக்கும் "ஞான சாதனங் களும் தீட்சாப்படிகளும்" என்ற நூலில் காண்கவும்.

இத்திருச்சிற்றம்பலத்தில் உள்ளவர்களை நான்காவது தீட்சை வரை பெற்றவர்கள் சகலரில் சாமுசித்திர் என்றும் ; 5வது. 6வது

தீட்சை பெற்றவர்கள் பிரளயாகலர் என்றும்; 7வது, 8வது தீட்சை பெற்றவர்கள் விஞ்ஞான கலர் என்றும், 9வது, 10வது தீட்சை பெற்றவர்கள் கடவுளர்கள் என்றும் வகுக்கலாம். விஞ்ஞான கலர் அட்டமாசித்திகளும் ஐந்தொழில் ஆற்றலும் பெற்றவர்கள் என்று மேலே பார்த்தோம்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர்கள் சகலர். சகலரில் சாமுசித்தர் (உத்தமர்). வைநயிகர் (மத்திமர்). பிராகிருதர் (அதமர்) என்ற முப்பிரிவினர்கள் உளர். மாயா மலத்தைவென்று ஆணவம், கன்மம் என்ற இருமலங்களோடு இருப்பவர்கள் பிரளயாகலர்; மாயை, கன்மம் ஆகிய இருமலங்களையும் வென்று ஆணவ மலத்தோடு மட்டும் இருப்பவர்கள் விஞ்ஞான கலர் எனவும் கூறப்படுகின்றனர். சகலருக்கு அசுத்த மாயா தத்துவ தனு, கரண, புவன, போகங்களும், பிரளயாகலருக்கு சுத்தாசுத்த தத்துவ தனு, கரண, புவன, போகங்களும், விஞ்ஞான கலருக்கு சுத்த மாயா தத்துவ தனு, கரண, புவன, போகங்களும் அமைந்துள்ளன.

சீவன்முக்தர்களுக்கு மகர்லோகமும், பிரளயாகலருக்கு ஜனோ லோகமும், விஞ்ஞானகலருக்கு தபோலோகமும் நிரந்தர உலகமாகும். இவர்கள் உலகார்த்தமாக நமது உலகில் வந்து அவதரிக்கும்போது உலகில் எந்தப் பகுதியில் வந்து அவதரிக்கின்றார்களோ அப்பகுதியிலுள்ள மக்களின் குடும்பத்தில் வந்து உதிக்கின்றனர். ஆதலால் இத்திருச்சிற்றம்பல சித்தர்களில் எல்லா நாட்டவரும் எல்லா சமயத்தவரும் இருக்கின்றனர். எல்லா சமயநூல்களும் இத்திருச்சிற்றம்பலத்திலிருந்தே வந்ததாகையால், எல்லா சமயங்களிலும் அது புராணங்கள் (Mythology) ஆனாலும் சரி, கிரியா சடங்குகளானாலும் (Rituals & Sacraments) சரி, தத்துவ சாத்திரங்சள் (Philosophy) ஆனாலும் சரி ஓர் அடிப்படை ஒற்றுமையை காண்கின்றோம்.

உலோகார்த்தமாக பூமியில் வந்து அவதரிக்கும் மகரிஷிகளும் சித்தர்களும் (Occultists) மக்களின் மாசுபட்ட சூழ்நிலைகளினின்றும் தங்களது ஆன்மீக சைதன்ய சக்தியை (Spiritual Magnitism) காத்துக்கொள்வதற்காக உலகின் பல பகுதிகளிலுள்ள ஜனசஞ்சாரமற்ற வனங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் ஆச்சிரமங்கள் அமைத்துக் கொண்டு வதிந்து வருகின்றார்களென்று மேலே பார்த்தோம். அவர்கள் தங்கள் ஆச்சிரமங்களில் இருந்தபடியே தங்களது சங்கல்பமாத்திரையானே இறைஞான, ஆன்மஞான, விஞ்ஞான எண்ண அலைகளை (Thought Waves) மனோ உலகில் (Mental Plane) அனுப்பி பரவ விடுகின்றனர், அந்த அலைகள் உலகின் மக்களிடை பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பவர்களின் புத்தியில் உள்ளுணர்வாக (Intitution) தோன்றி அவர்களை அந்தந்த துறைகளில் ஊக்குவிக்கும் (Inspiration). உலகில் பல்வேறு விஞ்ஞானி

(Scientists) களின் பல்வேறு ஆராய்ச்சி முடிவில் உதிக்கும் கண்டு பிடிப்புக்கள் (Discoveries) மகரிஷிகளின் இந்த சங்கல்ப எண்ண அலைகளால் உதிக்கின்றன. ஆன்மீக சாதகர்களுக்கும் இவ்வாறே ஆன்ம ஞானம் அருளப்படுகின்றன.

மேலும் மகரிஷிகள் உலகில் ஆன்மீக சக்தியும், இறைவன் சைதன்யமும் குறையும்போது அதை புத்துயிரூட்டும் பொருட்டு நூறு ஆண்டுகளுக்கொருமுறை மறைஞானத்தை (Divine Mystries) வெளிப்படுத்தும் இயக்கங்களை உலகில் ஆரம்பிக்கின்றனர். அவ்வாறுன இயக்கங்களில் ஒன்றுதான் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் இந்தியாவில் ஸ்ரீமித்ரதேவரால் ஆரம்பிக்கப் பெற்ற சுத்த தர்ம மண்டலம் என்ற இயக்கமாம். பின்பு மாணிக்கவாசகர், அப்பர் அடிகள், தாயுமானுர், மெய்கண்டார் முதலானவர்களின் இயக்கங்களாம். அவற்றின் தொடர்பாகவே 19-ம் நூற்றுண்டில் ஆரம்பிக்கப் பெற்ற சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமும், பிரம்மஞான சங்கமும் ஒரு தனி சிறப்பிடத்தைப் பெற்றிருக்கின்றன.

ஏனெனில் சென்ற காலங்களில் தோற்றுவிக்கப் பெற்ற சமயங்களும், ஆன்மீக இயக்கங்களும் அப்போதைய காலதேசவர்த்தமானங்கட்கு ஏற்ப பல இடங்களில் தனித்தனியாக ஏற்பட்டன. அக் காலதேச வர்த்தமானங்கள் விஞ்ஞான காலமாகிய இதுபோது அடியோடு மாறி, காலமும் தேசமும் (Time and Space) ஒன்றுபட்டு நிற்கும் காலமாகும். சிலமணி நேரங்களில் உலகை சுற்றி வந்து விடலாம்; ஒருசில நாட்களில் சந்திர மண்டலமே போய் வந்து விடலாம்; தேசங்களும் தனித்து நின்ற சூழ்நிலை போய், உலகமக்கள் கூட்டுறவுடன் ஒன்றுபட்டு நிற்கும் வர்த்தமானத்தையுடைய காலம். ஆகவே உலக மக்களை ஒன்றுபடுத்தி சமாதானத்துடன் வாழ்விக்க இக்காலத்திற்கேற்ற ஒரு சமயம் வேண்டுவது இன்றியமையாததாகி விட்டது. அந்த சமயம்தான் ஆன்மநேய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமரச சுத்த சன்மார்க்க சமயமாகும். இதைத்தான் திருச்சிற்றம்பலத்து மகரிஷிகள் இதுபோது ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு, இத்திருச்சிற்றம்பலத்தின் சிற்சபையும் (Occult Hierarchy & Spiritual Dynasty) அதன் அந்தரங்க அருளரசாட்சியும் (The Inner Government of the World) ஆகிய இவற்றின் மாண்புகள் சொல்லற்கரிது; நினைப்பதற்கரிது. இதைத்தான் திருவருட்பிரகாச வள்ளலார் "கற்பனை முழுதும் கடந்து ஒளிதரும் ஓர் அற்புத சிற்சபை" என்றும் "சேகரமாம் பலசித்தி நிலைக்கெல்லாம் ஆதாரமாம் சிற்சபை" என்றும் அருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

இராமலிங்காய நம:

பின் இணைப்பு - I

# மாரு & தேவாபிமகரிஷிகள்

பிரம்மஞான சங்கம் தோன்றுதற்கு மூலகாரணஸ்தர்களாகிய அடுத்துவரப்போகும் மனுவாகிய மாருமகரிஷி (Master (M) Morya) யும், அடுத்து வரப்போகும் வியாசர் தேவாபிமகரிஷி (Master K. H. Koot–Humi)யும் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள்.

இந்த இரண்டு மகரிஷிகளைப்பற்றியும் விஷ்ணு புராணம், பாகவதம், கல்கி முதலிய புராணங்களிலும் இதிகாசங்களிலும் காணப்படுகின்றன. அவற்றை யெல்லாம் திரட்டி கல்கத்தா பிரம்ம ஞானகிளைச் சங்க அங்கத்தினர் ஸ்ரீ சுதர்ஸனதாஸ் என்பவர் சுமார் 50 வருடங்களுக்குமுன் கட்டுரைகளாக வெளியிட்டிருக்கின்றார். அக் கட்டுரைகள் இப்போது பிரம்மஞான சங்கம் இந்தியப் பகுதியால் தேவாபி & மாருமகரிஷிகள் (Rishi Devapi and Maru) என்ற நூலாக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவருக்குமுன் ஸ்ரீ R. ரகுநாத ராவ் என்பவர் "புராணங்களில் மாரு & தேவாபி மகரிஷிகளின் பரம்பரை" என்று ஐந்துவருட பிரம்மஞானம் (Five years of Theosophy) என்ற நூலில் வெளியிட்டுள்ளார். ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரும் தமது பாகவதசாரம் என்ற நூலில் இவர்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்றார்.

## மாரு மகரிஷி வரலாறு

மாருமகரிஷியின் சூரியவம்ஸ வரலாறு கீழ்க்கண்டவாறு புராண இதிகாசங்களில் கூறப்பெற்றிருக்கின்றன. பிரம்மாவின் மானச புத்திரர்களில் ஒருவர் "மாரிச்சி" அதாவது சூரியன் ஆவர். இவருடைய பரம்பரையில் வந்த மன்னர்கள் எல்லாம் சூரியவம்ஸ (Solar Dynasty) மன்னர்களாகும். மனு, இக்ஷிவாகு, யுவனாஷ்வா, புருகுட்ஸா, ஷிக்ரா, முருந்தன், திருசங்கு, ஹரிச்சந்திரன், பகிரதன். ஸ்ரீராமர் வரை சூரியவம்ஸ பரம்பரையில் வந்த மன்னர்களாகும், இவர்களில் இக்ஷிவாகு பிரபலமான மன்னனாக இருந்ததால் இந்த

சூரியவம்ஸத்தை இக்ஷீவாகுகுல சூரியவம்ஸம் என்று பொதுவாக வழங்கப்பெற்று வருகின்றது. ஸ்ரீ ராமர் காலத்தில் தான் சூரிய வம்ஸ மன்னர்கள் பரசுராமரால் பூண்டோடு அழிக்கப்பட்டார்கள். இதில் ஐந்தாவதாக சொல்லப்பெற்ற "ஷிக்ரா" என்ற மன்னருடைய குமாரர் தான் மாருமகரிஷியாகும். இவரை 'சுமித்ரா' என்று கூட வழங்கப்பெறுகிறது.

இவர் சுமார் கி. மு. 600-ல் தோன்றிய சேஷநாகர் க்ஷத்ரிய வம்ஸ பிரிவிலிருந்து உண்டாகி, வடஇந்தியாவில் மௌரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த சந்திரகுப்த மௌரியராக அவதரித்தார் என்றும், இவருடைய குமாரர் தான் அசோக சக்ரவத்தி யென்றும் கூறப்படுகிறது. அசோக சக்ரவர்த்திதான் புத்த சமயத்தை இந்தியாவில் பரப்பியவர். பிரம்ம ஞான சங்க ஸ்தாபகரான கர்னல் ஆல்காட்டின் முந்தய பிறப்பு இந்த அசோக சக்ரவர்த்தி தான் என்றும் கூறப்படுகிறது.

மாரு மகரிஷி இப்போதைய ஐந்தாவது ஆர்யவர்க்க மனுவாகிய வைவஸ்வத மனுவின் சீடராவர். இவர் அடுத்து வரும் ஆருவது மூல வர்க்கத்திற்கு அந்தரங்க அருளரசாட்சியில் மனுவகை பதவி ஏற்பார். இவர் இமயமலைப் பிரதேசத்தில் மனுவின் அருகில் ஆச்சிரமங் கொண்டிருக்கின்ருர். இவர் இராஜஸ்தானில் ரஜபுட் க்ஷத்திரிய குடும்பத்தில் பிறந்தவர் என்றும், கம்பீரமான தோற்றத்தையுடையவர் என்றும் கூறப்படுகின்றது. பிளவட்ஸ்கிஅம்மையார் சிறு பிராயத்தில் தன் தகப்பனருடன் விக்டோரியா மகாராணியின் மகுடாபிஷேகத்தைப் பார்க்க சென்றிருந்த போதுஇவரை லண்டன் ஹைடி பார்க்கில் ரஜபுத்திர சிப்பாய்ப் படையின் தளபதியாக வந்திருந்ததைக் கண்டதாகக் கூறுகின்ருர். விக்டோரியா மகாராணி காலத்தில் அநேக சிற்றரசர்களைக் கொண்ட இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் கீழ் இருந்தபோது இந்த சிற்றரசர்கள் தங்கள் படைகளை மகாராணியின் மகுடாபிஷேகத்திற்கு அணி வகுப்புக் காட்சிக்கு அனுப்பி வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேவாபி மகரிஷி வரலாறு

பிரம்மாவின் மற்ளுெரு மானச புத்திரரான அத்ரி மகரிஷியின் குமாரர் சந்திரன் ஆகும். இவருடைய பரம்பரையில் வந்த மன்னர்கள் தான் சந்திரவம்ஸ (Lunar Dynasty) மன்னர்கள் எனப்படுவர் புதன், புரூருவர், நகுஷன், யயாதி, புரு, துஷ்யந்தன், பரதன், பரத்துவராஜர், ஹஸ்தி, குரு, பரிக்ஷித், பீஷ்மர், பிரதிபர் முதலானோர்கள் சந்திர வம்ஸ பரம்பரையில் வந்த மன்னர்களாகும். ஹஸ்தி மன்னர் பெயரால் அஸ்தினுபுர நகரமும், குரு மன்னர் பெயரால் குருக்ஷேத்திரம் என்ற நகரமும் ஏற்பட்டன. கடைசியாக சொல்லப் பெற்ற

பிரதிபர் என்ற மன்னருக்கு தேவாபி, சந்தானு, பாலிகா என்ற மூன்று குமாரர்கள். பட்டத்திற்கு மூத்தப் பிள்ளையாக இருந்தாலும் தேவாபி அரசு பட்டத்தை துறந்து, துறவியாகி ஆன்மீக வாழ்க்கையை நாடி காட்டிற்கு சென்று தவம்புரியலானுர்.

தேவாபி மகரிஷி கி. மு. 30000–ல் பாரசீகத்தில் அந்நாட்டு அரசிளங்குமரனுக அவதரிந்து கிருஷ்ணதுவை பாயன வியாசரின் சீடராக இருந்தார். இவருடைய சரீரத்தில்தான் வியாசர் ஜாரதூஷ்டர் என்ற நாமத்துடன் அவதரித்து, ஜாரதூஷ்ட்ர சமயத்தை ஸ்தாபித்தது. பின்பு கி. மு. 582-ல் கிரீஸ் நாட்டில் பைத்தகோரஸாக அவதரித்து, மேல் நாட்டில் இறைஞானத்தைப் பரப்பினுர். பின் இந்தியாவில் நாகார்ஜுனராக அவதரித்து, அநேக தத்துவ ஞான நூல்களை அருளியுள்ளார். இவர் பவுஷ்பின்ஜீ மகரிஷியின் சீடராக சாமவேதத்தின் குதூமிசாகை என்ற சாகையை தொகுத்தவராதலால் அச்சாகைக்கு இவருடைய பெயரே வழங்கலாயிற்று.

தேவாபிமகரிஷி இதுபோது குட் ஹிமிலால்சிங் என்ற நாமத்துடன் பஞ்சாபில் காஷ்மீர் பிராமணர் குலத்தில் அவதரித்து, திபேத்தில் புத்தசமய மொனுஸ்ட்ரியில் லாமாவாகவும் இருந்திருக்கின்ருர். இப்போது இவர் மைத்திரேய வியாசரின் சீடராக பணியாற்றிக்கொண்டிருக்கின்ருர். மைத்திரேய மகரிஷி மேல் பதவியான புத்தர் பதவியை யடைந்தபின் தேவாபிமகரிஷியே அவருக்கு அடுத்து அந்தரங்க அருளரசில் வியாசர் பதவியை ஏற்பார் என்று கூறப்படுகிறது.

மேற்சொல்லிய மாருமகரிஷியும் தேவாபிமகரிஷியுமே பிரம்ம ஞான சங்கம் தோன்றுவதற்கு மூலகாரணஸ்தர்களாவர். மற்ெருரு மூலகாரணஸ்தராகிய திருவருட் பிரகாசவள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் வரலாற்றைப்பற்றி ஆசிரியரால் வெளிவரயிருக்கும் வள்ளலாரும் பிரம்மஞான சங்கமும் என்ற நூலில் காண்கவும். இவர் அகத்தியரின் அவதாரம் என்பதை மேலே பார்த்தோம்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி ! தனிப்பெருங்கருணை !
அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி !

பின் இணைப்பு - II

## சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் அருளிய திரு அருட்பா



## அருட்பெருஞ்ஜோதி அகவல்

### சிற்சபைவிளக்கம்

சுத்தசன்மார்க்க சுகத்தனி வெளியெனும்
அத்தகைச்சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்தமெய்ஞ்ஞான சுகோதய வெளியெனும்
அத்துவிதச்சபை அருட்பெருஞ்ஜோதி
தூயகலாந்த சுகந்தரு வெளியெனும்
ஆயசிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஞானயோகாந்த நடத்திரு வெளியெனும்
ஆனிஇல் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
விமல போதாந்தமாம் மெய்ப்பொருள் வெளியெனும்
அமல சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
பெரியநாதாந்தப் பெருநிலை வெளியெனும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சுத்தவேதாந்தத் துரியமேல் வெளியெனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்தசித்தாந்த சுகப்பெரு வெளியெனும்
அத்தனி சிற்சபை அருட்பெருஞ்ஜோதி

தத்துவாதீத தனிப்பொருள் வெளியெனும்
அத்திரு அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சச்சிதானந்தத் தனிப்பர வெளியெனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
காரணகாரியம் காட்டிடு வெளியெனும்
ஆரண சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஏகம் அனேகம் எனப்பகர் வெளியெனும்
ஆகம சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
வேதாகமங்களின் விளைவுகட்குஎல்லாம்
ஆதாரமாம் சபை அருட்பெருஞ்ஜோதி
என்றுஆதிய சுடர்க்கு இயல் நிலையாயது
அன்றும் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
சமயம் கடந்த தனிப்பெரும் வெளியாய்
அமையும் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுடராம்சபை அருட்பெருஞ்ஜோதி
துரியமும் கடந்த சுகபூரணம்தரும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எவ்வகைச் சுகங்களும் இனிதுற அளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
இயற்கை உண்மையதாய் இயற்கை இன்பமுமாம்
அயர்ப்புஇலா சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சாக்கிராதீதத் தனிவெளியாய் நிறைவு
ஆக்கிய சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுட்டுதற்கு அரிதாம் சுகாதீத வெளியெனும்
அட்டமேல் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
நவம்தவிர் நிலைகளும் நண்ணும் ஓர்நிலையாய்
அவம் தவிர் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
உபய பக்கங்களும் ஒன்றெனக்காட்டிய
அபயசிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
சேகரமாம்பல சித்தி நிலைக்கெலாம்
ஆகரமாச்சபை அருட்பெருஞ்ஜோதி
மனாதிகட்கு அரிய மதாதீத வெளியாம்
அனாதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஓதிநின்று உணர்ந்து உணர்ந்து உணர்தற்குஅரிதாம்
ஆதிசிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி

வாரமும் அழியாவரமும் தரும் திரு
ஆரமுதாம்சபை அருட்பெருஞ்ஜோதி
இழியாப் பெருநலம் எல்லாம் அளித்தருள்
அழியா சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
கற்பம் பலபல கழியினும் அழிவுரு
அற்புதம் தரும்சபை அருட்பெருஞ்ஜோதி
எனைத்தும் துன்புஇலாஇயல் அளித்து எண்ணிய
அனைத்தும்தரும் சபை அருட்பெருஞ்ஜோதி
பாணிப்புஇலதாய் பரவினோர்க்கு அருள்புரி
ஆணிப் பொன்னம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எம்பலம் எனத்தொழுது ஏத்திநோர்க்கு அருள்புரி
அம்பலத்து ஆடல்செய் அருட்பெருஞ்ஜோதி
தம்பரஞான சிதம்பரம் எனுமோர்
அம்பரத்து ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடம்கொளும் அருட்பெருஜோதி
வாடுதல் நீக்கிய மணிமன்றிடையே
ஆடுதல் வல்ல அருட்பெருஞ்ஜோதி
நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர்
ஆடகப்பொது ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
கற்பனை முழுவதும் கடந்து ஒளிதரும்ஓர்
அற்புத சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஈன்ற நற்றாயினும் இனிய பெருந்தயவு
ஆன்ற சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
இன்புறும் நான் உளத்து எண்ணியாங்கு எண்ணியாங்கு
அன்புறத்தரும் சபை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

பின் இணைப்பு III

# நடராஜர் தத்துவ விளக்கம்



அரன்துடி தோற்றம், அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரன் உற்றணைப்பில் அமரும் திரோதாயி
அரன்அடி என்றும் அனுக்கிரகம் என்னே.

(திருமந்திரம்)

தோற்றம் துடியதனில், தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம், முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(உண்மை விளக்கம்)

## நடராஜரின் நடனம் (Divine Dance)

நடராஜர் என்றால் நடனத்தில் மன்னன் அதாவது தலை சிறந்தவர் என்று பொருள். நடனம் என்றால் கண்டபடி குதிப்பதல்ல. பரத நாட்டியம் என்றால் அதில் ஒரு பாவனை, ராகம், தாளம் முதலிய நயங்கள் பொருந்தியிருக்கின்றன. ஆதலால் நடனத்தில் சந்தமும்

(Rhythm), ஒத்திசைவும் (Harmony), பொலிவும் (Grace) முதலிய அபிநயங்கள் அடங்கியுள்ளன. Dance means a Rhythmical, Harmonious, and graceful movements of body and limbs. அணுத்தொறுங்கரந்தே அசைந்திடும் உயிரே (O' Hidden Life! vibrant in every atom) என்றவிடத்து இந்த இறை அசைவில் ஒரு நியதியும் ஒழுங்கும் (A Law and Order) காண்கின்றோம்.

இந்த சந்த அசைவு (Rhythm), ஒத்திசைவு (Harmony), ஒரு ஒழுங்கான அந்த சந்தம் (Symmetry), வண்ண வண்ண அழகு (Beauty) இவைகளை நாம் பளிங்கு, நவரத்தினம். செடி, கொடி, மரம், இலை, பூ, காய், பிராணிகள், பறவைகள், மனிதர்கள் முதலான எல்லா இயற்கை வர்க்கங்களிலும் (Nature's Kingdoms) காண்கின்றோம். இதுதான் கடவுளின் அதி அற்புத படைப்பாகும். அவன் ஆட பிரபஞ்சம் எல்லாமே (Cosmic Dance) ஆடுகின்றன.

### நடராஜ விக்கிரகம் (Idol)

நடராஜர் உருவமானது கடவுளின் படைத்தல் (சிருஷ்டி), காத்தல் (திதி) அழித்தல் (சங்காரம், மறைத்தல் (திரோதாயி), அருளல் (அனுக்கிரகம்) ஆகிய ஐந்தொழில் பஞ்சகிருத்தியம்) களை குறிக்கும் ஓர் கற்பனை சித்திரமாகும்; அச்சித்திரத்தை ஒரு சிலையாக வடித்துள்ளனர்.

அச்சித்திரத்தில் நடராஜரின் ஒரு திருக்கரம் உடுக்கையை (துடி அல்லது தமரகம்) ஏந்தியும், ஒரு திருக்கரம் அபயாஸ்தமாக உயர்த்தியும், ஒரு திருக்கரத்தில் அக்னியும். ஒரு திருக்கரம் தாழ்த்தி தூக்கிய திருவடியை சுட்டியும்; இரு திருவடிகளில் ஒன்று தூக்கிய பாதமாகவும், மற்றொன்று முயலகன் என்ற அரக்கன் மீது ஊன்றிய பாதமாகவும் சித்தரிக்கப் பெற்றுள்ளன

மற்றும் அவர் புலித்தோலையும், யானை உரித்தோலையும் ஆடைகளாக உடுத்திருப்பதாகவும், அரவங்களை (நல்ல பாம்பு) ஆபரணங்களாக அணிந்திருப்பதாகவும் சித்தரிக்கப் பெற்றுள்ளது. மேலும் அவர் சிரசில் மூன்று அவிழ் சடைகள் விரிந்திருப்பதாயும், அவரைச் சுற்றி ஒரு பிரபை திருவாசி) இருப்பதாகவும் காட்டப் பெற்றிருக்கின்றது.

### மும்மூர்த்திகள் (Trinity)

நடராஜரின் மும்மூர்த்தங்கள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற திரிமூர்த்திகளாகும். பிரம்மா படைத்தல் தொழிலுக்கும், விஷ்ணு காக்கும் தொழிலுக்கும், உருத்திரன் அழிக்கும் தொழிலுக்கும் உரியவராவர். மறைத்தல் அழித்தல் தொழிலிலும், அருளல் காக்கும் தொழிலிலும் அடங்கும். படைக்கும் கடவுளாகிய பிரம்மாவின் சத்தி

கிரியா சக்தியுடன் (Activities) கூடிய சரஸ்வதி; காக்கும் கடவுளாகிய விஷ்ணுவின் சத்தி ஞான சக்தியுடன் (Wisdom) கூடிய இலக்குமி; அழித்தல் கடவுளாகிய உருத்திரனின் சத்தி இச்சா சக்தியுடன் (Will) கூடிய உமாவாகும். பிரம்மா அறிவுடன் கூடிய மனோதத்துவத்தை யும் (Intellectual Mind), விஷ்ணு அன்பும் ஞானமும் (Love and Wisdom) கூடிய புத்தி தத்துவத்தையும், உருத்திரன் ஆன்மதத்து வத்தையும் குறிக்கும். அழித்தல் என்றால் பழைமையை சிதைத்து துரிசு நீக்கி புனருத்தாரணம் செய்தலாம். ஆதலால் வள்ளலார் அழித்தலை துரிசு நீக்குதல், குற்றங்களைதல் என அருளியுள்ளார்.

**சின்னங்கள் (Symbols)**

(1) உடுக்கை: ஒலி செய்யும் உடுக்கை படைத்தல் தொழிலை குறித்து நின்றது. பிரபஞ்ச உற்பத்தியே "ஓம்" என்ற நாத ஒலி யினால் உண்டாயது. அவ்யக்தமான சிவத்திலிருந்து முதன் முதல் தோன்றியது "ஓம்" என்ற சூக்கும ஒலியாகிய நாதம். நாதத்தி லிருந்து ஒளியுடன் கூடிய தூல ஒலியாகிய விந்து தோன்றிற்று. நாதம் ஆண், விந்து பெண்; இவைகளின் சேர்க்கையே சேதனு சேதனமாகிய இப்பிர பஞ்சமாகும். எனவே சிவசத்தி பிரணவ சொரூபம் எனப்படுகின்றது. ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே- அப்பர்.

இலேசான விதைகளை ஒரு கண்ணாடி (glass) யின் மேல் தூவி விட்டு அருகிலிருந்து ஒரு வீணையை மீட்டினால், அதினின்று எழும் பல்வேறு சுரங்களுக்குத் தக்கதான பல்வேறு வடிவங்களாக அவ் விதைகள் அமைகின்றன வென்பதை விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். ஆகவே ஓசையே அணுக்களை வடிவங்களாக வடிக்கின்றதென்பது புலனாகும். மேல்நாட்டு தத்துவ ஞானியாகிய (Plato) வும் கடவுள் சித்தரிக்கின்றார் (God geometrises) எனக் கூறியுள்ளார். படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவின் சத்தியாகிய கிரியா சக்தியோடு கூடிய சரஸ்வதியின் கையில் வீணை இருப்பது இங்கு கூர்ந்து கவனிக் கத்தக்கது. சரஸ்வதி கல்வியின் அதி தேவதை.

(2) உயர்த்திய திருக்கரம்: இந்த அபயாஸ்த திருக்கை காத்தல் தொழிலை குறித்து நின்றது. சிறியோர்கள் பெரியோர்களை வணங்கி நிற்கும்போது அப்பெரியார்கள் தமது வலது கரத்தை உயர்த்தி "செல்வத்துடனும் ஆரோக்கியத்துடனும் நீடூழி வாழ்வாயாக" என்று ஆசிர்வதிப்பதை நாம் பார்க்கின்றோம்.

காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவின் சத்தியாகிய ஞான சக்தியுடன் கூடிய இலக்குமி தம் பக்தர்களுக்கு திருவையும் ஞானத் தையும் கொடுத்தருள்கின்றாள். அதனால்தான் விஷ்ணுவிற்கும் திரு மால் என்ற நாமமும் வழங்கப்படுகின்றது. உலகியலுக்கு பொருட் செல்வம் இன்றியமையாதது போன்று ஆன்மிகத்திற்கு அருட்செல் வம் இன்றியமையாததாகும். அதனாலன்றோ பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவரும்

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள்)

என்று அருளியுள்ளார்.

எனவே திருமால் தம் பக்தர்களுக்கு இம்மை, மறுமை பயன்களை வேண்டியது வேண்டியாங்கு அருளி அனுக்கிரகம் பாலித்து பாது காத்தருள்கின்றார்.

(3) அக்னி: அக்னியை ஏந்திய திருக்கரம் அழித்தல் தொழிலை குறித்து நின்றது. அக்னி எல்லாவற்றையும் சுட்டெரிக்கும் என்பது நமக்குத் தெரியும்.

அழித்தல் தொழிலை செய்யும் உருத்திரனின் சத்தியாகிய இச்சா சக்தியுடன் கூடிய காளி சுடுகாட்டில் நர்த்தனமிடுவதாக புராணங்கள் கூறுகின்றன. உருத்திரன் என்றால் அழித்தலை செய்யும் அகோர மூர்த்தி என்று பொருள்.

அழித்தல் என்றால் பழையனவற்றை அழித்து, தூரிசு நீக்கி, புனருத்தாரணம் செய்வது என்று மேலே பார்த்தோம். கோமயத்தை அக்னி சுட்டெரித்து தூய திரு நீறாக மாற்றுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அதுபோன்று உபயோகமற்ற பழைய உடல் உருவங்களை அழித்து, உயிர் வளர்ச்சிக்குத் தக்க புனருத்தாரணம் செய்யப் பெற்ற புதிய உடல் உருவங்களை அளித்தலாம்.

(4) ஊன்றிய பாதம்: முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலை குறித்து நின்றது. இறைவன் உயிர்கள்மாட்டு வைத்த அன்பினால் விவேகத்துடன் இந்த மறைத்தல் தொழிலை செய்கின்றான். உயிர்கள் தங்கள் சென்ற கால, வருங்கால ஜன்மங்களையும், இறைவனையும் தெரிந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு இந்த மறைத்தல் தொழில் செய்யப்படுகின்றது. அப்படி தெரியவந்தால் உயிர்களுக்கு பல பாதகங்கள் ஏற்படுவது மட்டுமின்றி, அவைகளின் பரிணாம வளர்ச்சியும் பாதிக்கப்படுமாதலால் இந்த மறைப்பு அத்யாவசியமாகிறது. ஆதலால் இந்த மறைப்பு திரோதான சத்தி எனப்படுகின்றது. சிற்சத்தின் ஒருமுனை அருட்சத்தி என்றால் மறுமுனை திரோதான சத்தியாகும். எனவே இந்த மறைத்தல் தொழில் இறைவனின் மறக்கருணை எனப்படுகின்றது. அருளல் தொழில் அரனின் அறக் கருணையாகும்.

5. **நான்றமலர்ப்பதம்:** தூக்கியதிருவடியை சுட்டிக் காட்டும் திருக்கரம் இறைவனின் அருளல் தொழிலை குறித்து நின்றது. அத்திருக்கரம் உயிர்களை பந்த பாசப்படுந் துயரிலிருந்து விடுபட்டு நித்தியானந்தப் பேரின்பப் பெருவாழ்வை அடைய தண்நிழலாம் தன்திருவடிக்கு வரும்படி அழைக்கின்றது. இதைத்தான் முத்தி. மோட்சம், விடுதலை என்பது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல்குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியமின்மையின் அரண்கழல் செலுமே" -மெய்கண்டார்
என்றபடி உயிர்கள் அயரா அன்பின் தண்நிழலாம் அரன்கழல் செலும். இறைவன் திருவடியை அடையும்.

## இதர சின்னங்கள்

1. சிரசிலுள்ள சடாபாரம் மேலிடத்திலிருந்து வரும் சிவ சக்தியை குறித்து நின்றது. மூன்று திரிசடைகள் முத்தொழிலை செய்யும் மும்மூர்த்திகளையும் குறித்து நிற்பது.

2. திருவாட்சி ஹிரண்ய கர்ப்பம் என்ற தங்கமயமான முட்டை வடிவமான தமது அண்டத்தைக் குறியா நின்றது. அதனுள் நின்று தான் நடராஜர் தமது ஆட்சியை செலுத்துகின்றார்.

சிலர் இதை ஓங்கார வடிவான பிரணவம் என்பர். ஓங்காரத் தைப்பற்றி மேலே உடுக்கையில் பார்த்தோம்.

ஓங்காரமே நல்திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்-ஆங்காரம்
அற்றார் அறிவர் அணிஅம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின் — உண்மை விளக்கம்

3. முயலகன் ஆணவமலத்தைக் குறித்து நின்றது. இதில் நான் என்ற அகங்காரமும் எனது என்ற மமகாரமும் அடங்கி யுள்ளது. ஒரு திருவடி முயலகனை மிதித்துக்கொண்டிருக்கின்ற தென்பது நாம் நமது ஆணவ மலத்தை அடக்கவேண்டுமென்பதை குறித்து நின்றது.

4. புலித்தோலாடை கர்ம மலத்தைக் குறித்து நின்றது. நாம் நமது கர்ம மலத்தை வறுத்த விதைபோல் ஆகாமியவினை முளைப்பதி னின்றும் தடுக்க வேண்டும்.

5. யானை உரித்தோல் மாயாமலத்தைக் குறித்து நின்றது. இது நாம் மாயையை (மயக்கத்தை) வெல்லவேண்டுமென்பதைக் காட்டுகின்றது. இறைவன் திருவடியை யடைய இம்மும்மலங்களையும் வெல்லல் வேண்டும்.

6. ஆபரணமாக அணிந்திருக்கும் அரவங்கள் ஆதிசத்தியின் (Fohat) பல்வேறு ஆயிரக்கணக்கான சக்திகளை குறித்து நின்றது. அணிந்திருக்கும் பாம்புகள் நல்லப்பாம்பு, நல்லப்பாம்பு பெண் இனம். பெண்கள் சத்தி வடிவாம்,

7. நடனத்தில் ஒரு திருவடி தூக்கியும் ஒரு திருவடி தரையில் ஊன்றியும் மாறி மாறி நடந்துகொண்டிருக்கும். இது இறைவனின்

உஸ்வாசத்தையும் நிஸ்வாசத்தையுய் (Out-Breathing and In-Breathing) அதாவது பிரபஞ்சம் தோன்றுவதையும் மறைவதையும், பிரம்மாவின் இரவு பகலேயும், கல்பம் பிரளயத்தையும் குறிக்கும். இரண்டு திருவடிகளும் தரையில் அமரும்போது பிரபஞ்சமெல்லாம் இறைவனிடம் ஒடுங்கி சிவன் யோக நித்திரைக்கொள்வன். அதுபோது பஞ்ச கிருத்தியங்கள் நடைபெருது.

நடனத்தில் ஒன்று ஊன நடனமென்றும் மற்ருென்று ஞான நடனமென்றும் இருவகைப்படும். ஊனத்திருநடனம் உயிர்களின் பிரவர்த்தியையும் (Involution) ஞானத்திருநடனம் அவற்றின் நிவர்த்தியையும் (Evolution) குறித்து நின்றது.

## முடிவு

ஒவ்வொரு உயிரின் தாமரை மலர்போன்ற இருதயத்தின் நடுவிலுள்ள சிதாகாசத்தில் இறைவன் நடனமிட்டுக்கொண்டிருக்கின்ருன் என்றும் நாம் அதை தியானிக்கவேண்டுமென்றும் சாத்திரங்கள் கூறுகின்றன.

சநாதன தர்மமாகிய இந்து சமயத்தில் கூறப்படும் விக்கிரகங்கள் (Idols) அநேக மறைபொருட் தத்துவங்களேயும் (Occult Truths) இலட்சியங்களேயும் (Ideals) தன்னுள் அடக்கியுள்ளனவென்று சாத்திரங்கள் கூறுகின்றன.

சைவ சமயத்தில் கற்பனேயால் சித்தரிக்கப் பெற்ற நடராஜர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பிக்ஷாடனர், உமாமகேஸ்வரர், அர்த்தநாரீஸ்வரர், சண்டேஸ்வரர், தக்ஷிணுமூர்த்தி முதலாக இருபத்தைந்து உருவத்திருமேனிகளேயுடைய விக்கிரகங்கள் இருப்பதாக சிவாகமங்கள் கூறுகின்றன. அவ்வாறே வைஷ்ணவ ஆகமங்களிலும் நின்றகோலம், இருந்தகோலம், படுத்தகோலம் முதலாக அநேக உருவத்திருமேனிகளேயுடைய விக்கிரகங்கள் இருப்பதாகக் கூறப்பெற்றுள்ளது.

குணங்குறி ஆறுய் போற்றி–அப்பர், ஆதலால் நாம் குறிகளிலுள்ள குணங்களே விளங்கிக் கொண்டு அவற்றையே இலட்சியமாகக் கொண்டு தியானிக்க வேண்டும்.

## தத்துவங்கள்

சேர்க்கும் துடிசிகரம், சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம், அபயகரம்–பாக்கில் இறைக்கு
அங்கி நகரம், அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மகரமது தான் (உண்மை விளக்கம்)

| | | |
|---|---|---|
| துடி (உடுக்கை) - சி = சிவம் | | இது நிவர்த்தி மார்க்கத்தைக் காட்டும் ஆனந்தத் தாண்டவமாகிய ஞானத்திரு நடனத்தைக் குறிக்கும் சூக்கும பஞ்சாக்ஷரமாகும். |
| வீசியகரம் - வா = அருட்சத்தி | | |
| அபயகரம் - ய = உயிர் | | |
| அக்னிகரம் - ந = திரோதான சத்தி | | |
| ஊன்றியதிருவடி - ம = மாயை & மாயேயம் | | |

ஆகும்படிகேள் நல்அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் – கூடும்
மகரம் உதரம், வளர்தோள் சிகரம்,
பகருமுகம் வாமுடி யப்பார் (உண்மை விளக்கம்)

| | |
|---|---|
| திருவடி - ந | இது ஊனத்திரு நடனத்தைக் குறிக்கும் தூல பஞ்சாக்ஷரமாகும்; இது பிரவர்த்தி மார்க்கத்தைக் குறிக்கின்றது. |
| உதரம் - ம | |
| தோள் - சி | |
| முகம் - வா | |
| முடி - ய | |

சிவத்திலிருந்து நாதமும், நாதத்திலிருந்து விந்துவும் தோன்றிற்று என்று மேலே பார்த்தோம். இந்த விந்துவில் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கு வாக்குகளும், 51 அக்ஷரங்களும், 81 பதங்களும், சப்தகோடி மந்திரங்களும் தோன்றின. இந்த சப்தகோடி மந்திரங்களில் பஞ்சாக்ஷர மந்திரமே தலை சிறந்தது. இந்த பஞ்சாக்ஷரத்தில் தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம் என்று நான்கு வகைப்படும். சிவயவசி என்பது காரணபஞ்சாக்ஷரம்; சிவ என்பது மகாகாரண பஞ்சாக்ஷரம்; நாயோட்டும் மந்திரமாகிய "சி" சிகரமாகும்.

அக்ஷரமென்ருல் அழிவற்றது என்று பொருள். சிவனுக்கு இந்த பஞ்சாக்ஷரமே திருமேனியாக அமைந்துள்ளது.

இத்திருச்சிற்றம்பலத்தின் அவனியின் அந்தரங்க அருளரசின் மந்திராலோசனைக் கூட்டம் அவ்வப்போதைக்கு (Periodically) மைத்திரேய மகரிஷியின் ஆச்சிரமத்தில் நடைபெறுவதாகவும், இந்த மந்திராலோசனைக் கூட்டத்தில் அருளரசாட்சியில் பதவி வகிக்கும் மனுவாதி மகரிஷிகள் கலந்து கொள்கின்றனர் என்றும், அவர்கள் சந்தித்து உலகின் சமயம், கல்வி, கலாச்சாரம், சமூகஇயல், அரசியல் முதலான நிலைமைகளை பரிசீலனை செய்து, உலகம் வாமமார்க்க அதர்மத்தில் போகவிடாமல் தடுத்து நிறுத்தி பரிணும விகாச நியதி (Evolution) க்கான அறநெறியில் திருப்பிவிடுவதற்கான வழிமுறைகளை ஆலோசித்து முடிவு செய்கின்றனர் என்றும்

இந்த மந்திராலோசனை நடைபெறும் மைத்திரேய பகவானின் பூங்காவில் தெற்கு நோக்கி ஒரு சூன்ய சிம்மாசனம் வைக்கப் பெற்றிருப்பதாயும், இந்த சிம்மாசனம் தக்ஷிணாமூர்த்தி பீடம் என்றும், மந்திராலோசனைக் கூட்டம் நடைபெறும் போது தக்ஷிணாமூர்த்தி அருவத்திருமேனியோடு அங்கு பிரசன்னமாகி எழுந்தருளியிருப்பார் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறான மந்திராலோசனைக் கூட்டங்களில் திருவருட் பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளும் கலந்து கொண்டிருக்கின்றார் என்பது அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. வள்ளல் பெருமான் உத்திர ஞான சிதம்பரம் எனப்படும் வடலூரில் தாம் ஸ்தாபித்த சத்தியஞான சபையில் சிற்சபை, பொற்சபை என்ற இரண்டு சபைகளும், தக்ஷிணாமூர்த்தி பீடமாக ஒரு சூன்ய சிம்மாசனமும் அமைத்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

மற்றும் ஆண்டுதோறும் வைகாசி பௌர்ணமி நாளன்று இமய மலைச் சாரலிலுள்ள ஒரு பீடபூமியில் திருச்சிற்றம்பலம் என்ற தெய்வீக ஞானப்பேரவையின் சிறப்புக் கூட்டம் ஒன்று கூடி, அதில் விசேஷ சடங்கு ஒன்று நடைபெறுவதாகவும், இச்சடங்கில் எல்லா மகரிஷிகளும், முனிவர்களும், மகாத்துமாக்களும், தேவர்களும் தங்களது தூல, சூக்கும சரீரங்களுடன் வந்து கலந்து கொள்கின்றனர் என்றும், இச்சடங்கின்போது குமாரக் கடவுளின் வேலாயுதம் மைத்திரேய பகவான் திருக்கரத்தில் வந்து தங்கியிருப்பதாயும், இவ்விழாவின் போது புத்தர் பகவான் தமது நிர்மானகாய சரீரத்துடன் விண்வெளியில் தோன்றி, காட்சியளித்து, உலகை ஆசீர் வதிக்கின்றார் என்றும், சடங்கின் முடிவில் மைத்திரேய பகவான் வேலாயுதத்தை தம் சிரசுக்குமேல் உயர்த்திப் பிடித்து கூட்டத்தையும் உலகையும் ஆசீர்வதித்தப்பின் அதை அங்குள்ள ஒரு பலி பீடத்தின் (Alter) மீது வைக்க வேலாயுதம் மறைந்து விடுவதாயும் பிரம்ம ஞான சங்க நூல்கள் கூறுகின்றன. பிரம்மஞான சங்கத் தலைவர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வதுண்டு.

திருவருட் பிரகாச வள்ளலார் வடலூரில் நிருவிய சத்திய ஞான சபையில் ஆண்டுதோறும் தைப்பூச பௌர்ணமி நாளன்று சபையிலுள்ள ஏழுதிரைகளும் நீக்கப் பெற்று ஜோதி தரிசனம் நடைபெறுவது யாவரும் அறிந்த விடயமாகும். தைப்பூச பௌர்ணமியின் போது கிழக்கு அடிவானத்தில் சூரியனும், மேற்கு அடிவானத்தில் சந்திரனும், நடுவில் ஞானசபையின் ஜோதி (அக்னி) தரிசனமும் ஆகிய முச்சுடர்களும் காட்சியளிக்கும்போது மகரிஷிகளும், தேவர்களும் சூக்கும சரீரத்துடன் அங்கு வந்து குழுமியிருக்கும் கூட்டத்தை ஆசீர்வதிக்கின்றார்கள். அப்போது அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனும் (தக்ஷிணாமூர்த்தி?) அங்கு பிரசன்னமாகியிருக்கின்றார் என்பது வள்ளல் பெருமானின் அருள் வாக்காகும்.

"எங்கே மெய்அன்பர் உளர் அங்கே நலம்தர
எழுந்தருளும் வண்மைப் பதம்" (திருவடிப்புகழ்ச்சி)

அவரது வசனபாகத்திலும் இது குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. விரிவை ஆசிரியரால் வெளிவரயிருக்கும் "வள்ளலாரும் பிரம்மஞான சங்கமும்" என்ற நூலில் காண்கவும்

திருச்சிற்றம்பலம்

இராமலிங்காய நம:

## திருப்புகழ்

அதலசேடனுர் ஆட, அகிலமேருமீதாட
அபினகாளிதான்ஆட – அவளோடன்று
அதிரவீசி வாதாடும் விடையில் ஏறுவார் ஆட
அருகுபூத வேதாளம் – அவையாட
மதுரவாணி தான்ஆட, மலரில் வேதனுர் ஆட
மருவு வானுளோர் ஆட – மதியாட
வனச மாமியார் ஆட, நெடிய மாமனுர் ஆட
மயிலும்ஆடி நீயாடி – வரவேணும்.

– அருணகிரிநாதர்.

## குமாரக்கடவுளின் தோற்றம்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும், பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

(அப்பர்)

**பசித்திரு — தனித்திரு — விழித்திரு**

ஓம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பின் இணைப்பு – IV



# திருவருட் பிரகாச வள்ளலார்
# சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்
# அருளிய
# ஸ்ரீ சுப்பிரமணியர் தத்துவ விளக்கம்

சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந் திகழ்கடம்பந்
தார்கொண்ட பன்னிருதோள்களுந் தாமரைத் தாள்களுமோர்
கூர்கொண்ட வேலு மயிலுநற் கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத்தணிகாசலமும் என் கண்ணுற்றதே.

**சுப்பிரமணியம் என்பது என்ன:** நமது புருவமத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி யிருக்கின்றது. (ஆஞ்ஞாசக்கரம்–Pineal Gland). இந்த ஜோதி மணியை ஷண்முகம்என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இஃதன்றி நமது மூலாதாரத்திற்கு மேல், மூன்றிடந்தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடியிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள், இந்தத் தேகத்திலுள்ள ஆறு அறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்தவிவேக மென்பதையும் ஷண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம்.

**முகம் ஆறு என்பது:** ஆறு ஜோதியாயும், ஆறு அறிவாயும், ஆறு தலையுடையதாயும் இருப்பதால் முகம் ஆறு.

கால் இரண்டு என்பது: தோன்றும் அறிவு, தோற்றுவிக்கும் அறிவு என்னும் இரண்டு அறிவாகிய விஷய உணர்ச்சியும், நிர்விஷய உணர்ச்சியுமேயாம்.

கை பன்னிரண்டு என்பது: ஆறு ஆதாரங்களிலுள்ள பிரகாச-அப்பிரகாசமாகிய பன்னிரண்டுமாம்.

தசாயுதம் அபயவரத மென்பவை யாவெனில்: (1) வச்சிரம் என்பது - தீக்ஷண்ணிய உணர்ச்சி, (2) வேல் என்பது-சத்தி; (3) அருள் என்பது-அறிவு (4) மணி என்பது - ஆன்ம விளக்கமாகிய நாதம்; (5) த்வஜ மென்பது-புகழாகிய கீர்த்தி; (6) ஸரஸிஜம் என்பது - தயவு; (7) குக்குடம் என்பது - மாச்சாரிய மில்லாத நிறைவு; (8) பராகம் என்பது - பாச நீக்கம்; (9) தண்டம் என்பது - வைராக்கிய அறிவு; (10) பாணம் என்பது - அன்பு; (11) அபயம் என்பது-சமாதான உணர்ச்சி; (12) வாதம் என்பது-நிராபரமாகிய ஆதரவு என்னுஞ் சகிப்பு.

கடப்பமாலே என்பது: சர்வ தத்துவ கண்டனம்.

மயில் என்பது: பல வர்ணமுள்ளதும், விசித்திர வடிவமானதும்' மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும், மாயைக்கு இருப்பிடமாயுள்ளதுமான மூலப்பிரகிருதியே மயில். மயிலின் மேல் சுவாமி ஏறிக்கொண்டிருத்தல் முதலியவற்றிற்குக் காரணம் என்னவென்ருல்;

பிண்டாண்டமாகிய இந்தத் தேகத்திலும் அண்டத்திலும், மூல அஞ்ஞான காரணமாயுள்ள கேவலமாகிய பிரகிருதி, மாயையின் அசுத்த கேவலமாகிய அசுத்தா சுத்த மகா அகங்காரம் என்னும் இராக்ஷச அம்சமான சூரதத்துவம், அதின் சோதரமான மூவகைத் தத்துவத்தோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும் பிண்ட விளக்கமான தேவர்களையும், விஷய விளக்கமான இந்திரியங்களையும், நாடி விளக்கமான யந்திரங்களையும், பிராண விளக்கமான உயிரையும் விழுங்கித்தன்னரசு செலுத்தும் அந்தச் சூரதத்துவத்தை வதைக்கும் போது, ஷி தத்துவம் மகா மாயையாகிய மாமரமாயும். மாச்சரியமாகிய கோழியாயும், விசித்திர மாயையென்னும் மயிலாயும், மகாமதமாகிய யானை முகமாயும், அதிகுரோதமாகிய சிங்கமுகமாயும் விளங்கும்.

சர்வ தத்துவங்களையும் தன் வசமாக்கி, அகங்காரக் கொடிகட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி, பசு, பாசம், அநாதி, நித்தியம், என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டுவதற்காக, மாச்சரிய குக்குடத்தைப் போதமாகிய கையால் அடக்கியும், விசித்திர மாயையாகிய மயிலைக் கீழ்ப்படுத்திமேலிருந்தடக்கியும், ஆபாச தத்துவங்களைச் சம்மரித்தும், சுத்த விஷய புவன

மாகிய தேவலோகத்தை நிலைபெறச் செய்தும், இந்திரபதியான தேவேந்திரனுடைய பெண்ணாகிய தாந்தர தத்துவமென்னுந்தெய்வ யானையை இடப்பாலமைத்தும், இந்திரியங்களாகிய வேடர்களின் கண்ணிற் புலப்பட்ட மானசமென்னும் மானினது கர்ப்பத்திலுண் டான வள்ளியாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும், நவதத்துவ காரணமாகிய நவ வைராக தத்துவமாகிய வீரர்களைச் சமீபத்தில் இருத்தியும், சகல கேவலங்களுக்கும் நினைப்பு மறப்புக்கும் இடையில் விவேக வடிவாயும், பாதமுதல் நாபி வரையில் உஷ்ண உருவாயும், நாபி முதல் கண்டம் வரையில் ஆதார நாடி உருவாயும், கண்ட முதல் புருவமத்தி வரையில் மணி உருவாயும், உச்சியில் ஒளி உரு வாயும், புத்தியில் சுத்த அறிவாயும், அனுபவத்தில் நித்தியமாயும், எங்கும் நிறைவாயும். கோணத்தில் ஆறும், எக்காலமும் மதங்களில் ஆறும், சமயத்தில் ஆறும், ஜாதியில் ஆறின் கூட்டமாயும் விளங்கு கின்ற உண்மைக் கடவுளே சுப்பிரமணியம்.

**சுப்பிரமணியம் ஒரு முகம், மூன்று முகம், நான்கு முகம், ஆறுமுகம் ஆனதற்குக் காரணம் :** ஒன்றும் இரண்டும் அல்லாத ஒப்பற்ற பரப் பிரம சொரூபம் நம் பொருட்டுக் குழூஉக்குறியால் பாவனைக்கு ஒன் றென்று நிச்சயிக்கும் பரகாரண நிமித்தமாகிய அறிவுருவமே ஒரு முகமென்று ஞானிகள் சொல்லுவார்கள், சுத்தராஜசம், சுத்த தாமசம் சுத்த சாத்வீகமாகிய மூன்று குணங்களின் கூட்ட விளக்கமாகிய முக் குண விளக்கமே மூன்று முகம், பசு மனம், சுத்த மனம், உன் மனம், சங்கலித மனம் என்னும் நான்கு தத்துவங்களின் கூட்ட விளக்கமே நான்கு முகம், சத்த அறிவின் மூலம், ஒளி அறிவின் மூலம், சுவை அறிவின் மூலம், பரிச அறிவின் மூலம், வாசனை அறிவின் மூலம், ஆத்ம அறிவின் மூலம், என்னும் ஆறு தத்துவங்களின் கூட்டறிவின் மூலகாரணப் பிரகாச விளக்கமே ஆறுமுகம்.

**மயிலின் காலின் கீழும் வாயிலும் பாம்பு இருப்பதென்ன :** விசித்திர மாயையின் காரிய உருவமான அகங்காரம் தோன்றி வெளிப்படுங் கால், மூல ஆங்காரத்திலும், அதிகரிப்பிலும் பிராணவாயு என்னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயினும், அகங்காரத்தின் முகப் பாகிய மயில் வாய் மூலமாய்ப் பிராணவாயுவினது வேகத்தை அது விழுங்கிக் கொண்டிருப்பது இயற்கை தான்.

**படைவீடென்பதென்ன :** அடங்கி இருக்குமிடம், அடங்கி யிருக்கும் ஸ்தானங்களே இயற்கை விளக்கம் தங்கு மிடங்களாகும்.

**இவற்றிற்கு ஊர் (6) ஆவானேன் :**

1. ஏரகமென்பது – அழகு பொருந்திய உள்ளம் என்னும் இடம்.
2. திரு ஆவினன்குடி யென்பது – திரு – ஆ – இனன் – குடி, திரு – இலக்குமியாகிய சந்தோஷமும், ஆ – பசுவாகிய விளக்க

மென்னுஞ் ஜீவனும், இனன் – சூரியனுகிய புத்தியும் ஒன்றுகூடி விளங்கும் ஆன்ம அறிவின் சுத்த காரிய இடம்.

3. பழமுதிர்சோலே யென்பது – இந்திரிய – கரண – ஜீவமுதலிய அனுபவப் பழங்களாகிய பிரயோசன இன்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம்.

4. திருச்சீரலேவாய், திருச்செந்தில், செயந்திபுரம் என்பன: சுத்த மனத்தின் முகத்தில் விஷயக்கடலின் அவாவாகிய அலேயடித்துக் கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களினது இருதய ஸ்தானமாகிய மனம், அஞ்ஞான சூரனே நிவர்த்தித்துச் சந்தோ ஷகரத்தைப் பெற்ற பதிமனத்தின் விளக்கம்.

5. திருப்பரங்குன்றமென்பது – அசைதலில்லாத ஒன்ருன விளக் கத்தை யுடைய விவேக உல்லாச இன்ப நிறைவு.

6. குன்றுதோருடல் என்பது – மலேதோருடல், மலே என்பது அளவில்லாத உணர்ச்சிக்கு முதற் காரணமாயுள்ள துரிய நன்னிலே. இத்துரியம் :

| | |
|---|---|
| (1) ஜீவதுரியம் | (4) குருதுரியம் |
| (2) பரதுரியம் | (5) சிவதுரியம் |
| (3) சுத்ததுரியம் | (6) சத்திதுரியம் |

முதலிய துரியமலேகள் அனுபவக் காட்சியில் அனந்தம் உண்டு. மேற்குறித்த அனுபவக் காட்சிகளுக்குத் தேகத்திலிடம்,

| | |
|---|---|
| (1) கோசத்தினடி | (4) வயிற்றில் தொப்புளுக்கு மேல் மார்புக்குக் கீழ் |
| (2) தொப்புளின் கீழ் | (5) மார்பு |
| (3) தொப்புள் | (6) நெஞ்சு |

ஆக ஆறு.

பிரமாவைச் சிறையில் வைத்ததென்பது யாது: சுத்தமன சங்கல்ப சிருஷ்டித் தொழிலேயுடைய பிரம்மாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்க வொட்டாமல், சுத்த விளக்க விவேக நிறைவாயுள்ள சுப்பிரமணிய தத்துவத்தால் சர்வ பிண்ட விஷயங்களாகிய

| | |
|---|---|
| (1) தோன்றல் | (4) ஒன்றினிடத்தில் மலே வடைதல் |
| (2) வளர்தல் | |
| (3) குற்றம் நீங்கல் | (5) தெளிதல் |

முதலிய பஞ்ச கிருத்தியங்களே விவேக முன்னிலேயில் நடத்துங்கால் சலிப்பறப் பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

ஈசுவரனுக்கு உபதேசித்த தென்ன: உருத்திர தத்துவமாகிய பிரேரக நிலையான காரண தத்துவ முடிவான ஈசுவர தத்துவத்தின் இயற்கைஞானம் ஏறிக் – கிரியை குறைந்திருப்பதால், கிரியா காரண பூதமாயும், ஞான காரண அமிசமாயும் விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியையற்ற நிர் விஷய அனுபவம் ஈசுவர தத்துவத்திற்கு நியதி செய்வது சுத்த விவேக தத்துவ அதிஷ்டா தாவான சுப்பிரமணியம் அன்றித் தோன்ருது. இதுபற்றி உப தேசம் செய்தா ரெனலாயிற்று.

கங்கையிலுள்ள நாணற்காட்டில் பிறந்தது என்பது என்ன: ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவே கங்கை, ஆன்மாவின் அனுபவ மத்திய நிலையாகிய சகித்தலென்னும் சர்வ விஷயங்களிலும் அகங்காரமென் னும் தலை யெடாமல்-கீழ்ப்படிந்த குணமே நாணல், இவ்விரண்டின் மத்தியில், அனுபவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத் தறிவாகிய விவேகம் தோன்றுவதே உற்பத்தியானது.

பின் கார்த்திகை அரிவை பால்கொடுத்தது என்பதென்ன: விவேக விளக்கந் தோன்றுங்கால் பெண்பாலின் குணமாகிய சமனையென் னும் சத்தியின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத கிரணம் விவேகத் திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல்.

சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க, அம்மை குழந்தை ஆறையும் ஒன்ருய்ச் சேர்த்துக் கையால் தடவ, முகம் ஆறும் ஒன்றி வேருயும், உடல் ஒன்ருயும், கால் இரண்டாயும் ஆன தென்ன:

பரமாத்மா வாகிய சுவாமி அருள் என்னும் சத்தியுடன் தயவு என்னும் நதிக்கரையில், சகிப்பு என்னும் நாணற் காட்டில், சமாதி முதலிய காலத்தில் தோன்றி விளங்கும்போது, சுத்த வாசனு தோற்ற மாகிய அறுபொறியாகிய குழந்தையை அருள் வசமாக்க அருட்சக்தி விகாரமன்றி அவிகாரமாய் அறுபொறியையும் அருட்போதக் கையால் அடக்க, விஷயங்களை அறிந்து தோயாமலிருக்க அறுபொறிகள் ஒன் ருயும், குறி ஆருயும், அனுபவ விளக்கம் சாதன விளக்கம் இரண்டும் திருவடியாயும் தோன்றி சமாதி நிலை விளங்குவதே.

பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க, அண்டத்தில் இவற்றிற்கு ஊர், ஆலயம் மூர்த்தி செய்கை முதலியன உண்டாவானேன்: ஆன் மாக்கள் புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு, மந்தம், மந்த தரம், ராஜசம், தாமசம், கருமம் முதலிய வேறுபாடுகளால் அனுதி தொடங்கி இன்றளவில் உயிர்த்திரள் ஒன்ருலும் கரணக் கூட்டுற வால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றன; ஆதலால் மாகருணை யுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளை அங் கையிற் கனி யென உணர்ந்த அனுதி, நித்திய, முத்த சித்தராகிய ஈசுவர தத்துவ புவனனுபவ ஈசுவரனுல் நாம் உய்யும் பொருட்டு உலகத்தின்கண் (1) பாசநூல் (2) பசுநூல் (3) பதிநூல் (4) அனுபவ

நூல் என்னும் (1) புராண (2) வேத (3) ஆகம (4) உபநிஷத்துக்கள் உண்டு பண்ணப்பட்டிருக்கின்றன. அவற்றின் வாயிலாகக் கர்ம காண்டம், பத்திகாண்டம், உபாசனு காண்டம், தந்திர கலே, மந்திர கலே, உபதேச கலே முதலிய பேதங்களும் இவற்றிற்கு முக்கியமான ஆசாரம், வருணம், ஆசிரமம் முதலியவைகளும் இவற்றிற்கு ஏதுவான சரியையாதி நான்கும், இவற்றிற்கு அடைவாகிய சாலோகாதி நான்கும், இவற்றிற்கு மார்க்கமாகிய தத்துவம், புவனம், பதம், வர்ணம், மந்திரம், கலே முதலியனவும் நிர்ணயித்து, பாப நாசத்திற்கு ஏதுவான அனசன சாந்திராயண முதலிய பிராயசித்தங்களே விதித்து, இவைகள் செய்வதற்கு யோக்கியமான நதி முதலியவற்றையும் அவற்றிற்கு அங்கமான தத்துவானுபவங்களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க திருப்பெயர் முதலியவைகளே, மூர்த்தி, தல முதலியவைகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்.

உபாசிக்கின்றவர்களுக்குத் தத்துவ நாமங் கெடாமல் அருட் சக்தி தோன்றக் கிருத்திகையையும், வேதாந்த விளக்கத்திற்கு விசாகத்தையும், சதா சுபத்தைக் குறிக்கச் செவ்வாயையும், ஆறு குறியைக் குறிக்கச் சஷ்டியையும், ஞான நிறைவைக் குறிக்கத் தைப்பூசத்தையும் சூட்டினுர்கள். தத்துவங்களேக் கையிலெடுத்து ஆடுவதான போத மென்னும் கையால், விஷய பலத்தைத் தத்துவமாகிய காவடியில் கட்டித், தானுகிய தோளில் ஏற்றி தான் கெட்டு தான் அவனுகி, போத வடிவனுய், சங்கல்ப தீவிரனுய் சுப்பிரமணிய தத்துவமாய் விளங்கும், திருவுருவம் முன்னுக்கு விஷயாபாவ நியாயமே காவடி யெடுத்ததாயும், சுத்த வைராக்கிய நிச்சய சிவபோதமே இடும்பனுயும் குறிக்கப் பட்டிருக்கின றன. இருதயாகாச ஷட்கோண வடிவமே யந்திரமாய் அதின் அங்க வேறுபாடே நாற்பத்து முக்கோணமாய், உபாங்கமே நவகண்டமாய் உண்மையே – ச – கரமாய் – விஷய நீக்கமே – ர – கரமாய், நித்திய திருப்தியே வ – கரமாய் – நிர்விஷயமே – ண – கரமாய்–பாப நீக்க ஏதுவே – ப - கரமாய் ஆன்ம இயற்கைக் குணமே, வ – கரமாய் விளங்குவதே ஆறெழுத்து. நமது சரீர இருதய ஸ்தானமே – கோயிலாய், மாயா வ்சித்திரமே – மயிலாய், நாபியந்தமே – பலி பீடமாய், உண்ணுவின் மேலந்தமே – கொடிமரமாய், பஞ்ச கோசங்களே – பிராகாரமாய், முக்குணங்களே – வில்வ மரமாய், ஆன்மதயை‍யே – தடாகமாய், வாயே – வாசலாய், அனுபவ நிலேயே - கோபுரமாய் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஞானிகள் கடவுளே எங்கும் உபாசிப்பார்களென்றும், யோகிகள் இருதயத்தில் உபாசிப்பார் களென்றும், கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்களென்றும், பத்தி காண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்களென்றும் விதித்திருக்கிறது,

அதற்கு ஒத்தவண்ணம், தத்துவ விசாரத்தையே ஆலயமாக்கினுர்கள். ஆலயத்தில் விளங்கும் மூர்த்தியின்பால் – பாசங்களில் செல்லும் ஆன்மாக்களே சிவபாசததில் பாச நூலேக்கொண்டு

அழுந்தி, பசு நூலைக்கொண்டுமேல் குறித்த தந்திர மந்திர கலைகளைக் குரு மூலமாய் உபதேச கலையால் விளக்கி, காண்டத்திரயத்தால் நிலைக்கப் பண்ணி, பதி நூலால் அறிவை விளக்கி, அனுபவ நூலால் சமாதியைத் தெரிவித்திருக்கிறது. இவற்றைச் சீவர்கள் மறவாதிருக்க மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல், ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப் பெருமானைத் தத்துவ உருவமென்று விளக்கிக் காட்ட அர்ச்சகவுருவமான ஆசாரியன், நமது அறிவாகிய கற்பூரத்தில், சுப்பிரமணிய உண்மையாகிய விளக்கமென்னும் பிரகாசத்தைக் கொண்டு, அசுத்த விஷயம் முதலிய எண்ணங்கள் நம்முடைய பொறிகட்குப் புலப்படாமலிருக்க உண்மை நாதக் குறியாகிய மணியொலியுடனே தரிசிப்பிக்கச் செய்தும், வேறு பராக்கன்றித் ததாகாரமாய் நிற்க, நமது தரத்திற்கொத்த உபசாராதியர்களால் வழிபடச் செய்தும் – தத்பலமடைய உத்தமர்கட்கு அன்ன வினியோகம் செய்வது மார்க்கமென்று சித்தாந்தம் பண்ணினுர்கள்.

இவ்வண்ணமாய் அனுதி தொட்டு இன்று வரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார், குமரகுருபரர், நக்கீரர் முதலிய மகான்கள் தொண்டு செய்து உத்தம ஞானிகளாய் நித்திய முத்தர்களாய் விளங்குகின்ருர்கள். ஆதலால் நாம் யாவரும் அவ் வுண்மைக் கடவுளை வேதாகம விதிப்படி உண்மையாய்ப் பத்தி செய்து, அவர் அருளைப் பெறவேண்டும்.

**சூரபத்ம சம்ஹாரம் என்பது:** பதுமாசுரன் என்பது. பதுமம் – நாபி, அ – அவா. சுரன் – சுழித்து எழுதல், நாபியினிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும், தடை படாதது பத்மாசுரனுகிய அவா; கஜமுகம் என்பது – மதம்; சிங்கமுகம் என்பது – மோகம்; இவைகளை வெல்வது – ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலும் கூடாது ஆதலால், சிவத்தால் தடைபட்டது.

**சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படியெனில்:** பஞ்சசத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட்சத்தியையுங் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறு அறிவென்னும் முகங்களோடு, சுத்த ஞானம், சுத்தக் கிரியை என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்தியவேல் என்னும் விவேகத்தால், தயா வடிவாய் அவர் மோக மதங்களை நாசஞ்செய்வது சூரசம்மாரம். மயில் என்பது மேற்படி தத்துவங்கள் நஷ்டமானுலும் அவற்றின் அக்கிரமம் அதிக்கிரமம், கெட்டுக் கிரம மாத்திரம் இருப்பது, பூர்வ வாசனுதிகள் பல வண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால் அவற்றை அசைய வொட்டாது மத்தியில் ஏறி இருப்பதாகிய சுத்த அறிவே – ஷண்முகம், விகல்ப ஜாலமே மயில், இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும் நமது புருவமத்தியில் – ஆறு பட்டையாய் – மணி போல் ஓர் ஜோதி யிருக்கிறது, அந்த ஜோதியே ஷண்முகம்.

திருச்சிற்றம்பலம்

APPENDIX – V



## EXTRACTS FROM " MAN : WHENCE, HOW & WHITHER AND THE MASTERS AND THE PATH

### Sanat Kumar, the King & Lord of our World

Our world is governed by a spiritual KING – One of the Lords of the Flame who came long ago from venus. He is called by the Hindus " Sanat Kumara " the Eternal Youth of sixteen summers also known as the Lord of the world and the supreme Ruler. He represents the Logos (Iswara) as far as this world is concerned and directs the whole of its evolution not only of humanity but also the evolution of Devas, the nature spirits and all other creatures connected with the earth. In His hand and within His actual aura lies the whole of His planet.

Those who have met Him face to face speak of Him as in appearance a handsome youth, dignified. benignant beyond all description, yet with a mien of omniscient, inscrutable majesty, conveying such a sense of resistless power that some have found themselves unable to bear His gaze, and have vailed their faces in awe. Thus did the founder of the Theosophical Society Madam Blavatsky.

During each world–period, we are told. there are three successive Lords of the world, and the present holder of the office is already the third. He resides with His three pupils (Sanaka, Sanandana and Sanadhana) in an oasis in the Gobi desert called Shamballa, often spoken as the Sacred Island, in remembrance of the time when it was an Island in the Central Asian Sea. These four greatest of the Adepts are often called " The Children of the Fire-Mist. "

Their bodies though human in appearance, differ widely from ours in constitution since they are artificial and their particles do not change as do those of the human frame. They require no nourishment, and remain unchanged through thousands of years.

The Present Third Lord of the world, after having fulfilled His duty, hands over his charge to one of his three deciples, takes another initiation (10th initiation) entirely outside of our world and its Hierarchy, and attains the level of the Silent Watcher.

### ROD of Power of the King

This Wonderful sceptre symbolises in some way a physical centre or fulcrum for the forces poured forth by the Logos and was magnetized by Him millions of years ago, when first he set the human Life–wave in motion round our globes. We are told that it is the physical sign of the concentration of the attention of the Logos and that it is carried from planet to planet as that attention shifts–that where it is, that is for moment the central theatre of evolution, and that when it leaves this planet for the next, our earth will sink into comparative inertia. It is kept usually in the custody of the Lord of the World at Shamballa. It is a round bar of the lost metal Orichalcum, perhaps two feet in length and about two inches in diameter, having at each end a huge diamond shaped into a ball with a cone projecting from it. It has the strange appearance of being always surrounded by fire of having an aura of brilliant yet transparent flame. (in Hinduism this ROD is called VEL).

### THE COMING OF THE LORDS OF THE FLAME

The great Lemurian Polar Star was still perfect, and the huge Crescent still stretched along the equator, including Madagascar. The sea which occupied what is now the Gobi Desert still broke against the rocky barriers of the northern Himalayan slopes, and all was being prepared for the most dramatic moment in the History of the Earth – the Coming of LORDS OF THE FLAME.

A great astrological event, when a very special collocation of planets occurred and the magnetic condition of the Earth was the most favourable possible, was chosen as the time. It was about six and a half million years ago. Nothing more remained to be done, save what only They could do.

Then, with the mighty roar of swift descent from incalculable heights, surrounded by blazing masses of fire which filled the sky with shooting tongues of flame, flashed through the aerial spaces the chariot

of the Sons of the Fire, the Lords of the Flame from Venus; it halted, hovering over the 'White Island' which lay smiling in the bosom of the Gobi Sea; green was it, and radiant with masses of fragrant many coloured blossoms, Earth offering her best and fairest to welcome her coming king. There He stood. "the Youth of sixteen summers", SANAT KUMARA, the "Eternal Virgin-Youth", the New Ruler of Earth, come to His Kingdom, His pupils, the three Kumaras with Him: His Helpers around Him; thirty mighty Beings were there, great beyond Earth's reckoning, though in graded order, clothed in the glorious bodies They had created by Kriyashakti, the first occult Hierarchy, branches of the one spreading Banyan – Tree, the nursery of future Adepts, the centre of all occult life. Their dwelling place was and is the imperishable Sacred Land, on which ever shines down the Blazing Star, the symbol of Earth's Monarch, the Changeless Pole round which the life of our Earth is ever spinning.

— Annie Besant & Leadbeater

---

OM - May the MAHA RISHIS, Great Teachers, Guides and Guardians of humanity give us their protection, Illumine our studies and help us to spread their message - the message of Divine - Wisdom, love and unity of life. Let us dedicate ourselves to their service and let their will be done in all our thoughts, words and deeds. OM.

May the Eternal Wisdom illumine our minds,
May the Spirit of Truth purify our hearts,
May the Great Law guide all our words and deeds.

From the unreal lead me to the Real
From darkness lead me to the light
From death lead me to Immortality.

வாழிஎன் ஆண்டவன் வாழிஎங் கோன்அருள் வாய்மைஎன்றும்
வாழிஎம் மாண்புகழ் வாழிஎன் நாதன் மலர்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழிஇவ் வையமும் வானமும் மற்றவும் வாழியவே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# சிற்சபையும் பொற்சபையும்

## மனுவின் மானிட வர்க்கங்களின் அட்டவணை.

| நெம். | துவீபம் | எவ்விடம் | வர்க்கம் | திணை ஆண்-பெண் | பிரஜா உற்பத்தி வகை | மனுஷ உயரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிரௌஞ்ச துவீபம் | வடதுருவம் | ஆகாய தத்துவ உடல் | ஆண் பெண் வித்தியாசமில்லை | ஒரு பாகம் பிளந்து வேறு உடல் ஆகுதல். | சுமார் 175 அடி |
| 2 | குசதுவீபம் | ஷை | ஷை | ஷை | வியர்வையினால் உற்பத்தி | 120 அடி |
| 3 | சால்மாவி துவீபம் | லெமூரியா பசுபிக் சமுத்திர இடம் | நீக்ரோயர் இரணியகசிபு இரணியாக்ஷதன் | முற்பகுதி: அர்த்தநாரி பிற்பகுதி: ஆண், பெண் | அண்டஜம் தாய்கர்ப்பம் | 60 அடி |
| 4 | பிளக்ஷ துவீபம் | அட்லாண்டிக் சமுத்திரம் இடம் | மங்கோலியர் ராவணன் ராக்ஷதர்கள் | ஆண், பெண் | தாய்கர்ப்பம் | 20 அடி |
| 5 | ஐம்பு துவீபம் | தற்காலபூமி | ஆரியவர்க்கம் | ஷை | ஷை | 6 அடி |
| 6 | சகதுவீபம் | இனி உற்பத்தியாக வேண்டியது. | | | | |
| 7 | புஷ்கரதுவீபம் | | | | | |

## திருச்சிற்றம்பலம் — பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 2 | பெருட்கள் | பொருட்கள் |
| 12 | 1 | இரைவன் | இறைவன் |
| ,, | 32 | வருவாக | வருவதாக |
| 31 | 1 | உபாமானம் | உபமானம் |
| 16 | 16 | வயக்த | வியக்த |
| 17 | 39 | தெவர் | தேவர் |
| 19 | 3 | என்னுல் | என்ருல் |
| ,, | 28 | ஞானிகட்டு | ஞானிகட்கு |
| 22 | 17 | மூகலான | முதலான |
| 24 | 3 | சரணவத்தின் | சரவணத்தின் |
| ,, | 4 | ஒன்றிலுன்ள | ஒன்றிலுள்ள |
| 25 | 31 | அந்தரங் | அந்தரங்க |
| ,, | 32 | துணயாக | துணையாக |
| 26 | 37 | ஆதரமாம் | ஆதாரமாம் |
| 27 | 30 | அந்தரங் | அந்தரங்க |
| 33 | 7 | காண்கினேரும் | காண்கின்ரேும் |
| ,, | 36 | அந்தந்தந்துறை | அந்தந்தத்துறை |
| 35 | 31 | அப்ரிக்கர் | ஆப்ரிக்கர் |
| 43 | 14 | அறறெறிகளே | அறநெறிகளே |
| ,, | 28 | ஊணக்கண் | ஊனக்கண் |
| 51 | 16 | குண வ்களே | குணங்களே |
| 55 | 10 | சக்ரவத்தி | சக்ரவர்த்தி |
| ,, | 17 | மனுவகை | மனுவாக |
| 56 | 6 | அவதரிந்து | அவதரித்து |

ருச்சிற்றம்பலம்

உ

ஆசிரியரால் வெளியிடப்பெற்ற நூல்கள் :

1. பாவையெம்பாவையும் பள்ளியெழுச்சியும்
2. சிவஞானபோதம் மறைபொருள் விளக்கம்
3. சின்முத்திரையின் மறைபொருள் தத்துவ விளக்கம்
4. திருச்சிற்றம்பலம் என்ற சிற்சபையும் பொற்சபையும்
5. வள்ளலாரும் வேதாந்தமும்





தக்ஷிணாமூர்த்தி

ஆசிரியர் வெளியிடயிருக்கும் நூல்கள் :

1. வள்ளலாரும் பிரம்மஞான சங்கமும்
2. வள்ளலாரும் சித்தாந்தமும்
3. ஞானசாதனங்களும் தீட்சாப் படிகளும்
4. தேகம்தேகி அல்லது உயிர்மெய் உபாதிகள்
5. விஞ்ஞான மெய்ஞ்ஞான ஒளியில் கந்தபுராணம்

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2. போன் : 25416.